குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 14] மன்மத ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—55 [இதழ் 12

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

உட்பொருள்

			பக்கம்
1.	ஆற்றல் (அஷ்டலக்ஷ்மீ)	...	i-ii
2.	உண்மை விளக்கம்	...	1
3.	முப்பொருள் விளக்கம்	...	8
4.	பூலோக விமர்சனம்	...	13
5.	கண்ணகி	...	15
6.	எட்டு	...	21
7.	சேக்கிழார் கண்ட இசைத்தமிழ் (5)	...	24
8.	தமிழரே முதலோர் தமிழே முதன்மொழி	...	28
9.	புத்தூர் ஆண்டான் கோயில்	...	38
10.	அறம் செய விரும்பு	...	40
11.	பெண்ணின் பெருமை	...	42
12.	சமையலும் ஒரு கலையே	...	50
13.	அழிவின் முடிவிலே அன்பு மலர்கிறது	...	54
14.	வலம் வந்தார்கள்	...	58
15.	அறிவும் அருளும்	...	63
16.	எடுக்க எடுக்கக் குறையாதது	...	66
17.	மாசில் வீணை	...	68
18.	வருங்காலம்	...	75
19.	ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்		78
20.	மதிப்புரைகள்	...	7, 86

அட்டைப்பட விளக்கம்

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் இராமே சுவரயாத்திரைக்கு எழுந்தருளியபோது தனுஷ்கோடியில் கடலாடித் தியானத்தில் இருத்தல்.

நிழல் படங்கள் :- தருமபுரம், திரு. எம். மீனாட்சிசுந்தரம்.

தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்தில்



சிதம்பரம் ஸ்ரீ அம்பலத்தாடி மடத்தின் தலைவர் சிவஸ்ரீ. திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்கள், மாணிக்கவாசக சுவாமிகள் எழுதியருளிய திருவாசக ஏட்டை வழிபடுதல்.

தருமை ஆதீன மடாலயத்தில்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் சிதம்பரம் ஸ்ரீ அம்பலத்தாடி
மடத்துத் தலைவர் அவர்களும்

தருமபுர ஆதீனம் மகாலக்ஷ்மி துர்க்கா தேவி ஆலயத்தில்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களும்,
இளவரசு, வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும்
சண்டியக்ஞ பூரணாகுதி தீபாராதனை தெரிசனம் செய்தல்.



ஸ்ரீசக்ரம்

பிந்து த்ரிகோண வஸுகோண தசார யுக்ம
மன்வச்ர நாகதல ஸம்யுத ஷோடசாரம் ।
வ்ருத்த த்ரயம் ச தரணீ ஸதன த்ரயம் ச
ஸ்ரீசக்ர மேத துதிதம் பர தேவதாயா: ॥

914.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 14 } மன்மத௵ ஐப்பசிமீ 10—11—55 { இதழ் 12

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

ஆற்றல்

ஒரேநீர் கடலில்—ஆற்றில்—மடுவில்—குளத்தில்—கிணற்றில்—பிற இடங்களில் இருப்பினும், அக்கடல், ஆறு முதலியவற்றின் நீரினது ஆற்றல் (சக்தி) வேறுபடுகின்றது. அதற்கு அளவு முதலிய பல காரணம் உண்டு.

கடவுளது ஆற்றலும் இடத்திற்குத் தக்க அளவு புலப்படுகின்றது. சிவபிரானிடத்திலுள்ள ஆற்றலின் அளவு ஏனைத் தெய்வங்களிடத்தில் இல்லை.

நீர்மை பால், தயிர், மோர், நெய்வகை முதலிய பலவற்றில் இருக்கிறது. இருந்தும் நீரின் பயனை அவை கொடா. அவற்றின் பயனை நீர் கொடாது.

வித்தை கலை என்ற இரண்டு வகையுளும் அவ்வகை வேறுபாடு உண்டு. வித்தை அறிவு. கலை செயல். செல்வத்தை அறிவெனல் இல்லை. அறிவைச் செல்வம் என்பர். வித்தையையும் கலையையும் வேறுபாடின்றி வழங்குகின்றனர்.

வெற்றி, செல்வம், அறிவு மூன்றும் வித்தை ஆகுமோ? வெற்றிக்கும் செல்வத்திற்கும் பலவகைக் கலையும் வித்தையும் காரணம் ஆகும். தனி வித்தையும், பல்வகைக் கலைகளால் தோன்றும் வித்தையும் அறிவுஎனப்படும்.

அவற்றை விளக்கும் ஆற்றல் (சக்தி) களும் அவை இருக்கும் இடத்திற்குத் தக்கவாறு வேறுபடுதலை அறிகின்றோம். தோளில் உள்ளது வீரம் பயக்கும். சந்தானம் தருமோ? தருமெனில், வீரர் எல்லார்க்கும் மக்கட்பேறு உண்டாதல் வேண்டும். மக்களைப் பெறுது வருந்தும் - வருந்திய வீரர் இல்லையோ ?

தனம், தான்யம், வீரம், விஜயம், சந்தானம், வரம், கஜரத துரகபதாதி எல்லாம் வாழ்க்கைக்கு வேண்டுவன. எல்லா வற்றையும் ஒரே ஆற்றல் வெவ்வேறு வகையிலும் அளவிலும் அளிக்கின்றது. அதுவே ஆதிலட்சுமி மகாலட்சுமி என்ற பெருமைக்குரியது. அதன் பிரிவுகளே மற்றைய ஏழும் ஆகும். சிவபூஜை செய்வார்க்கு இது விளங்கும்.

தனத்தால் தான்யம், வீரத்தால் விஜயம், வரத்தால் சந் தானம், கஜாதியால் வீரவிஜயம் கிடைக்கும். பண்டமாற்றையும் இங்கு எண்ணிக்கொள்க.

அஷ்டலட்சுமிகளைப் பற்றிய விவரணம் எந்நூலில் எவரால் எவ்வாறு அறிவிக்கப்படுகின்றது ? இவ்வாறு மூலத்தை ஆராய்ந்தால் பற்பலவற்றுல் மூலம் உற்பவம் அடையும்.

தருமபுர ஆதீனத்தின் முகப்பில் பல ஆயிரம் பொருட் செலவில் அமைக்கப்பெற்றுள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில், விதானக்கட்டில், அஷ்ட லக்ஷ்மிகளின் திருவுரு வம் சித்திரமாகத் தீட்டப்பெற்றிருக்கின்றன. அவற்றின் நிழலுரு வங்களும் தியான சுலோகங்களும் இதைத் தொடர்ந்துள்ளன.

பலருக்கு இப்புதுவிருந்து இன்பம் பயக்கும்.

வாழ்க உலகம்! வளர்க எண்பொருளும்.

1 ஆதிலக்ஷ்மீ

த்விபுஜாம் ச த்விநேத்ராம் ச ஸாபயாம் வரதாந்விதாம் 1
புஷ்பமாலா தராம் தேவீம் அம்புஜாஸன ஸம்ஸ்திதாம் 11
புஷ்பதோரண ஸம்யுக்தாம் ப்ரபாமண்டல மண்டிதாம் 1
ஸர்வ லக்ஷண ஸம்யுக்தாம் ஸர்வாபரண பூஷிதாம்
பீதாம்பரதராம் தேவீம் மகுடே சாருபந்தனும் 1
ஸ்தனேந்ந்திஸமாயுக்தாம் பார்ச்வயோர் தீபசக்திகாம் 1
ஸௌந்தர்ய நிலயாம் சக்தி மாதி லக்ஷ்மீ மஹம் பஜே.



2 ஸந்தானலக்ஷ்மீ

ஜடாமகுட ஸம்யுக்தாம் ஸ்திதாஸன ஸமன்விதாம் ।
அபயம் கடகம் சைவ பூர்ணகும்பம் புஜத்வயே ।
கஞ்சுகம் சன்னவீரம் ச மௌக்திகம் சாபிதாரிணீம் ।
தீபசாமரநாரீபிஸ் ஸேவிதாம் பார்ச்வயோர் த்வயோ : ।
பாலே ஸேநானிஸம்காசே கருணா பூரிதானனாம் ।
மஹாராக்ஞீம் ச ஸந்தானலக்ஷ்மீ மிஷ்டார்த்தஸித்தயே



3 கஜலக்ஷ்மீ

சதுர்புஜாம் த்விநேத்ராம் ச வராபயகராந்விதாம் ।
அப்ஜ த்வய கராம்போஜாம் அம்புஜாஸன ஸம்ஸ்திதாம்
ஸஸுவர்ண கடேபாப்யாம் ப்லாவ்யமானும் மஹாச்ரியம் ।
ஸர்வாபரண சோபாட்யாம் சுப்ரவஸ்த்ரோத்தரீயகாம் ।
சாமரக்ரஹ நாரீபிஸ் ஸேவிதாம் பார்ச்வயோர் த்வயோ:
ஆபாத லம்பி வஸநாம் கரண்ட மகுடாம் பஜே ।



4 தனலக்ஷ்மீ

கிரீடமகுடோபேதாம் ஸ்வர்ண வர்ண ஸமன்விதாம் ।
ஸர்வாபரண ஸம்புக்தாம் ஸு²காஸன ஸமன்விதாம் ।
பரிபூர்ணம் ச கும்பம் ச தக்ஷிணேன கரேண து !
சக்ரம் பாணம் ச தாம்பூலம் ததா வாமகரேண் து ।
சங்கம் பத்மம் ச சாபம் ச கண்டிகாமபி தாரிணீம் ।
ஸத்கஞ்சுக ஸ்தனீம் த்யேத் தனலக்ஷ்மீம் மனோஹராம் ।

5 தான்யலக்ஷ்மீ

வரதாபய ஸ்ம்யுக்தாம் கிரீட மகுடோஜ்வலாம் ।
அம்புஜம் சேக்ஷு சாலீவா கதலீபல த்ரோணிகா ।
பங்கயம் தக்ஷ வாமேது ததானும் சுக்லரூபிணீம்
க்ருபாமூர்த்திம் கஜாரூடாம் ஸுகாஸன ஸமன் விதாம் ।
ஸர்வா லங்காரஸம்யுக்தாம் ஸர்வாபரண பூஷிதாம் ।
மதமத்தாம் மனோஹாரிரூபாம் தான்யச்ரியம் பஜே ।

6 விஜயலக்ஷ்மீ

அஷ்ட பாஹுயுதாம் தேவீம் ஸிம்ஹாஸன வரஸ்திதாம் |
ஸுகாஸனும் ஸுகேசீம் ச கிரீட மகுடோஜ்வலாம் |
ச்யாமாங்கீம் கோமலாகாராம் ஸர்வாபரண பூஷிதாம் |
கட்கம் பாசம் ததா சக்ரம் அபயம் ஸவ்ய ஹஸ்தகே |
கேடகம் சாங்குசம் சங்கம் வரதம் வாம ஹஸ்தகே |
ராஜரூபதராம் சக்திம் ப்ரபுஸௌந்தர்ய சோபிதாம் |
ஹம்ஸாரூடாம் ஸ்மரேத் தேவீம் விஜயாம் விஜயாப்தயே |



7 மஹாலக்ஷ்மீ

சதுர்புஜாம் மஹாலக்ஷ்மீம் கஜயுக்ம ஸுபூஜிதாம் ।
பத்ம பத்ராப நயனும் வராபய கரோஜ் வலாம் ।
ஊர்த்வ த்வயகரே சாப்ஜம் தததீம் சுக்லவஸ்த்ரகாம் ।
பத்மாஸனே ஸுகாஸீனும் பஜேஹம் ஸர்வமங்களாம் ।

8 வீரலக்ஷ்மீ

அஷ்ட பாஹு யுதாம் லக்ஷ்மீம் ஸிம்ஹாஸன வரஸ்திதாம்।
தப்த காஞ்சன ஸங்காசாம் கிரீட மகுடோஜ்வலாம்
ஸ்வர்ண கஞ்சுக ஸம்யுக்தாம் சன்னவீரதராம் ததா।
அபயம் வரதம் சைவ புஜயோஸ் ஸவ்ய வாமயோ:।
சக்ரம் சூலம் ச பாணம் ச சங்கம் சாபம் கபாலகம்।
ததீம் வீரலக்ஷ்மீம் ச நவ தாலாத்மிகாம் பஜே।

916.

மன வாசகங் கடந்தார் அருளிய

உண்மை விளக்கம்

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி
திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

(முற்றொடர்ச்சி மலர் 14 இதழ் 11)

வித்தியா தத்துவங்கள் ஏழாகும். அவை 1. காலம், 2. நியதி, 3. கலை, 4. வித்தை, 5. அராகம், 6. புருடன் 7. மாயை என்னும் பெயர் பெற்றவை.

1. காலம் :

காலம் :- மூன்றாகப் பகுக்கப்பட்டு இறப்பு நிகழ்வு எதிர்வு என நிற்கும். இறந்த காலத்தால் எல்லை விளங்கும் நிகழ்காலத்தின் எல்லையை உணர முடியாது. உணர நின்ற காலம் இறந்த காலம் எனப்படும். நிகழ்காலத்தில் நுகர்ச்சி விளங்கும். அஃது இன்பத் துன்ப நுகர்ச்சி. எதிர்காலத்தில் முதலும் தெரியாது. முடிவும் தெரியாது. புதுமை புலப்படும். இறந்தகாலத்தது பழைமை என்ற பெயர் பெற்றது. நிகழ் காலத்தது சிறிது சிறிதாகப் பழைமை அடைந்து வருவது. எதிர் காலத்ததோ புதுமை புலப்படுப்பது. எல்லை தெரிவிப்பது இறப்பு. சுக துக்க பலத்தை அநுபவித்தற்கு இடமாயிருப்பது நிகழ்வு. அநுபவித்திருக்கலாம் இறந்தகாலத்தில். அநுபவிக்க இருக்கலாம் எதிர்காலத்தில். அநுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்பது நிகழ்காலத்திலேதான். அதனால் அச் சுகதுக்கானுபவ பலம் நிகழ்காலத்திற்கே உரியதாயிற்று. புதுமை எதிர்காலத்திற்கே உரியது. போனதும் இருப்பதும் புதுமைய ஆகா. வருவதே புதுமையதாகும். போக வரையறைப்படுத்துவது காலதத்துவம்,

2. நியதி :

நியதி :- காலத்தின் பின் மாயையினின்று தோன்றுவது. ஒருயிர் செய்த வினையின் பயனைப் பிறிதோருயிர் நுகரவிடாது, முன்தாம்தாம் செய்த வினையின் பயனைத் தாமே நுகரச்செய்யும். ஒருயிரின் உடல் முதலியவற்றை மற்றோருயிர் அடைய விடாது. நியதிக்குப், பால், ஊழ், தெய்வம், விதி என்னும் பெயர்களும் உள்ளன. யாதானும் ஓர்இயைபு இருப்பதாலேயே ஓருயிர் செய்த வினையின் பயன் வேறு ஒருயிருக்கு ஆகின்றது. அதனால் நியமத்திற்கு இழுக்கு இல்லை. அதுபற்றி நியதி தத்துவம் இல்லை எனச் சொல்லமுடியாது உண்டு. அது தத்துவங்களுள் வைத்து எண்ணத்தக்கதே ஆகும்.

மகன் செய்த தென்புலத்தோர் கடன் முதலிய வினைகளின் பயன் தந்தையைச் சார்கின்றது. தந்தை செய்த பிறப்புக்கடன் (சாதகன்மம்) முதலிய வினைகளின் பயன் மகனைச் சார்கின்றது. இருவர்க்கும் இயைபு இல்லையேல் சாராது. இருத்தலால்தான் அவருள் ஒருவரை நோக்கி ஒருவர் செய்கின்றனர்.

நிலத்தன் ஏவுகின்றான், மள்ளன் உழுதல் முதலிய வினைகளைச் செய்து கூலியாகிய் பயனைப் பெறுகின்றான். உழவு முதலிய வினைகளால் வரும் பயனை நிலத்தன் அடைகின்றான். ஏவும் வினைக்கு முதல்வன் நிலத்தன். இயற்றும் வினைக்கு முதல்வன் மள்ளன். ஏவலும் இயற்றலும் ஆகிய இயைபு இருப்பதால்தான் அவ்வாறு பயன் எய்தலாயிற்று. அவ்வாறே வேள்வியைக் குறித்து ஏவும் இயமானனுக்கும், இயற்றும் இருத்துவிக்குக்களுக்கும் ஆகும்.

3. கலை (கலா):

கலாதத்துவம், மூல (ஆணவ) மலத்தினால் மறைப்பு அடைந்து, சூனியம் போல நின்ற ஆன்மாக்களுக்குப் போகா நுபவம் உண்டாக்க வேண்டி, அம் மலசத்தியில் சிறிதே நீக்கி, அவ்வான்மாக்களின் கிரியாசத்தியை விளக்குவது. கலித்தல்— நீக்குதல், செலுத்துதல். மலத்தை நீக்கும் காரணம் பற்றிக் கலை எனப்பட்டது. ஆணவ மலம் வியாபகம் உடையது. அதை நீக்குவதாவது யாது? அதன் மறைக்கும் வன்மையை

918

ஆன்மாவின் கிரியாசத்தியில் நிகழ வொட்டாது தடுத்து நிற்றலாம். நெருப்பினது சுடும் வன்மையைத் தடுத்து நிற்கும் குளிகை போல்வது அது. சிறிதே நீக்குதலாவதுயாது? வினைக்கு ஈடாகப் புத்தி தத்துவத்தின் வியாபாரத்திற்கு ஆகும் விடயத்தில் நிகழும் மறைத்தலாகிய (ஆணவ மலத்தின்) ஆற்றலை மட்டும் நீக்குதலாகும்.

சேதனன் ஆன ஆன்மா, சடம் ஆன புத்திதத்துவத்தைத் தொழிற் படுத்துதற்குக் கலையே இன்றியமையாத கருவி. அதுதான் ஆன்மாவின் கிரியாசத்தியை ஆணவமல மறைப்பினின்றும் தடுத்து விளக்கிப், புத்தி தத்துவத்திற் செலுத்துவது. ஆன்மாக்களுக்குக் கிரியாசக்தி விளக்கத்தைப் புத்தியினிடமாக நிகழ்த்தும் கருவியாகிய கலைபோல்வன எல்லாம் கலைகள் எனப்பட்டன. அறுபத்து நான்கு கலைகளும் அவ்விளக்கத்திற்குத் துணையாவனவே ஆகும்.

4. வித்தை :

கலையால் விளங்கியது கிரியா சத்தி. அச்சத்தியால் வினை செய்தது ஆன்மா. அதனால் வினைக்கு முதலாகும் தன்மையை ஆன்மா எய்திற்று. எய்தினும், கிரியாசத்தி விளங்கியவாறே ஞானசத்தியும் இச்சாசத்தியும் விளங்குதல் வேண்டும் அன்றே? அதற்குக் கலையினின்று **வித்தை** தோன்றி ஞானசத்தியை விளக்குகின்றது. அதனால் ஆன்மாவின் ஞானசக்தியை விளக்கும் தத்துவம் **வித்தை** ஆகும்.

தன்வேதனைக் காட்சி யறிவிற்கும் **நிருவிகற்பக்காட்சி** யறிவிற்கும், சங்கற்பத்தையும் நிச்சயத்தையும் அபிமானத்தையும் அறியும் அறிவிற்கும் கருவியாய் நிற்பது அவ்வித்தையே (வித்தியா தத்துவமே).

புறப் பொருளாகிய குடம் முதலியவற்றைப், பெயர், இனம் இயல்பு, செயல், பொருள் என்னும் ஐந்தும் விளங்கும் (சவிகற்பக்) காட்சியால் நிச்சயிப்பது புத்திதத்துவம். அஃது அகம். புறம் அன்று. அவ்வகத்தின்கண் அறிவது தன்வேதனைக் காட்சியாகும். ஐம்பொறிகளால் அறிவது பொறி (இந்திரிய)க் காட்சியாம். அப்பொறிக்காட்சி மனம் வாயிலாக உள்ளே

எய்துவதால் மானதக் காட்சி எனப்படும். கலையாலும் வித்தையாலும் அராகத்தாலும் இன்பத்துன்ப விளக்கம் புத்திதத்துவத்தினிடமாக ஆன்மாவிற்கு உண்டாதலால், அது தன்வேதனைக்காட்சி எனப்படும்.

மனத்தின் தொழிற்பாடு சங்கற்பம், புத்தியின் தொழிற்பாடு நிச்சயம். அகங்காரத்தின் தொழிற்பாடு அபிமானம்.

புத்தி தத்துவத்தோடு கூடாமையால், புறப்பொருளை அப்பெயர் முதலிய ஐந்து விகற்பங்களும் இன்றி அறியும் அறிவு நிருவிகற்பம் எனப்படும். அவ்விகற்பங்களோடு அறிவது சவிகற்பம் எனப்படும்.

குருடு நீங்கிய வழிக், கண்ணொளி சிறிது விளங்கினும், திகைப்பு உற்று நிற்கும். குருடுநீங்கிய பொழுதே பொருள்களைப் பகுத்துக் காணமாட்டாது. கலையால் ஆணவ மல சக்தி சிறிது நீங்கி ஞானசக்தி விளங்கினும், புத்தி தத்துவத்தைப் பற்றி விடயத்தைப் பகுத்துணர மாட்டாமல் திகைப்பு உற்றுநிற்கும். அத்திகைப்பை நீக்க, கலையினின்றும் தோன்றிய வித்தையே கருவியாகலின், வித்தையாகிய தத்துவம் அவசியம் ஆயிற்று. ஒரு தொழிற்கு அமைந்த கருவி மற்றொரு தொழிற்கும் ஒரே காலத்தில் துணை ஆகாமையால், மலசக்தியை நீக்கிய கலையே திகைப்பை நீக்குதற்கும் அமையாதாயிற்று. ஆகவே, கலையே தனது ஏகதேசத்தின் வித்தையாய்ப் பரிணமித்துத், திகைப்பை நீக்கி, புத்திதத்துவத்தில் விளங்கும் பொருளை அறிவதற்குக் கருவியாய் நிற்கும் என்பது புலப்படும். படவே, வித்தை மாயையின் நின்று தோன்றும் என்னுமைக்கும் கலையின் நின்று தோன்றும் என்பதற்கும் உரிய இயல்பு விளங்குவதாம்.

மானதக் காட்சிக்கு வாயில் (வழி) இந்திரியக் காட்சி. அதனுல்தான் வாயிற்காட்சி என்னும் பெயர் உண்டாயிற்று. மானதக் காட்சிக்கு மனம் முதலியவை உட்கருவிகள். சந்தனம் மாலை முதலியவை வெளிப்பொருள்கள்.

தன்வேதனைக்காட்சியறிவுக்குச் சந்தனம் மாலை முதலிய புறப்பொருளெல்லாம் விடயமாகா. அவை போக்கியம் அல்ல. போக்கியத்துக்கு ஏது ஆவன. தன்வேதனைக்காட்சியறிவிற்குப்

போக்கிய மாத்திரையே விடயம். புத்தி தத்துவம் அச் சந்தனம், மாலை முதலிய புறப்பொருள்களைப்பற்றி நின்று, அவ்வப் பொருளாய்ப் பரிணமித்த போதம் ஆகும். அப்போதமாகிய புத்திதத்துவமே தன்வேதனைக் காட்சியுணர்விற்கு விடயம். அதுவே இன்பத்துன்ப வடிவாகிய போக்கியம் ஆகும்.

புத்திதத்துவம் தனியாய் நில்லாமல், சந்தனம், மாலை முதலியவற்றைப் பற்றி, அவ்வப்பொருளாய்ப் பரிணாமம் அடைந்து நின்று, ஆன்மாவின் ஞானசக்திக்கு விடயமாகின்றது. அதனை விடயம் ஆக்க வித்தை என்னும் கருவி இன்றியமையாத துணை ஆகின்றது. "வாயில்களின் பயனைப், புத்திதர, வித்தை இடைநின்று, அறிவை, உயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும்" என்பது சிவப்பிரகாசம் (39). ஆன்மா அதிட்டித்தால் அன்றித் தொழிற்படாத வாயில் (பொறி) களை, நிருவிகற்பக்காட்சியில் வித்தையே கருவியாய் நின்று அதிட்டிக்கச் செய்கின்றது.

> "அருந்து இன்பத் துன்பம் உள்ளத்து அறிவினுக்கு அராகம் ஆதி
> தரும் தன் வேதனையாம் காட்சி." (சித்தியார் 13)

5. அராகம்

வித்தையால் ஞானசத்தி விளங்கி, விடயங்களை அறிய நிற்கும் ஆன்மாவிற்கு, முன்னே இச்சை நிகழும். பின்னே போக நுகர்ச்சி எய்தும். இச்சை நிகழ்ந்தன்றிப் போக நுகர்ச்சி செல்லாது. அதனால், அராகதத்துவம் வித்தையில் தோன்றி ஆன்மாவின் இச்சா சத்தியை விளக்கும். புத்தியின் குணங்களான அவைராக்கியம் எனப்படும் அராக நிகழ்ச்சிக்கு ஏதுவாய் நிற்கும். இச்சையாவது ஞானவிசேடம். அதை விளக்கும் அராகதத்துவம் வித்தையின் பரிணாமம் ஆகும். கலையின் மற்றொரு பரிணாமமாகக் கூறுவாரும் உளர்.

ஆன்மாவின் இச்சாசக்திக்கு அதிட்டானம் ஆகிய புத்தியில் நிகழும் அராகம் வேறு. இச்சாசத்தியை விளக்கும் அராகம் வேறு. அப் புத்தி தத்துவத்தை அதிட்டித்து நிற்பது இச்சாசத்தி. புத்தியின் அராகம் அவ்வாறு அதிட்டித்தபின் தோன்றுவது. அதைத் தோற்றுவிப்பதான இச்சாசத்தியை விளக்கும் அராக தத்துவம் அவ்வாற்றால் புத்தியின் அராகத்திற்கும் ஏதுவாம்.

பொதுவகையான் இச்சை நிகழச்செய்வது அராகதத்துவம். சிறப்புவகையான் இச்சை நிகழச்செய்வது புத்தியின் அராகம். அதனால், அவ்வப்பொருள்தோறும் சிறப்புவகையால் இச்சை நிகழ்தற்கு ஏதுவான அராகமும் வேண்டும். பொதுவகையான் நிகழ்த்தும் அராகதத்துவமும் வேண்டும். ஒன்றே அமையாது. இதுபற்றிய ஏனைய ஆராய்ச்சி யெல்லாம் சிவஞானபாடியத்தில் விளக்கமுற உணரலாம். இவையும் அங்குணர்ந்தவையே.

6. புருடன்

1. கலை, 2. வித்தை, 3. அராகம், 4. காலம், 5. நியதி என்னும் ஐந்தும் '**பஞ்சகஞ்சுகம்**' எனப்படும். அப்பஞ்சகஞ்சுகத்துடன் கூடிப் போகம் நுகர்வோனாகும் தன்மையை அடைந்துநின்ற **ஆன்மா**, பிரகிருதி மாயைப் போகாநுபவத்தில் உன்முகத்திற்கு ஏதுவான **1. அவிச்சை 2. ஆங்காரம் 3. அவா 4. ஆசை 5. கோபம்**, ஆகிய பஞ்சக்கிலேசம் என்னும் **பும்ஸ்த்துவமலம்** உடையனாய்ப், '**புருடதத்துவம்**' என நிற்பன்.

1. **அவிச்சை** அநித்தியத்தை நித்தியம் என்றும், அசுத்தத்தைச் சுத்தம் என்றும், துன்பத்தை இன்பம் என்றும், தான் அல்லாத பொருளைத் தான் என்றும் மாறுபடக்காணும் உணர்வு.

2. **ஆங்காரம்** அவிச்சைபற்றி அவற்றை '**யான்**' என மதிக்கும் பெற்றிமை உடையது.

3. **அவா** ஆங்காரம் பற்றி எனக்கு இது வேண்டும் என்று அவாவுவது.

4. **ஆசை** அவாவைப்பற்றி அப்பொருளிற் செல்லுவது.

5. **கோபம்** ஆசைபற்றி அதன் மறுதலைக்கண் செல்லுவது. அவ்வைந்துமே '**பும்ஸ்த்துவமலம்**' எனப்படும்.

அசுத்தமாயை மெய்ப்பொருள்; நித்தியம்; ஒன்று; கலை முதல் நிலமுடிய உள்ள அசுத்தப்ரபஞ்சத்திற்குக் காரணம்; அவற்றின் வியாபகம்; வினைக்குப் பற்றுகோடு. பொது வகையால் வினைக்கட்டுடைய ஆன்மாக்களை மயக்குவது; அருவம். இவ்வளவும் அசுத்தமாயைக்கு உரிய இலக்கணம்.

422

19 "காலம் நியதி கருதுங் கலைவித்தை
ஏல அரா கம் புருட னே மாயை-மாலறஏழ்
சொன்னோம் அடைவாகச் சொன்ன இவை தம் உண்மை
உன்னி உரைக்கநாம் உற்று.

குறிப்பு:- 'கருதும்' என்ற அடை இச்சாஞானக் கிரியா சத்திகட்குக் கருவியாகக் கருதப்படும் எனப்பொருள் கொள்ள நின்றது. அராகம் என்றது இராகம் என எழுதுவோரால் பிழை பட்டது. தத்துவக்கிரமத்தில் ஒரே உருவம் இருந்தால்தான் உணர்வோர்க்கு மயக்கம் விளைக்காது. அடைவு - முறை. 'ஏழ்' என்றபாடம் ஏட்டில் உள்ளது. இவைதம் - இவற்றின். உன்னி - நினைந்து.

20. "எல்லை பலம்புதுமை எப்போதும் நிச்சயித்தல்
அல்லல் தரும் கிரியை ஆன்மாவுக்கு—ஒல்லை
அறிவு ஆசை ஐம்புலனும் ஆரவரும் காலம்
குறியாய் மயக்குஎன்று கொள்.

குறிப்பு:- புருடதத்துவம் எனத் தனியாக ஒன்றில்லை. ஆன்மா, பொறியிடமாகச் சுவை முதலியவற்றைப் புசிக்க வரும் அவசரமே புருடன் எனப்படுதலால், 'காலம்' என்றார். குறியாய் - அறிவாய் (நீ). (தொடரும்)

மதிப்புரை

திருக்குற்றாலநாதருலா:- ஆசிரியர் திரிகூடராசப்பக் கவிராயர் பக்கம் 140 விலை 2-4-0. அடையாற்று வெளியீடு. கிடைக்கும் இடம்:- சென்னை 20, அடையாறு மகாமகோபாத்யாய டாக்டர், உ. வே. சாமிநாதையர் நூல்நிலயம். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்திதம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருளன்பின் கொடைப்பயனாக இப்புதியநூல் தமிழுலகிற்குக் கிடைத்துள்ளது. புகழுரு எய்திய ஐயரவர்கள் தனிப்பேரனார் ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கொடுத்த ஏடும் இதன் திருத்தத்திற்குப் பெருத்த உதவியாயிருந்தது என்று முன்னுரையால் அறியலாம். நூலாசிரியர் பெயரே நூலின் சொற் பொருள் வளத்தைத் தோற்றும். கவி என்றால், திரிகூடராசப்பக்கவியே, குற்றாலத் தலபுராணம் முதலியவற்றைக் கற்றவர் - கேட்டவர் கருத்தில் நிற்பார், இவ்வுலாவில் சொற்பொருள் நயங்கள் உள்ள பகுதிகள் எவைஎனத் தேடாதவாறு, நூல் முழுதும் நயமுடையதாயிருக்கின்ற உண்மையை நூலை வாங்கிக் கற்றறிவார் அறிவர், 'மாமியில்லாச் செல்வமருமகள்' என்று அம்பிகையைக் குறித்தது முதலிய புதுமையைப் பல இடங்களில் பார்க்கலாம். பதிப்பாசிரியர், ஸ்ரீ எல். ஸ்ரீநிவாஸ ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, கற்பவர்க்குப் பெருந்துணையாகும். முடிவில் அகராதியும் உண்டு.

(முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார்.)

923

முப்பொருள் விளக்கம்

வித்துவான், திரு. சி, அருணைவடிவேலு முதலியார் அவர்கள்
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

பாயிர வியல்

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே. –சிவஞானபோதம்

என்னைப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னாலே தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணை மேவிவாழ் மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றும்.

–சிவஞான சித்தியார்

தோற்றுவாய்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும், மக்கள் அடைதற் பாலனவாய உறுதிப்பொருள் நான்கனுள் முடிந்த பொருளாகிய வீட்டினை அடைதற்குச் சிறந்த கருவி, பொருட்டன்மையினை உள்ளவாறு உணர்தலேயாம். அதனானே வீட்டுநூல்கள் பொருட்டன்மையினை விளக்குவனஆயின.

அங்ஙனம் விளக்குவனவற்றுட் பௌத்தநூல் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனப் பொருள் ஐந்தென்றும், ஆருகதநூல், சீவன், அசீவன், ஆச்சிரவம், சமுவரம், நிச்சரம், பந்தம், முத்தி எனப் பொருள் ஏழென்றும் வைசேடிகநூல் திரவியம், குணம், கன்மம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் எனப் பொருள் ஏழென்றும், நியாயநூல் பிரமாணம், பிரமேயம், சமுச்சயம், பிரயோசனம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிண்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுவாபாசம், சலம், சாதி நிக்கிரகத் தானம் எனப் பொருள் பதினாறென்றும், ஏகான்மவாத நூல் கட்டு வீடு என்றும் இருவகை நிலைகளுள் கட்டுற்ற

924

நிலையில் சகம், சீவன், பரம், எனப் பொருள் மூன்று; வீடுற்ற நிலையில் பரம் ஒன்றே பொருள் என்றும், மெய்கண்டநூல்கட்கு வீடு என்னும் இருவகை நிலையினும் இறை, உயிர், தளை எனப் பொருள் மூன்றென்றும் கொண்டு, அவற்றின் இயல்பினை விளக்கும். அவற்றுள் மெய்கண்ட நூல்களின் முடிபே முடிந்த முடிபாய் நிற்றலின், அவற்றுட் கூறப்பட்ட முப்பொருள் இயல்பினை ஈண்டு ஒருவாறு விளக்குவாம்.

பொருட்டன்மை கூறுவா னெழுந்த நூல்களுள் பொருள்கள் மேற்கூறியவாறு பல திறத்தனவாகக் கூறப்படினும், அவை எல்லாப் பொருள்களும் ஈண்டுக் கூறப்படும் இறை உயிர் தளை என்னும் முப்பொருள்களுள் அடங்குவனவே யன்றி, அவற்றின் வேருவனவல்ல. முப்பொருள்களுள் இறை, கடவுள்; உயிர், உடம்புதோறும் அறிவும் செயலுமுடையவாய் உள்ளவை தளை, அவ்வுயிர்களைத் தம் விருப்பத்தின்வழி அறியவும் செய்யவும் ஒட்டாது தடுத்து நிற்கும் தடை. இம் முப்பொருள்களும் முறையே பதி, பசு, பாசம் எனப்படும். இங்ஙனம் பொருள் மூன்றுள எனவும், இவற்றின் வேருக நான்காவது ஒருபொருள் இல்லை எனவும் உணர்க.

> ''சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருள்
> மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன;
> ஆன்றதொல் பதியீறை, ஆருயிர்த்தொகை,
> வான்றளை யென்னவே வகுப்ப ரன்னவே.''

எனக் கந்தபுராணத்தினும்

> ''பலகலைஆ கமவேதம் யாவையினும் கருத்துப்
> பதிபசுபா சம் தெரித்தல்''

எனச் சிவப்பிரகாசத்தினும் கூறப்பட்டமை காண்க.

இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களுள் இறை ஒன்றையே உண்டென்று கொண்டு ஏனையவற்றை இல்லை என்பாரும்; தளையை உண்டென்று கொண்டு ஏனையவற்றை இல்லை என்பாரும், தளையையும் உயிரையும் உளவென்று கொண்டு இறையை இல்லை என்பாரும் ஆகச் சமயிகள்

௧25

பலதிறப்படுவர். எனினும் இறை முதலிய மூன்றும் உள் பொருள்களேயாம். அதனால் இறையைப் போலவே ஏனைய இரு பொருள்களும் தோற்றக் கேடுகள் இன்றி என்றும் உள்ள பொருள்களாம்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி"

என்பது திருமந்திரம்.

இங்ஙனமாகவே, மெய்கண்ட நெறியின் நின்று மெய் யுணர்வின் முற்றுப் பேறுடையராய நல்லாசிரியரையடைந்து முப்பொருளினியல்பை உள்ளவாறுணரும் நன்மாணுக்கரே, பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளானும் மாணாப்பிறப்பின் நீங்கி, மாசறுகாட்சியாய் இருள்நீங்கிய இன் பத்தினை எய்துவர் என்பது பெறப்படும். அதனால், அத்தகைய நல்லாசிரியர் பல் திறத்தனவாய வீட்டுநூல்களை ஓதி அவற்றான் மலைவெய்தித் தம்மை அடைந்த நன்மாணுக்கர்க்கு அம்மலை வினையறுத்து உண்மையுணர்த்துமாறு ஈண்டுக் கூறுவாம்.

ஆசிரியர் அறிவுரை

பிறவிப் பெருங்கடலின் அகப்பட்டு அதனை நீந்தலாற்றாது எய்த்து அதன் கரைகாண்டலெவ்வாறெனக் கவன்று நிற்கும் நன்மாணுக்கனே!

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்பது மெய்ம்மொழியாகலின், மற்றுப் பற்றுனக்கின்றி இறைவன் திருப்பாதமே மனம் பாவித்து நிற்கப்பெறுவையா யின் அன்றே நீ மனிதப்பிறவியிற் பிறந்தவனாகிப் பிறவாத தன்மை வந்தெய்தப் பெறுவை.

மாணக்கன் ஐயம்

அடிகளே! அஃது உண்மையே யாயினும் இறைவனாவான் யாவன் எனத் தெளிகின்றிலேன்; என்னையெனின் " ஓங்குயர் சமந்தகத் துச்சி மீமிசை அறவியங் கிழவோ னடியிணையாகிய

பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉம் - அறவிநாவாய் ஆங் குளதாகலின் - தொழுது வலங்கொண்டு வந்தேன்'' (மணி மேகலை. 11. 23-26) என்றுற்போலும் இடங்களில் போதி வேந்தனுகிய புத்த தேவனே இறை எனவும், ''அறிவன் அறி வோன் அறிவுவரம் பிகந்தோன் - செறிவன் சினேந்திரன் சித் தன் பகவன்......இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன் - குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்......ஓதிய வேதத் தொளியுறினல்லது போதார் பிறவிப் பொதியறையோர்'' (சிலப்பதிகாரம்-10) ''ஆதி வேதம் பயந்தோய்நீ அலர் பெய் மாரி அமைந்தோய் நீ - நீதி நெறியை உணர்ந்தோய் நீ - நிகரில் காட்சிக் கிறையோய் நீ - நாதனெனப் படுவோய் நீ - நவை செய் பிறவிக் கடலகத்துன் - பாத கமலந் தொழுவேங்கள் பசையாப் பவிழப் பணியாயே.'' (சீவகசிந்தாமணி. பதுமை யார். 77) ''தீரா வினைதீர்த்துத் தீர்த்தந் தெரிந்துய்த்து - வாராக் கதியுரைத்த வாமன்ருன் யாரே - வாராக் கதியுரைத்த வாமன் மலர்தகைந்த - காரார்பூம் பிண்டிக் கடவுள் நீயன்றே'' (சீவகசிந்தாமணி பதுமையார் 82.) என்றுற்போலுமிடங்களில் பிண்டிநிழலவனுகிய அருகதேவனே இறைவன் எனவும், ''கல்லால் நீழல் - அல்லாத் தேவை - நல்லார் பேணுர் - அல் லோம் நாமே'' (திருமுறை. 3. 40.-1) ''சிவனெனு மோசை யல்ல தறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே'' (திருமுறை 4. 8-1.) ''இறைவனுரிமை யோர் தொழு பைங்கழல் - மறவனுர்கடவூரின் மயானத்தார் - அறவனுர் அடி யார் அடி யார் தங்கள் - பிறவி தீர்ப்பார் பெருமானடிகளே'' (திருமுறை 5.) என்றுற்போலுமிடங்களில் ஆல்கெழு கடவு ளாகிய சிவபிரானே இறைவன் எனவும்,

''பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச் சுடர்விளக் கந்தலைப் பெய்வார்
அறவனை ஆழிப் படையந்தணனை
மறவியை யின்றி மனத்துவைப்பாரே'' (திருவாய்மொழி 1. 7-1.)

''பரவுந் தெய்வமும் பல்லுலகும் படைத்தன் றுடனேவிழுங்கிக்
கரந்துமிழ்ந்து கடந்திடந்து கண்டும் தெளியகில்லீர்
சிரங்களா லமரர் வணங்கும் திருக்குரு கூரதனுள்
பரன்திற மன்றிப் பல்லுலகீர் தெய்வம் மற்றில்லை பேசுமினே''

(ஷ 4. 10-3)

927

என்ருற்போலுமிடங்களில் நாராயணனே இறைவன் எனவும், மற்றும் வேதத்துள் இரணிய கருப்பன், இந்திரன், அங்கி, சூரியன் முதலிய பலரும் இறைவர் இறைவர் எனவும் கூறப் படுதலால் இவர் எல்லாரும் இறைவரோ? இவருள் ஒருவரே இறைவரோ? எல்லாரும் இறைவராயின், அவரெல்லாரடி யையும் சேர்தல் எவ்வாறு? ஒருவரே இறைவராயின் இவருள் யாவர் இறைவர்? என்றிங்ஙனம் உள்ளம் பலதலைப்பட ஓடா நின்றது; அங்ஙனம் ஓடுகின்றுழி ஒருசார் நூல்கள்,

"வீட்டினை உளதென்ருேடி மெலிவதிங் கென்னை வீடு
காட்டினேர் கண்டோர் கேட்டோர் கரிஅவை உண்டேல் காட்டீர்
நாட்டினில் அரசனுணைக் கிசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள்கொண் டிங்கே இன்பத்துள் இசைந்திடீர்"

எனவும்,

"ஊடுவ துணர்வ துற்ற கல்விமங் கையரையுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்தவம்; பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கையேயாய்
நீடுவ தின்பமுத்தி; இத்தில்நின்ருர்கள் முத்தர்"

(சிவஞானசித்தியார் பரபக்கம் 2. 32—3.)

எனவும், கூறி இன்மைக் கொள்கையைப் பாரியாநின்றன; இன்னும் இறையுண்மை பற்றியே யன்றிப் பிற பிற கருத்துப் பற்றியும் நூல்கள் பலவும் பலதலைப்படக் கூறுநின்றன; ஆத லின், அடியேன் உண்மையுணரமாட்டாது தெருமருகின்றேன். இந்நிலையில் 'எந்நூல் யாதுகூறினும் எல்லாம் ஒன்றே; ஆதலின் அவற்றை வேற்றுமைப்படக் கருதாது நின் மனதிற்கியைந்த ஒன்றைக் கைக்கொண்டொழுகுவாயாக எனச்சிலர் கூறு நிற்பர். மேற்கூறிய பலவும் மேருமால்வரையை அடைதற்கு ஒருவன் வடதிசை நோக்கிச் செல்க' என்னும் பொழுது வேருெருவன், 'பாவீ, வடதிசை நோக்கிச் செல்லின் குமரிக் கடலின் வீழ்வாய்; ஆதலின் தென்றிசை நோக்கிச் செல்வாயாக' எனக்கூறுதல்போல், ஒன்றற்கொன்று மாறுபட்ட பொருள் களாவனவன்றி, ஒரு பொருளாகாமை கண்டேனுதலின் வீடு பேற்றின்கண் அவாவின்மையான் அந்நூல்களை நுழைந்து நோக்காது அங்ஙனம் கூறும் நொதுமலாளரது பொதுமொழியுங் கொள்ளேனுயினேன்; என்செய்வல். (தொடரும்)

928

பூலோக விமர்சனம்

(பதினேழாம் நூற்ருண்டு வேங்கடாத்வரீ)

தமிழில் ஆக்கியவர்

பிர்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரியின் முன்னுள் முதல்வர்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

வாஹனத்தில் செல்லும் ஸந்யாஸியைப் பார்த்த மாத்திரத்தில் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டு மென்பது பெரியோர்களின் கொள்கை. அவருடைய அன்னத்தைச் சாப்பிட நேரிட்டால் அதற்குப் பிராயச்சித்தமாக சாந்திராயன விரதம் நியமிக்கப்பட்டுள்ளது. அவருடைய தர்சனம் முக்தி பிரதம் என்றும் அவருடைய அன்னம் ஸமஸ்தபாபத்தையும் போக்க வல்லது என்றும் வித்வான்கள் கூட நம்புவது ஆச்சரியமாயிருக்கிறது. இந்தக் கலிகாலத்தில் கிருஹஸ்தர்கள் பாடு திண்டாட்டமாகவும் பரதேசிகள் பாடு யோகமாகவுமிருப்பது குறிப்பிடத்தக்கது. கிருஹஸ்தர்கள் இடிந்த பழைய வீடுகளில் கிழிசல் வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு வசிக்கிருர்கள். அவர்கள் கால்நோக அலைந்துதிரிந்து யாசகம் செய்து வயிற்றை வளர்க்கிருர்கள். பரதேசிகளோ மெல்லிய ஆடைகள் உடுத்துப் பல்லக்கில் ஏறிச் சுற்றிக்கொண்டு கிருஹஸ்தர்களுக்கு அன்னமளிக்கிறதுடன் கருங்கல்களால் கட்டப்பட்ட மடங்களில் இனிது காலம் கழிக்கின்ருர்கள்.

இந்த மத்வ மதஸ்தர்கள் வேதாப்யாஸம் செய்யாமல் சாஸ்திரங்களை அப்யஸிப்பது எஜமானை அலக்ஷ்யம் செய்து விட்டு சேவகர்களை உபாஸிப்பதற்கு ஒப்பாகும். மேலும் இவர்கள் ஏகாதசியில் ஹோமம் செய்யாமல் அக்நியை வியர்த்தமாக்குவதும் யக்ஞத்தில் மாவினுல் செய்யப்பட்ட பசுவை உபயோகிப்பதும் குறைகூறத்தக்கது.

விசுவாவஸீ—விஷ்ணு பக்தர்களான இவர்களை வீணுகக் குறை கூருதே. ஹரிதினம் என்று சொல்லப்படும் ஏகாதசியில் குழந்தை முதல் கிழவர்கள் வரை இவர்களில் யாவரும் சுத்தோபவாஸத்தை அனுஷ்டிக்கிருர்கள். அல்லும் பகலும் யாதொரு இடைஞ்சலுக்கும் இடம் கொடுக்காமல் ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்கிருர்கள். பகவத் பக்தர்களிடம்

இவர்கள் பக்தியுள்ளவர்கள். குருமுகமாய்க் கற்ற வித்யையை சிரத்தையுடன் போற்றுகிருர்கள். இவர்களிடம் எவ்வளவு நற்குணங்களேக் காண முடியாது ? இவர்களின் மதாசாரியர் களோ விஷ்ணு பூஜையிலும் புராணப்படனத்திலும் புண்ணிய தீர்த்தாடனத்திலும் அஞ்ஞானத்தைப்போக்கும் பிரும்மவிசாரத் திலும் பொழுது போனது தெரியாமல் அவ்வகை அக்கறை யுடன் காலம் கழிக்கிருர்கள்.

மேலும் நானுதேசங்களில் இருக்கும் தங்கள் சிஷ்யர்களே அனுக்கிரஹிக்கும் பொருட்டு இவர்கள் வாகனங்களில் ஏறிக் கொண்டு சஞ்சரிப்பதில் என்ன தோஷம். ஆஸ்திக ஜனங்கள் அர்ப்பணம் செய்யும் கார்ணிக்கைகளேத்தான் உபயோகப் படுத்திக்கொள்ளாமல் விஷ்ணு பூஜைக்கும் பக்த கோடிகளின் போஜனத்திற்கும் செலவு செய்வதும் சிலர்களின் பெருமை அல்லவா ?தங்களுக்குக் கிடைத்த காணிக்கைகளே அவர்கள் தங்கள் சொத்தாகக் கருதுவதில்லே. ஆகையால் அவர்கள் போடும் சாப்பாடு தோஷமுள்ளதாக ஆகாது. அதை புசிப் பவர்களுக்குத் தோஷமும் கிடையாது. மத்வ மடத்திற்கு மட்டு மல்லாமல் எல்லா மடங்களுக்கும் இந்த நியாயத்தைக் கொண்டே பார்த்துக்கொள்ளவேண்டியது.

மேலும் சிலர் சோம்பேறித் தனத்திஞல் காலத்தில் ஸந்தியா அனுஷ்டானம் செய்யாவிட்டால் ஒருவர்க்கத்தவர்களேயே குறைகூறுதல் தகாது. சாஸ்திர விஹிதங்களே எதிர்த்தால் தோஷமே ஒழிய அவைகளே ஒப்புக்கொண்டு அசக்தியிஞல் அனுஷ்டிக்காமல் இருந்தால் தோஷமில்லே.

கர்ஞடக தேசத்தைக் கடந்து வேங்கடகிரிக்கு அபிமுக மாய் விமானத்தில் செல்லும் அந்த கந்தர்வர்கள் ஒரு விராத்ய தேசத்தை மத்தியில் பார்க்கிருர்கள். அந்த தேசத்தில் குரங்குகளுக்குச் சமமான ஜனங்கள் வசிப்பதாகச் சொல்லப் படுகிறது. அவர்களுக்கு நல்லது கெட்டது தெரியாது. சந்திர வெளிச்சமும் இருளும் ஒன்றுதான். சம்பக விருஷமும் எட்டி மரமும் ஒன்றுதான். தண்ணீர்ப் பாம்பும் நாகப்பாம்பும் ஒன்றுதான். குயிலும் காக்கையும் ஒன்றுதான். சமுத்திரமும் கிணறும் ஒன்றுதான். பண்டிதனும் மூர்க்கனும் ஒன்றுதான். இத்தகையவிராத்யர்கள் வசிக்கும் தேசத்தை விரைவில் கடந்து சென்று இருவரும் வேங்கடாத்ரியை அடைகிருர்கள்.

(தொடரும்)

930

கண்ணகி

விசாகு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கண்ணகியின் வாழ்வு வளம் காணமுடியாது இருந்தது. தன்னை அவன் வெறுத்த வெறுப்பை யார் சந்துசெய்து வைத்தற் குரியார்? இதை எவ்வாறு பிறரிடம் கூறுவது என்பதை எண் ணும்பொழுதெல்லாம் இனி நம் வாழ்வுக்கு ஒரு 'விடிவெள்ளி' தோன்றப் போகிறதா என்ற ஐயந்தான். அத்தகைய மன உறுதிபடைத்தோர் யாருமிருப்பதாகவே அவள் எண்ணவு மில்லை.

கபிலர் கண்ணகி காரணமாகச் சந்துசெய்வித்தற்பொருட்டுப் பேகனிடம் வருகிறார். மன்னன்செய்த தவற்றை மறைக்காமல் இடித்துரைக்கும் ஆற்றல் இருந்தது இச் செஞ்சொற்புலவர்க்கு. இடித்துரை பொருள் பொதிந்த அறிவுரையாக இருந்தது. அறிவுரையும் ஆழ்ந்துணரத்தக்க நிலையில் இருந்தது. அவர் பாடிய பாடலின் முற்பகுதி,

"மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்
மாரியான்று மழைமேக் குயர் கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையர் சாரல்
புனத்தினை அயிலும் நாட."

என்பது. "மலைச்சாரலில் வாழும் மக்கள் விதைத்த பயிர் செழிக்கப் பலிதூவிக் கடவுளைப் பரவுகின்றனர். மலையினை மழை மேகங்கள் சூழ்கின்றன. மின்னி இடிக்கின்றன. வேண்டு மளவுக்கு மழையும் பொழிகின்றன. மழையின் மிகுதியைப் பொறுக்காத மக்கள் கடவுளைத் தொழுது பெய்தது போதும் மழை நிற்கக் கருணை செய்வீராக என வேண்டுகின்றனர். மழை நிற்கிறது. பெய்த மழை நின்ற பெருமகிழ்ச்சியால் தேன் கலந்த தினை உணவைத் தெவிட்டும்படி உண்ணுகின் றனர். இவ்வாறு மக்கள் வேண்டிய ஒன்றை விரும்பியவாறு பெற்று பெருமகிழ்ச்சிகொள்ளும் நாடனே" எனப் பேகனை

அழைக்கிருர் புலவர். அழைப்பிலுள்ள ஆழ்ந்த பொருள் உன் நாட்டு மக்கள் கடவுளைப் பேணி மழை பெற்றுக் களிப்படைகின்றனர். வேண்டுவனபெறும் மக்கள் நிறைந்த நாட்டில் உரிமையான ஒன்றைப் பெற விரும்பி ஒருத்தி கண்ணீர்சிந்தி நிற்றல் அறமா? என்று கேட்கும் கேள்வி அதில் அமைந்திருக்கிறது. அவரே மேலும் வெளிப்படையாகக் கூறுகிருர்,

"பேக..................
யார்கொல் அளியள்தானே நெருநல்
சுரனுழந்து வருந்திய ஒக்கல் பசித்தென
குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளியிரும் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னும் நின்மலையும் பாட இன்னது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோல் அழுதனள்." —புறம். 148.

'யாரோ தெரிகிலேன்; பசித்த சுற்றத்தினர்க்குப் பரிசுபெற்றுச் சென்று பசியாற்ற எண்ணி முரசென முழங்கும் அருவி சூழ்ந்த நின் அணிமலையைப் பாடி நின்னைக் காணவந்தேன். வரும் வழியில் சிற்றூரில் பெண்ணொருத்தி நான் உன்னைப்பற்றிக் கவிபாடும் பொழுதெல்லாம் கண்ணீர் சிந்தினுள். அவளது கண்ணீர் ஆனந்தக் கண்ணீரல்ல; அழுகைக் கண்ணீர். அவளுக்கு ஏற்பட்ட அவலம் யாதோ அறியேன். நான் மேலும் பாடினேன். அவளது அழுகை பெருகிற்றேயொழியத் தணியவில்லை. அவளது அழுகைக்குரல் வேய்ங்குழலின் ஓசையில் பொருந்தாத சுரங்கள்வந்து புகுந்தனபோல இருந்தது. அவட்கு ஏற்பட்ட குறையறிந்து போற்றுதல் நாடாளும் மன்னனுக்கு நல்லறம்' என்ருர் புலவர் மிக அழகாக.

அவள் பேகனுல் அன்பு பாராட்டத் தக்கவள் என்பதை அவளை யாரென்று குறிப்பிடாமலும் தானும் அறியாதவர்போலவும் இடித்துரைக்கின்ருர் புலவர். மன்னன் இது எங்கள் குடும்பசம்பந்தமானது. தாங்கள் தலையிடுதல் வேண்டாம் என்று கூறுவான் என்றெண்ணியோ என்னவோ 'ஒரு பெண் கண்ணீர் விடுகிருள்' என்று அழுத பெண்ணை வேறொருத்தியாகக் குறிப்பிட்டுக் கூறுகிருர் புலவர். மக்கள்

932

மகிழ்ச்சியோடு வாழ வழிசெய்யாதபொழுது இடித்துரைக்கும் மக்களாட்சியின் உரிமைக்குரல் அது. ‘அல்லற்பட்டாற்ருது அழுதகண்ணீர் அரசனது செல்வத்தைத் தேய்க்கும்’ என்ற வள்ளுவரின் கொள்கையும்கூட. எனவேதான் புலவர் இதனை அரசியல் கொள்கையாகக் கொண்டுவந்து குற்றஞ்சாட்டுகிருர்.

பெரும்புலவர் பரணர் அடுத்துப் பேகனைப்பார்க்கக் கபிலர் கடந்து வந்த காட்டுவழிகளில் வருகிருர். காட்டைக் கடந்து வரும் கவிஞர் கார்மேகங்கள் பொழியும் மழைக்கு வரவேற் பளிக்கும் வளமான காடுகளைக் காணுகிருர். கொடிதழுவிய கொம்புகள். பூத்துக் குலுங்கிப் பொலிவோடிருக்கும் காட்சி கள் இவற்றைக் காணுகிருர். மடப்பெடையோடு மயில்கள் ஆடுவதையும் பெண்மானேடு புள்ளிமான் துள்ளியோடுவதை யும் காணுகிருர். கவிதைபாடுகிருர்.

பேகனது அரசியற் சிறப்பும், அருங்குணங்களும், மயிலுக் குப் போர்வையளித்த அவனது மாண்பும், கொடைமடம்படும் அவனது குணங்களும், படை மடம் படாத தன்மையும், மறுமை நோக்காத கொடையும் இன்னிசைப் பாடலாய்ச் சிறிய யாழில் செவ்வழிப் பண்ணில் சிறந்தொலிக்கிறது. கண்ணகி இருந்த சிற்றூரையடைந்த செஞ்சொற் புலவர் பாடினர் பாராட்டுப் பாடல்களை. பாடிய பாட்ல்களைச் செவியால் பருகியோர் சிந்தை குளிர்ந்தனர். ஆனல் பரணரின் பாடல்களில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் துளிகளைச் சிந்தினள் கண்ணகி. பேகனின்மீதுள்ள வெறுப் பல்ல காரணம். இத்தகைய பெருமை படைத்த பேகனின் பேரன்புக்குத் தான் உரிமையின்றி வாழ்கிருேம் என்பதால். சிறப்புக்கூறும் பொழுதெல்லாம் கண்ணீர் சிந்திநின்ற கண்ணகியைப் புலவர் புரிந்துகொண்டார். பரணர் கண்ணகி யைப் பார்த்துக் கேட்கிருர். முன்போல ‘பேகனின் பேரன்பிற் குரியவர்கள்தாமே தாங்கள்’ என்று.

கண்ணகி பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ‘யான் அவனது அன்பை இழந்து நிற்கிறேன் என்னைப் போன்ற பெண் ஒருத்தியின் எழில் இன்று அவனது அன்பை மறைத்திருக்கிறது’ என்று கூறினள் துக்கந் தொண்டையை அடைக்க.

அரண்மனையை அடைந்த புலவர் 'அய்யகோ' என அலறினர். 'கொடிது' 'கொடிது' என்பன அடுத்து அவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகள்.. கொடிதென்பதையே பாட்டின் உயிராக வைத்து 'அருளாயாகலோகொடிதே' என்று அறிவுபுகட்டத் தொடங்கினர்.

> " அருளா யாகலோ கொடிதே இருள்வரச்
> சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
> காரெதிர் கானம் பாடினே மாக
> நீனறு நெய்தலிற் பொலிந்த உண்கண்
> கலுழ்ந்துவா ரரிப்பனி பூணகம் நனைப்ப
> இனைதல் ஆனு ளாக இளையோய்!
> கிளையை மன்எங் கேள்வெய் யோற்கென
> யாந்தற் றொழுதனம் வினவக் காந்தள்
> முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
> யாமவன் கிளைஞரேம் அல்லேம் கேள்இனி
> எம்போ லொருத்தி நலன்நயந் தென்றும்
> வருஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்." —புறம். 144.

கண்ணகி தன்னிடம் கூறியதாகப் புலவர் கூறும் கூற்றில் மிக்க பெருமிதம் காணப்படுகிறது. தன் குறையை அவளாகக் கூறவில்லை. யாங்கள் தொழுது கேட்டதற்குத்தான் கூறினுள் என்று கூறும் பரணர் பாடலின் பகுதிகள் கண்ணகியின் கற்பு நிலைமையை நன்கு விளக்கும். கணவனை இழந்துள்ள வருத்தத்திலும் பேகனையோ அவனுல் விரும்பப்பெற்ற மற்ற வளையோ வெறுத்துப் பேசவில்லை. தனக்கு எதிராக வந்தவளை 'எம்போல் ஒருத்தி' என்று தன்னையே ஒப்பிட்டுக் கூறும் அழகு சிறப்புடையது. கணவனைக் குறிக்கும் பொழுதும் வயங்கு புகழ்ப் பேகன் என்றே அழைக்கிருள்.

இடித்துரையைப் பேகன் ஏற்றுக்கொண்டதாகப்படவில்லை பரணருக்கு, மாற்றுப் பெண்ணிடம் கொண்ட மாருத அன்பு அவனை விரைவில் மனம் திரும்பச்செய்ய மறுத்தது. புலவர் மீண்டும் இடித்துரை கூறுகிருர். மயிலுக்குப் போர்வை யளித்த மடக்கொடையிலே மன்னன் மதியிழந்து செருக்கி நிற்கிருன் என்றெண்ணினர். மேலும் கூற ஆரம்பிக்கிருர்.

> " மடத்தகை மாமயில் பனிக்கும் என்றெண்ணிப்
> படாஅமீத்த கெடாஅநல்லிசைக்
> கடாஅயானைக் கலிமான் பேக "

என அழைக்கிருர். அழைப்பில் ஆழ்ந்துணரும் கருத்தும் நிறைந் திருக்கிறது. 'காரணமின்றிக் காட்டு மயிலுக்குப் போர்வை யளித்த நீ கண்ணீர் விட்டுக் கதறும் கண்ணகிக்கு அருள் செய்யாமை கொடிது' என்ற குறிப்பு அவர் விடுக்கும் அழைப்பி லமைந்துள்ளது. அதுமட்டுமல்ல, கண்ணகிக்கு அருளாதிருந் தால் உன் புகழ் கெடும் என்ற குறிப்பையும் 'கெடாநல்லிசை' என்ற சொற்குறித்து நிற்கிறது. பாடலை விற்றுப் பரிசில் பெற்றுச் செல்லும் நோக்கத்துடன் வந்துள்ள வாணிகப்பரிசிலன் அல்லன் நான். பசியோபட்டினியோ எனக்கில்லை எனக்கு ஏதாவது பரிசளிக்க நீ விரும்பினுல் அறம்மாருத ஆட்சியை நீ விரும்பினுல் இன்றேசெல் நான் இரந்து கேட்கும் பரிசிலும் இதுதான். மணிகள் கட்டிய அழகிய தேரில் ஏறிச் சென்று இன்னுதுறையும் உன் மனைவியை அழைத்து வந்து ஆட்சி நடத்துதல்தான். நீ செய்த தவறைப் பலரறியாமல் இருக்க இரவில் செல்' என்று கூறுகிருர்.

"பசித்தும் வாரேம் பாரமும் இலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந்துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோய்என
இஃதியாம் இரந்த பரிசில் அஃதுஇருளின்
இனமணி நெடுந் தேரேறி
இன்னுதுறைவி அரும்படர் களைமே" —புறம். 145.

அடுத்து அரிசில் கிழார் என்ற புலவர் அரசவை நோக்கி வருகிருர். பெறுதற்கு அரிய அணிகலனே ஆடையோ பெற விரும்பி வரவில்லை அவர். கூறுகிருர். வந்தவர் சிறிய யாழில் செவ்வழிப் பண்கலந்து பாடும் என் செந்தமிழ்க்கு நீ பரிசு நல்க விரும்பினுல் இதோ கேட்கிறேன் "அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவையின் கூந்தலில் பூத்துக்குலுங்கும் புதுமலர் உன்கையால் நீ சூட்டவேண்டும்" அதுவே என் பைந்தமிழ்ப் பாடலுக்கு நீ நல்கும் பரிசு. மயிலுக்குப் போர்வையளித்த வள்ளலல்லவா நீ? மறுக்கமாட்டாய் எனவே இதை விரைந்து செய். புறப்படு பொன்னெடுந்தேரில்.

"பரிசில் நல்குவை யாயின் குரிசில்நீ
நல்கா மையின் ஐவரச் சாய்
அருந்துய ருழக்கும்நின் திருந்திழை யரிவை

கலிமயிற் கலாபம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீத்
தண்கமழ் கோதைபுனைய
வண்பரி நெடுந்தேர் பூண்க நின்மாவே." —புறம். 146,

பெருங்குன்றூர் கிழார் என்ற பெரும் புலவரும் இக்கருத்தையே வலியுறுத்தி,

" புலம்புகொண்டு உறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு துறந்தமை யிருங் கூந்தல்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன்எம் பரிசில் ஆவியர் கோவே." —புறம். 147.

என்று இடித்துரைக்கிறார்.

மேலும் மேலும் புலவர்கள் கூறிய இடித்துரைகள் பேகனைத் தலைகுனியச் செய்தது. மறுமொழி பேசவும் மனம் இடந் தராத மன்னன் விரைபரித்தேருர்ந்து சென்று வேதனையால் துடித்திருக்கும் கண்ணகியைக் கட்டித் தழுவினான்; முத்த மிட்டான். அவனது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் அவனது உள்ளத்துரைகளை வெளிப்படுத்தினபோலப் பீறிட்டன. கண்ணகியும் தன் கணவனது அன்பின் பிணைப்பில் சிக்கினாள். கண்ணீர் சிந்தினாள். ஆனால் அவள் இப்பொழுது சிந்திய கண்ணீர் அழுகைக்கண்ணீரல்ல. ஆனந்தக்கண்ணீர்.

எட்டுத் தொகை நூல்கள்

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

936.

எட்டு

திரு. கே. இராஜகோபால சாஸ்திரியார் அவர்கள்
வடமொழிப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

எட்டு என்ற எண்ணிற்கே ஒரு தனிப்பட்ட சிறப்பு இருக்கிறது. ஈசன்முதல் எறும்பு வரையில் யாவருக்கும் அதில் தொடர்பு இருக்கிறது. முதலாவதாக முழுமுதற் கடவுளுக்கே அஷ்ட மூர்த்தி என்று பெயர். அவருக்கு பூமி, ஜலம், தேஜஸ் வாயு, ஆகாசம், சந்திரன் சூரியன், ஆன்மா என்ற எட்டும் உருவங்கள் எனப்படும். இம்மட்டோ! காமிகாதி ஆகமங்களில் ஈசனுக்கு அஷ்டாஷ்டமூர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. (8×8=64) இந்த அறுபத்துநான்கு மூர்த்தங்களுக்கும் தனித் தனி தியானம், ஸ்வரூபம், ஆயுதங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் ஈசன் எண் குணத்தான் எனவும் தன்வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என எண் குணங்களும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

இவ்விதமான ஈசனேயடைய யோகம், ஸ்துதி, நமஸ்காரம் முதலிய சாதனங்கள் இருக்கின்றன. இவைகளிலும் எட்டுத் தொடர்பு கொண்டிருக்கிறது. இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என வெட்டு அங்கமுடையது யோகம். வணங்கும் பொழுது ஸாஷ்டாங்கபாதமாய் அடியில் முடிபடும்படி பக்தன் வணங்குகிருன். முழங்கால், கால், கை, மார்பு, தலை, கண், வாக்கு, மனம் என்ற உள்ளும் புறமுமுள்ள அங்கங்கள் ஈசனிடத்து ஒருங்கே பதியவேண்டும். தவமியற்றுபவனுக்கு முக்கியமானது பிரமசரியம். பெண்களை நினைத்தல், கூறுதல், விளையாடுதல், பார்த்தல், தனிமையிற் பேசுதல், ஸங்கல்பம் (இவ்விதம் இவ்விதம் இருத்தல் வேண்டும் என மனத்தால் சங்கல்பம் செய்தல்) தீர்மானம், புணர்ச்சி, என எட்டு வகையான உணர்ச்சியின்மையே பிர்மசர்யமாகும்.

937

இல்லறத்திலுள்ளவர்களும் ஈசனை வழிபடுகின்றனர். இல்லறம் கொள்ளக் காரணமான மணவினையே எட்டு விதமாகக் கூறப்படுகிறது. பிரமம், பிரஜாபத்யம், தைவம் ஆரிடம், காந்தர்வம், பைசாசம், அஸுரம் என்பனவாகும். பிராமணனுக்கு ஸம்ஸ்காரங்கள் 40 கூறப்பட்டுள்ளன. அவைகளில்லாவிடினும் ஆத்ம குணங்கள் இருந்தால் அவன் உயர்ந்தவன் என்று கௌதமர் தனது தர்ம சூத்திரத்தில் கூறுகிறார். ஆத்ம குணங்கள், தயை, பொறுமை, பொருமை யின்மை, சுத்தி, அநாயாஸம், மங்களம், பேராசையின்மை, ஆசையின்மை என எட்டு வகையாகும். மாத்திரை ஸ்வரம் இவைகளில் தவறின்றி ஒரு சப்தத்தைக் கூறினாலும் நல்லுலகம் எய்துவான் என்று பதஞ்சலி மஹாபாஷ்யம் கூறுகிறது. அவ் விதமான சப்தங்களுக்கு இலக்கணம் ஆதியில் வகுத்தவர் எண்மர். இந்திரன், சந்திரன், காசகிருத்ஸனன், ஆபிசலி சாகடாயனர், பாணினி, அமரன், ஜைனேந்திரன் என ஆதியில் இலக்கணக்காரர் எண்மர் என்பர். எட்டு வியாகரணங்களில் பிரசித்திபெற்றது பாணினி வியாகரணம். அது எட்டு அத்தி யாயமுடையதாதலின் 'அஷ்டாத்யாயீ' எனப் பெயர்பெற்றது.

கஷ்டங்கள் எட்டுவிதம். அவைகளை நீக்குபவன் தக்ஷிணா மூர்த்தியாகவுள்ள அஷ்டமூர்த்தி என்று தக்ஷிணாமூர்த்தி ஸஹஸ்ர நாமம் அஷ்ட கஷ்டக்னேநம: என்ற நாமாவினால் உணர்த்து கிறது. அஷ்டாக்ஷரமஹாமந்திரத்தை உபதேசம் பெற்று ஸ்ரீமந் நாராயணனை வழிபட விரும்பிய இராமானுஜர் பட்ட கஷ்டம் எத்துணை என்பதை வைஷ்ணவ மதத்தைப் பற்றி யறிந்தவர் மறக்க முடியாது. ஆகமங்களில் ஈசனைப் பூசைசெய்ய எருக்கு சம்பகம், புன்னாகரம், நந்தியாவர்த்தம், பாதிரி, கரவீரம், கல்ஹாரம், தும்பை, என்ற எட்டுப்புஷ்பங்கள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. அஷ்ட மங்களங்களும் சொல்லப்படு கின்றன. கண்ணாடி, பூர்ண கும்பம், காளை, இரட்டைச் சாமரம், ஸ்ரீவத்ஸம், சுவஸ்திகம், சங்கம், தீபம் இவை எட்டும் மங்களப் பொருள்களென ஆகமங்கள் கூறும். சிங்கம், காளை, யானை, கலசம், விசிறி, கொடி, பேரீ, தீபம் இவை எட்டும் அரசனுக்குரிய மங்களப் பொருள் என ஸ்மிருதி கூறுகிறது.

கடவுள் வழிபாட்டிற்குரிய சாதனங்களில் முதன்மை யானது சரீரம். சரீரமாத்யம் கலுதர்ம சாதனம் என்று கவிகளிற்

938

சிறந்த காளிதாசன் சொல்லுகிருன். சரீரத்தை நல்ல நிலையில் இருக்கும்படிச்செய்ய வைத்திய சாஸ்திரம் பெரிதும் பயன் படுகிறது. அஷ்டாங்கஹ்ருதம் என்ற வைத்திய நூலில் சல்யம் முதல் வாஜீகரணம் முடிய எட்டுத் தந்திரங்கள் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. பொன், வெள்ளி, தாமிரம், ஈயம், இரும்பு, ரஸம், ரங்கம், தீக்ஷ்ணலோஹம் என்ற எட்டு லோஹங்களில் ஈசனுக்குப் பூசைசெய்யும்பொழுது ஸ்வர்ண புஷ்பமாக இடப்படுகிற பொன், அஷ்டாபதம் (எட்டுத்தாதுக் களில் நிலையுள்ளது) எனப் பெயர்பெறும்.

நியாய சபையில் அரசனுக்கு, நீதி, நீதிபதி, ஆலோசனை கூறுபவர் முதலிய எண்மர் துணை என்றும், நாடோறும் அரசன் உத்தரவு, தடை, தண்டனை, சுத்தி, சேர்த்தல், செலவிடல் விவகாரங்களைக் காண்டல் கொடுத்தல் என்ற எட்டுக் காரியங் களில் ஈடுபடவேண்டும் எனவும், அரசனுக்குரிய விரதங்கள் (இந்திரன், யமன், வாயு, சூரியன், அக்கினி, பூமி, ஜலம் இவைகளின் செய்கை போன்றவை எட்டு எனவும் சொல்லப் படுகிறது. மேலும் அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, பிராப்தி பிராகாம்யம், ஈசித்வம், வசித்துவம் என எட்டுவகை சித்திகள் உள்ளன வென்பது உலகறிந்த இரஹஸ்யம்.

வஸுக்கள் 8, பைரவர்கள் 8, திசை 8, இந்திரன் முதலிய திக்பதிகள் 8, ஐராவதம் முதலிய களிறுகள் 8, அப்ரமு முதலிய பிடிகள் 8, ஐச்வர்யம் 8, லக்ஷ்மி 8, இவ்விதம் எட்டு எட்டு என்று கூறிக்கொண்டே சென்ருல் பத்திரிகை யாசிரியரும் என்னை 'எட்டு எட்டு' என்று கூற நேரிடுமாதலால் இத்துடன் நிறுத்து கிறேன்.

" கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. "

-வள்ளுவர்.

மகாமகோபாத்யாய, டாக்டர்

சேக்கிழார் கண்ட இசைத்தமிழ் (5)

சங்கீதம், குடந்தை, திரு. ப, சுந்தரேசனுர் அவர்கள்

(முற்றொடர்ச்சி மலர் 14 இதழ் 11)

நம் தமிழ் மொழியின் ஒரு கூருகிய இசைத்தமிழ் மிகப் பழங்காலத்தில், முல்லை நில மக்களாலேயே முதன் முதலில் கண்டறியப்பட்டது. தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்குமே உரிய ஐந்திணைகளாகிய குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐவகை நிலங்களில் நடுநிலமாக இருப்பது முல்லையாகும். முல்லை, காடும் காட்டினைச்சேந்த இடமுமாகும். அங்கு வாழ்ந்த மக்களுள் குறும்பொறை நாடன், தோன்றல், இடையர், ஆயர் எனும் பிரிவினரில் இடையரும் ஆயருமே இயற்கையில் குழற்கருவியை ஆக்கி முதன் முதலில் இசைச் கலையைத் தோற்றுவித்தனர். இவர்கள் புரிந்த தொழிலில் குழலூதுதலும் ஒன்ருகும்.

பழைய முல்லைநில இடையருடைய வரன் முறையை பத்துப்பாட்டில் (பெரும்பாணுற்றுப்படையில்) நன்கு தெளிவுறக் காணலாம். இடையருடைய ஓர் பிரிவே ஆயர் எனக் கூறப்படும். இத்தகைய மிகப்பழைய குலமாகிய ஆயர் குலத்திற்குன் அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவராய ஆனுயர் என்பார் தோன்றினர். இவர் தோன்றிய நாட்டினை, நமது சேக்கிழார் பெருமான்,

"மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
வீடு பெருக்கிய போர்களின் மேக மிளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனு நீர்நாடு"—

என்க கூறியுள்ளாரன்றே! அன்றியும் இந்நாடு முல்லை நிலத்துள்ளது என்பதனை ஆசிரியர் "மடக்குல மான்மறியோடு குழித்தோடு மல்கு வளத்தது முல்லையுடுத்த மருங்கு" எனவும் "கண்வளர் காவிகள் பாய இருப்பன கார்முல்லைத் தண்ணசை வெண்முகை மேவு சுரும்பு" எனவும் குறிப்பிடுவதை நன்கு அறியலாகும்.

இந்நாட்டிற் பிறந்த ஆனயர் "அன்புறுகானத்தின் மேவு துளைக்கருவிக் குழல் வாசனை மேற்கொள்வது" இயற்கை யன்றோ! அவ்வாறு விரும்பிய ஆனயரால் எவ்வாறு குழற் கருவி ஆக்கப்பட்டது என்பதனை நம் தெய்வச் சேக்கிழார்

முந்தை மறை நூன்மரபின் மொழிந்தமுறை யெழுந்தவேய்
அந்தமுத னலரண்டி லரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீ ரிடையீட்டி னங்குலியெண் களினமைத்து

எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்தமுறை யேழிசையின் சுருதிபெற வாசித்துச்

செல்கின்றார் எனக் கூறியபகுதியால் பண்டைய முல்லை நில மக்களாம் ஆயர் குலத்தினர் ஆக்கிய குழற்கருவியின் இலக்கணம் இற்றை நாள் நம்மனோர்க்கு மிகத் தெளிவாக விளங்கி விடுகிறது.

இனி, பாடலில் அமைந்த சொற்களின் பொருளை, இயல்பு மட்டும் இசைத்தமிழறிவோடு, பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, எனும் மூவகையுரையால் கொண்டு கூட்டிப் (பொருள்காணப்) பொருத்தி எழுத முற்படுவோம்.

பதவுரை

முந்தை	=	பழைய
மறைநூல்	=	நரம்பின் மறைநூல் (இங்கு இசைத்தமிழ் ஆதலால்)
மரபின்	=	மரபு முறையில்
மொழிந்த	=	கூறிய
முறையெழுந்த	=	முறைப்படி எழுந்த
வேய்	=	மூங்கிலை (கழைத்துண்டினை)
அந்தமுதல்	=	முதல் முடிபு சமனுக நறுக்கி
(அரிந்து)	=	இதனை இரண்டிடத்தும் கூட்டுக
நாலிரண்டில்	=	(எட்டில்) இதில் அதாவது இருபது விரல்

941

அரிந்து	=	நீளமுள்ள கழைத்துண்டில், தூம்பு முகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய் விட்டு, இம் முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவில்நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிட்டு
நரம்பு உறு	=	இசை நரம்புகள் உற்ற
தானம்	=	இடம், அதாவது ஏழிசைநிலை
வந்ததுளை	=	இசைநிலைவந்த எழுதுளையை
நிரையாக்கி	=	வரிசைப்படுத்தி, அதாவது மேற் கூறிய எட்டுத் துளைகளில் ஒன்று முத்திரை என்று கழித்து நீக்கி மற்றை ஏழினையும் முறையாக
வாயு முதல்	=	துளைகளின் பெயர் முறையில் வாயுமுதல்
வழங்குதுளை	=	வழங்கிவரும் துளைகளை
அந்தமில் சீர்	=	முடிவுபெருத சீராக = அதாவது சீர் இயைந்து இற்றது சீராக
இடையீட்டின்	=	துளைகள் ஒவ்வொன்றின் இடையில்
அங்குலி எண்களில்	=	அமையவேண்டிய அளவு (அங்குல அளவு) எண்களை
அமைத்து	=	அறிந்துணர்ந்து அமைத்து
எடுத்தகுழற்கருவியினில்	=	செவ்வையாக ஆக்கப்பட்டு எடுத்த அந்தக் குழற்கருவியில்
தொடுத்த முறை	=	இசைநிலை தொடுக்கப் பெறும் முறையில் எழுவகை இசையில்
ஏழிசையின்	=	ஏழுவகை இசையில்
சுருதிபெற	=	அலகு நிலை முறையே இயல்பாகப் பெற
வாசித்து	=	ஊதிப் (பெருமானின் ஐந்தெழுத்தினை நினைந்து)
செல்கின்ருர்	=	பழகி வருகின்ருர்.

பொழிப்புரை

ஆயர் குலத்துதித்த ஆனுயர், அன்புறு கானத்தின் மேவு துளைக்கருவியாகிய குழல் வாசனை மேற்கொண்டு, மிகப் பழைய இசைத்தமிழ் நூலாகிய நரம்பின் மறைநூல் கூறியுள்ள மரபு வழுவா முறையில் முறைப்படி கானில் எழுந்த கழை களில் முதலும் முடிபும் அகலாது குறுகாது சமமான நிலையில் ஒன்றைத் துண்டாக நறுக்கி எடுத்து அதனை இருபது விரல் அளவாகச் சரிசெய்து அதில் தூம்பு முகத்தின் இரண்டு விர லளவு நீக்கி முதல்வாய் விடுத்து இம்முதல்வாய்க்கு ஏழு ஏழுவிரலளவு விட்டு வளைவாயினும் இரண்டு விரலளவு நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலளவில் எட்டுத்துளையிட்டு அதாவது ஏழு இசைநிலைகள் இசை நரம்பின் ஒலி உற்ற முறையில் ஒலிதரும் அளவில் (துளை) இட்டு மேற்கூறிய எட்டுத் துளைகளில் ஒன்று முத்திரை என்று கழித்து நீக்கி மற்றைய ஏழுதுளைகளைக் குறைவாகத் துளைகளின் பெயர் முறை யில் வாயு முதல் வழங்கி வரும் துளைகளில் எழுப்பப்படும் ஒலியின் சீர் அமைதி முடிவுறுத நிலையில், அதாவது ஒரு துளையின் ஒலியின் அளவு இயைந்து இற்ற இடத்திலேயே மற்ற (அடுத்த) துளையின் ஒலி உண்டாகுமாறு அத்துளைகளில் ஒவ்வொன்றின் இடையளவு அமைக்க வேண்டிய முறையில் அறிந்துணர்ந்து அமைத்து (த்தன்னுல்) ஆக்கப்பட்ட அக்குழற் கருவியில் இசைநிலை தொடுக்கும் முறையில் ஏழிசைகளும் அதனதன் அலகு நிலைகள் இயல்பாகப் பொருந்தும் முறையில் எம்பிரான் எழுத்தைந்தையும் உளத்திற்கொண்டு ஊதிமகிழ்ந்து பழகி வருகின்றூர் என்பதாம்.

"யாவரும் பெற உறும் ஈசன்"

(திருவாசகம்)

சிவபெருமானை எல்லோரும் பெறலாம். 'வானேர்க்கு அரிய மருந்தே' எனினும் 'ஏனேர்க்கு எளிய இறைவ'னே சிவன். 'அருமையில் எளிய அழகு' அவன். அவனைக் காண்பன இவ்வூனக் கண் அல்ல. அக்கண் ஞானக்கண். அது திருவருள். அவனருளாலே அவன்தாள் வணங்குதல் வேண்டும். அவ்வழியில் அவன் 'யாவரும் பெற உறும் ஈசன்'. வேற்றுவழியில் 'தேவரும் அறியாச் சிவன்'.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

943

வரலாறு - கலை

தமிழரே முதலோர் தமிழே முதன்மொழி

3

திரு. மு. இராமகிருட்டினன்

வித்துவான் முடிவுநிலை, தருமைத் தமிழ்க்கல்லூரி.

(முன் இதழ் தொடர்ச்சி)

முன்னர்க் காட்டிய 19 தமிழ் தரும் சான்றுகளாலும், 8 விஞ்ஞானம் தரும் சான்றுகளாலும், குமரிக்கண்டம் அல்லது இலெமூரியா கண்டம் ஒன்று இருந்தது எனவும், அங்குத் தமிழ் மக்கள் சிறப்புற வாழ்ந்தனர் எனவும், பின்னர் அப்பகுதி கடலில் மூழ்கியது எனவும் உறுதியாக அறிந்தோம்.

மேலும் ஆப்ரிக்காவில் போபோர்ட் (Beaufort) குழுவைச் சார்ந்த செடிவகை, உயிர்வகைகள், இந்தியாவிலுள்ள பஞ் செத்துக்கள் (Pahchets), கத்தினிகள் (Kathnis) என்பனவற்றை யும், ஆப்பிரிக்காவிலுள்ள உவிட்டனெஜ் குழுவைச் சார்ந்தவை இந்தியாவிலுள்ள இராஜ்மகால் செடிகளையும் பெரிதும் ஒத் திருக்கின்றன.

சுராசிக் (Jurassic) உயிர்க்குறிகளுள் கட்சைச் சார்ந்தவை, பெரிதும் ஆப்ரிக்க இனங்கள் போன்றே இருக்கின்றன என்று பேரறிஞர் ஸ்டோலீஸ்கா (Stoliska) உரைக்கிறார். இவருடன் உடனிருந்து உழைத்த திரு. கிரீஸ்பக் (Mr. Griesbach) ஆப் பிரிக்காவில் உம்தபுனி ஆற்றின் கரையில் கண்ட 35 செடி வகைகள் 22 இந்திய வகைகளை ஒத்துக் காண்கின்றன என அறிவித்துள்ளார்.

இன்னோரன்ன பல்வேறு காரணங்களான் தற்காலத் தமி ழகத்தின் தெற்கே பரந்து விரிந்ததோர் நிலப்பரப்பு ஒன்று உறுதியாக இருந்தது எனவும்; அதன்கண் தமிழர் தலைசிறந்து, சங்கம் அமைத்து, தமிழை வளர்த்து, ஓங்கிய நல்லாட்சியை நடாத்தினர் எனவும் அறிகிறோம். கடல் கொந்தளிப்பால்

அந்நிலம் சிறிது சிறிதாகக் கடலால் கொள்ளப்படவே, அங்கிருந்தோர் அனைவரும் பல்வேறுப் பகுதிகளுக்குமாக பரவினர் எனவும் அறியலானோம்.

மனிதர்களது முதல் பிறப்பிடம் இலெமூரியாவே !

இலெமூரியா கண்டம் அல்லது குமரிக் கண்டத்தில் தோன்றிய மனிதன்தான் முதல் மனிதன் எனவும், குமரிக் கண்டத்தில் தோன்றியமையால் இவர் தமிழரே எனவும் எளிதில் நாம் அறியலாம். இருப்பினும் இன்னும் சில காரணங்களை ஆராய்வோம்.

மனிதனின் மூதாதைகளாகக் கருதப்படும் இலெமூர், உராங் உடான், சிம்பான்ஸி, கொரில்லா, கிப்பன் போன்றவை இப்பகுதியில்தான் காணப்படுகின்றனவே யன்றி வேறெங்கும் காணப்பட்டதுமில்லை, காணப்படுகிறதுமில்லை. இவற்றான் உறுதியாக மனிதனது தோற்றம் இப்பகுதியில்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமேயன்றி, மனிதனது முதல் சின்னமே இல்லாத இடத்தில் நிகழ்ந்தது என்று கூறல் அமைவுடையதாகாது.

இரண்டாவதாக; இதுவரையிலும் கிடைத்தவற்றுளெல்லாம் மிகப்பழங்கால மனித எலும்புக்கூடுகள் இப்பகுதியிலேதான் கிடைத்துவருகின்றன. இதனைக் கொண்டே பல மேனாட்டு வரலாற்று ஆசிரியர்கள் இலெமூரியாவே மனிதரது முதல் பிறப்பிடம் என உறுதியாகக் கூறுவாராயினர். "இந்திய ஐரோப்பிய இனங்களதும் மக்களதும் தோற்றம்" என்ற நூலிலே ஆசிரியர் வி. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், "இந்திய இனமும், ஐரோப்பிய இனமுமாகிய இரண்டு இனங்களும் தோன்றிய இடம் ஐரோப்பாவோ அல்லது ஆசியாவோ இல்லை. தென்பூமண்டலத்திலே இந்துமகா சமுத்திரத்தின் அடியில் அமிழ்ந்துபோன, மனிதன் பிறந்து வளர்ந்த தொட்டிலான நிலப்பரப்பே (இலெமூரியா) அவ்வினங்கள் தோன்றிய இடமாகும்" என்று குறித்துள்ளமை நாம் நன்கு நோக்கத் தக்கது. [**"The home of the those two races is neither in Europe not in Asia, but in the far off Human Cradle situated in the Southern Hemisphere now sunk beneath the Indian Ocean"—The Crigin of the Indo-Europen races and peoples. P. 3**].

"நிலநூல் விஞ்ஞானக் கூற்றுப்படி கொண்ட்வாறு கண்டம் எனப்படும் இந்து மகா சமுத்திரத்தில் அமிழ்ந்து அழிந்த, மனிதனின் முதல் பிறப்பிடமான நிலப்பகுதியே (இலெமூரியா) இந்து ஐரோப்பிய இனங்களும், பிறமக்களும் பிறந்து வளர்ந்த முதல் இல்லமாகும்" என்ற கருத்தை இதே ஆசிரியர் வேறோரிடத்தில் குறிப்பிடுகின்றார். ["...their home is in the last surviving moiety of the Human Cradle known to geological science as the Gondwana continent" Ibid. P 15]

கோண்ட்வாறு கண்டமும் (Gondwana Contenent) இலெமூரியா கண்டமும், குமரிக் கண்டமும் கிட்டத்தட்ட ஒரே இடத்தைக் குறிப்பவையே. இருப்பினும் கோண்ட் வாறு கண்டம் என்று அந்நிலப்பகுதிக்கு எவ்வாறு அப்பெயர் வந்தது எனச்சிலர் ஐயுற நேரலாமாதலான் அதுபற்றி சிறிது ஆராய் வோம்.

1922ல் ஜெர்மனி நாட்டைச்சார்ந்த பேராசிரியர் ஆல்பிரட் வைஜேனர் என்பவர் கண்டங்கள் அக்காலத்தில் இருந்த நிலைகளைப்பற்றி ஆராய்ந்து எழுதினர். இதன் ஆங்கிலப்பதிப்பு 1924ல் வெளியானது. அதில் ஆதிகாலத்தில் (Palaeozoic Era) கண்டங்களின் நிலைகளைத் தெளிவாய் கூறுகின்றார். தென் அமெரிக்கா, விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள தென் இந்தியா, ஆஸ்திரேலியா, அண்டார்ட்டிகா முதலிய பகுதிகள் யாவும் ஒன்றாக இணைந்திருந்தன எனவும், இவையாவும் இணைந்த பெரிய நிலப்பகுதிக்கு கோண்டுவாறு நிலம் (Gondwana land) எனப் பெயரிட்டு அதனைக் குறித்துள்ளார்.

இவ்வாறே வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாவின் மற்றப் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மற்றொரு நிலப் பரப்பாக இருந்தது. இதனை "லாரேஷியா" (Laurasia) என அழைத்தார். வடக்கேயுள்ள லாரேஷியாக் கண்டத்திற்கும், தெற்கேயுள்ள கோண்ட்வாறு கண்டத்திற்கும் இடையே டைதிஸ் (Tethys) என்னும் கடல் ஒன்று இருந்தது எனவும் அவர் கூறியுள்ளார். லாரேஷியா, கோண்ட் வாறு ஆகிய இரு பகுதிகளையும் சேர்ந்த நிலப்பகுதியை ஆசிரியர் ஆல்பிரட் வைஜேனர் பாங்கேயியா (Pangaea) எனக் குறித்துள்ளார்.

946

பாங்கேயியாவின் தென் பகுதியில் கடல் கொந்தளிப்பு வெகு வான அளவில் தோன்றவே ஆப்பிரிக்கா தனிக் கண்டமாக விளங்க ஆரம்பித்தது. இக்காலத்தை மொசோசாயிக் என்னும் (Mesozoic Era) மத்தியகாலம் என்பர். வடபகுதியில் பிரளயம் தோன்றி அமெரிக்கா தனியாகப் பிரிந்தது டெர்ஸியரி (Tertiary Era) என்னும் மூன்ரும் காலத்தில் நிகழ்ந்தது என ஆல்பிரட் வைஜேனர் அறிவிக்கிருர்.

இந்தோ ஐரோப்பிய இனத்தினர் தோன்றிய இடமாயும், மக்கள் இனத்தின் முதல் பிறப்பிடமாகிய தொட்டிலாகவும் விளங்கும் நிலப்பரப்பு(குமரிக்கண்டம்)இந்துமகாசமுத்திரத்துள் அமிழ்ந்தது கி. மு. 5500ல் என்று அந்நூலாசிரியர் வேருேரிடத்தில் கூறுகின்ருர். ("......that the last surviving moiety of the Cradle in which the Indo-European Progenitors are located was sunk beneath the Ocean in 5500 B c.")

இயற்கையியல் நூல் வல்லுநர்களான ஹேக்கல் (Haeckel) ஸ்கிளாட்டர் (Sclater) போன்ற பேராசிரியர்கள் மனிதன் பிறந்து வளர்ந்த முதல் இல்லம், இந்திய ஆப்பிரிக்க கண்டமாக (குமரிக்கண்டம்) விளங்கி, இந்து மகா சமுத்திரத்தில் மூழ்கிய அப்பெரிய நிலப்பகுதியே யாகும் எனத் தெரிவிக்கின்றனர். (Naturalists like Haeckel and Sclater have dimly located the home of man in the Indo-African Continent now lying submerged beneath the waters of the Indian Ocean. Ibid. P. 34)

தென்ஞடுபோந்து தென்மொழிக்காகப் பெரிதும் உழைத்த கால்டுவெல் பாதிரியார் தமது திராவிட ஒப்பிலக்கணத்தில் தமிழ்மொழிக்கும் மேற்கத்திய மொழிகளுக்குமுள்ள ஒற்றுமைகளை விரிவான முறையில் விளக்கிக்காட்டி, இதனுல் இவ்விரு மொழிகளும் ஒரு பொதுவிடத்தே தோன்றியவர் என்றும், பின்னர்த்தான் இவர்கள் பிரிந்துசென்றிருக்கவேண்டும் என்றும் கூறியிருப்பது மிகவும் அறிதற் பாலதாம். (Caldwell in his work Dravidian Grammer has not only pointed out the intimade relationship between Tamil and the Western languages but has also stated that the proginitors of these two

peoples must at one time have lived in intimate contact with one another in a common home - The Crigin of the Indo European Races and Peoples P. 35)

கோண்ட்வாஞ கண்டமானது (குமரிக்கண்டம்) குறுகிய கால்வாய் ஒன்ருல் வடதென்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந் தது என்பதும் அந்நூலால் தெரியவருகிறது (The Gondwana continent is devided into a northern and southern half separated by a narrow channel of water. Ibid. P. 40)

இதனை வேறுவிதமாக ஆல்பிரட் வாலஸ் (Alfred wallace) என்பவர் இலெமூரியாவில் சுமத்ரா, சாவா, போர்னியோ முதலிய பெரிய தீவுகள் கிழக்குப் பகுதியை அதாவது இன்றைய ஆசியாக் கண்டத்தைச் சார்ந்தவை என்றும். செலிபஸ், மொலுக்கஸ், நியூகினி, சாலமேன் தீவுகள் ஆஸ்தி ரேலியாவுடன் சேர்ந்திருந்தது என்றும்; இவ்விரு பகுதிகளையும் பிரிக்கும் நீர்நிலை பலிஜ்யாம்பக் தீவுகளிடையேயுள்ள கால் வாயாகும் என்ருர்.

இயற்கையியல் நூல்வல்லுநர்களும்,நிலநூல்வல்லுநர்களும் கோண்ட்வாஞ (இலெமூரியாகண்டம்) கண்டம்தான் மனிதன் பிறந்த முதல்வீடு என்பதை நிருபிக்க போதிய அளவு ஆதாரங் களையும், செய்திகளையும் சேர்த்து வைத்திருக்கின்றனர் என்ற உண்மையையும் அந்நூலால் நாம் அறிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். (Naturalists and Geologists have gathered a lot of information about the Gondwana continent which is the home of man. Ibid. P. 41)

கோண்ட்வாஞ கண்டம் பிலியோசீன் காலத்தின் (Plioc cene Period) முடிவில்தான் கடலுள் அமிழ்ந்தது. (Gondwana continent went beneath the Ccean by the and of the Pliocene Period. Ibid. P. 41)

கோண்ட்வாஞ கண்டமானது தமிழ்நூல்கள் கூறுவது போலக் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் கடலால் கொள்ளப் பட்டுள்ளது என்பதும் அந்நூலால் நன்கு விளங்குகிறது. ("......that the Gondwana continent is seen gradually going down bit by bit beneath the bed of the Ccean." Ibid. P. 44)

948

இதுவரையிலும் கூறிய காரணங்களால் நாம், மனிதர்களது முதல் பிறப்பிடம் இலெமூரியா அல்லது குமரிக்கண்டமே எனத் துணிந்து கூறலாம். மேலும் ஹெரால்டுவீலர் (Harold wheeler. Hon. D. Litt. F. R. Hist. S) என்ற பொது ஆசிரிய ரால் தொகுக்கப்பெற்ற நூலான 'வாழ்வின் அற்புதம்' (The Miracle of Life) என்ற நூலில், ஆசிரியர் இ. என். பாலேயிஸ் பி. ஏ. (E. N. Fallaize B. A.,) என்பவர் டார்வின் (Darwin) கூற்றினை நோக்கி, "இலெமூரியா பகுதியில்தான் பெரிய காட்டு மனிதக் குரங்குகளும், கொரில்லா, சிம்பான்ஸிபோன்ற பிறமனிதக் குரங்கினங்களும் காணப்படுகின்றமையாலும், மனிதன் முதலில் தோன்றுவதற்கான வசதிகள் இங்குதான் நிறைந்து காணப்படுகின்றமையானும், இங்கு பெரிய மனிதக் குரங்குகள் நிறைந்திருப்பதே இவ்விடத்தின் தன்மையையும், தட்பவெப்பநிலையையும், வாழ்க்கை வளர்ச்சிக்கு ஏற்றவாறு இவ்விடம் அமைந்திருப்பதையும் தெரிவிக்கின்றது. அதனால் இப்பகுதியே மனிதனது முதல் பிறப்பிடமாகும்" என்ற கருத்தை அறிவிக்கிறார். ("On behalf of Africa it has been argued and this is the view to which Darwin lent his support, that as it is the home of the great forest apes, the Gorilla and the Chimpanzee, it is the most probale region for man's first appearance. The mere fact that the great apes have survived here is sufficient indication that the conditions of place and climate were favourable for such a development." The Miracle of Life. P. 306)

இதுவரையிலும் கிடைத்தவற்றுளெல்லாம் மிகப் பழங்கால மனித எலும்புக்கூடுகளுள் ஒன்று இப்பகுதியிலுள்ள சாவகத் தின் நடுவிலிருக்கும் வால்கானிக் (Valcanic) மலை அருகில் ஓடும் சோலோ (Solo) ஆற்றின் கீழ்கரையில் 1894-ல் யூகின் துபோயிஸ் (Eagene Dubois) என்பவரால் கண்டெடுக்கப் பட்டது. ஒரு மண்டையோடு, ஒரு இடது தொடை எலும்பு, இரண்டு கடைவாய் பற்கள் ஆகிய இவை கிடைத்தன. உயிர்நூல் வல்லுநர்கள் அம்மண்டையோட்டைப்பற்றி ஆராய்ந் ததில், அறுவர் அம்மண்டையோடு மனித மண்டையோடே என்றும், வேறு ஆறு அறிஞர்கள் அம்மண்டையோடு மனிதக் குரங்கை யொத்த மனிதனது எனவும், இன்னும் எட்டு

அறிஞர்கள் அதனை ஆராய்ந்து அம்மண்டையோடு மனிதனுக்கும், மனிதக்குரங்கிற்கும் இடைப்பட்ட பிராணியின் மண்டையோட்டைச் சார்ந்ததே எனவும் முடிவு கட்டினர். இதனைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் நிமிர்ந்து நிற்கும் குரங்கு மனிதன் என்னும் பொருளில் 'பிதிகந்ரோபஸ் எறக்டஸ்' (Pithecanthropus erectus) என்பர். ("Under the impulsion of this conception of the origin of man, the 'Pithecanthropus erectus' - ape-man who stood erect on his feet - became the object of scientific search. Between 1891 and 1894 Dr. Eugene Dubois discovered on the east bank of the solo, a stream which rises among the Valcanic hills in the centre of Java, a skull - cap, a human thigh - bone (left) and two molar teeth which he claimed to belong to an animal midway between anthropoid apes and man. This skull-cap has been much discussed by biologists; six authorities have held the skull to be human, six have decided it to be simian, i e , to belong to a man like ape, while light have concluded that it is intermediate i.e., a missing link" - The Stone age in India. P. T. S.)

இந்த சாவா மனிதனின் காலம் நூருயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கிறது மனிதனது உதயம் (Men of Dawn) என்ற நூல். இதனைக்கொண்டே 'நாகரீகத்தின் தோற்றம்' (The Origin of Civilization) என்ற நூலில் பேராசிரியர் எலியட்ஸ்மித் (Eilliot Smith) என்பவர், பல நூருயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தோன்றினன் என்று ஆராய்ந்து கூறுவாராயினர். இன்னும் மனிதனது தொண்மை (Antiguity of Man) என்ற நூலில் சாமுவேல் லயங் (Sameul Liang) என்பவர் இதனையே அறிவித்துள்ளனர்.

சாவாவைத்தவிர இலெமூரியா கண்டத்தைச் சார்ந்த வட, தென் ஆப்பிரிக்காவிலே டாங்க்ஸ் (Taungs) என்ற இடத்தில் பேராசிரியர் ரேமாண்டு டார்ட் (Raymond Dart) என்பவர் 1925-ல் மனிதனுக்கும், மனிதக் குரங்குக்கும் தொடர்புடையதான தொன்றின் எலும்புக் கூடொன்றைக் கண்டெடுத்தார். 1936 ஜுலே மாதம் டாக்டர் ஆர். ப்ரூம் என்பவர் டிரான்ஸ்வாலில் (Transvaal) இன்னும் சற்று முன்னேறியதொன்றின் எலும்புக் கூட்டைக் கண்டெடுத்தார்.

950

("......discorered at Taungs. South Africa, in 1925 by Professor Raymond Dart, comes so near the human line as to have been considered by its dis-cverer to be the 'missing link' between man and the apes." "A later and still more advanced form was found by Dr. R. Broom in the Transvaal in July, 1936." The Miracle of Life, Man's Family Tree. P. 306)

ஆசிரியர் இ. ஒ. ஜேம்ஸ் (E. O. James) என்பவர் 'மனித விஞ்ஞானத்தின் முன்னுரை (Introduction to Anthropology) என்ற நூலில் வட இந்தியாவிலுள்ள சிர்வாலிக் குன்றுகளில் (Sirwalik hills) கிடைத்த பாலியோபிதிக்கஸ் (Paleeopithecus) எனப்படும் பூர்வீக மனிதக்குரங்கின் எலும்புகளை ஆராய்ந்து, இப்பகுதியில் வெகுகாலத்திற்கு முன்னரே தெற்கேயிருந்த மனிதக்குரங்குகள் இங்கு வரத்துவங்கிவிட்டன என அறிவிக்கிறார்.

இவ்வண்ணமாக மிகப்பூர்வீக கால மனிதர்களது எலும்புக் கூடுகள் யாவும் இலெமூரியாவைச் சார்ந்த நாடுகளிலேயே தான் காணப்படுகின்றன என்பதை அறியலானோம். அதனால் இப்பகுதிதான் ஆதிமனிதருடன் தொடர்புடையதாகக் காணப் படுகிறது. தொடர்புடையதை நோக்க இப்பகுதிதான் மனித னது முதல் பிறப்பிடமாக இருந்திருக்க வேண்டும் என்றாகிறது. இதனாலும், நாம் முற்கண்டபடி இலெமூரியாவே மனிதரது முதல் பிறப்பிடம் என்ற கொள்கை உறுதிப்படுகிறது.

அழிந்த இலெமூரியா (The Last Lemuria); மனித இனத் தின் தொட்டில் (The Cradle of the Human Race); இந்து - ஐரோப்பிய இனங்களதும், மக்களதும் தோற்றம் (The Origin of the Indo - European Races and Peoples); வாழ்க்கையின் அற்புதம் (The Miracle of Life); முதலிய நூல்கள் பல கார ணங்கள் காட்டி மனிதனது முதல் பிறப்பிடம் இலெமூரியா அல்லது பண்டைத் தமிழகமான குமரிக்கண்டமே எனக் கூறு கின்றன. ஆகவே பண்டைத் தமிழகத்தில் முதலில் தோன்றி யவர் தமிழராகத்தானிருக்க முடியுமே தவிர வேறு யாரும் இருக்க முடியாது என்பது மலையிலக்கு.

எரிகுழம்பும் வெப்பமுமாக இருந்த பூமியில், எப்பகுதி முதன் முதலாகக் குளிர்கிறதோ அப்பகுதியில்தான் உயிர்கள் முதலில் தோன்ற முடியும் என்பதை நாம் அறிவோம். பூமியின் சுழற்சியை நோக்குமிடத்து இதன் நடுக்கோட்டுப் பாகந்தான் முதலில் குளிர்ச்சியுறுமேயன்றி வேறிடமாகாது. ஆகவே மனிதனின் தோற்றமும் ஆதி வளர்ச்சியும் இங்குதான் நிகழ்ந்திருக்கும் என்பதில் ஐயமின்று.

இனி இந்த இலெமூரியாவில் முதலில் தோன்றியோர் தமிழரே என்பதை முன்னரே அறிந்தோமாயினும் இன்னும் சற்று அதிகமாக ஆராயலாம். இலெமூரியாவின் நடுவில் 700 காததூரம் 49 நாடுகளைகொண்ட குமரிக்கண்டம் உறுதியாக இருந்தது என்பதை தமிழ்நூல் அறுதியிட்டுக் கூறுவதை முன்னர் அறிந்தோம். இன்னும் தமிழின் சிதைவுகளே இலெமூரிய நாடுகளில் காணப்படுகின்றன. தமிழரது தாய்வழி உரிமை, எழுத்துமுறை, பண்பாடு, விளையாட்டு முறையாவுமே பிற இலெமூரிய நாடுகளில் காணப்படுகின்றன. நெல்லை மாவட்டத்தில் நெல்லைக்கும் ஸ்ரீவைகுண்டத்திற்கும் இடையில் நெல்லையிலிருந்து 16 கல் கிழக்கிலும், ஸ்ரீவையிலிருந்து 2 கல் மேற்கிலுமாக அமைந்திருக்கும் ஆதிச்சநல்லூரிலுள்ள சிறிய மலைப்பறம்பு ஒன்றில் அதன் வடக்குப்புறத்தில் கிடைத்த மனித மண்டையோடும், பிற இலெமூரியச் சிதைவு நாடுகளிலுள்ள மண்டையோடும் ஒத்துக் காணப்படுகின்றன என்று புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள் அறிவித்துள்ளனர். இவற்றுலும் இலெமூரியாவில் தோன்றிய முதல் மனிதர் தமிழரே எனவும், அவரே இங்கிருந்து பிற இலெமூரியச் சிதைவு நாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பதும் நன்கு தெளிவாகிறது.

மேலும் 'இந்தியாவும் பசிபிக் உலகமும்' (**India and the Pacific World**) என்ற நூலில் கல்கத்தா பல்கலைக்கழக சரித்திரப் பேராசிரியர் காளிதாஸ் நாயக் என்பவர் நியூசிலாந்தில் ஒரு கிராமத்திலுள்ள மிகப்பூர்வீக காலத்தைச்சார்ந்த நாக்கு அற்றுப்போன பெரிய மணி ஒன்றினை ஆராய்ந்து, அது தமிழரதே என்கிருர். இதிலிருந்து நியூசிலாந்திற்கு அருகில் மிகப் பழங்காலத்தில் வாழ்ந்தோர் தமிழரே என்பதும் அக்

952

காலத்தில் அவ்வளவு பெரிய மணியைக்கொண்டு செல்ல வேண்டுமானால் இவரது திறமையும் தெளிவாகிறது.

இன்னோரன்ன எண்ணிறைந்த காரணங்களால் இலெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்தோர் உறுதியாகத் தமிழர்தான் என்பதும், முதல் மனிதர்கள் இவர்களே என்பதும் பெறலாயிற்று. இலெமூரியரது - ஏன் - தமிழரது பூர்வீககாலம் இன்றைக்கு நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து 50,000 ஆண்டுகள் முடிய உள்ள காலம் என வின்சன்ட் ஸ்மித், எலியட் ஸ்காட் போன்றோர் அறிவிக்கின்றனர்.

திருவாசகம்

உயிர் உடலுள் இருப்பது தெரியும். அவ்வவ்வுயிர் அறியக்கூடியதாயினும், சிற்சிலவே அறிகின்றன. பூவின் மணம் புலப்படுகின்றது. உயிரையும் மணத்தையும் கைப்பற்றிக் காட்டுதல் இயலுமோ? கடவுளும் அவைபோலப் பிடித்துக் காட்டக்கூடிய நிலையில் இல்லை. கடவுள் இருப்பது புலப்படுகின்றது. கண்டதே காட்சி; கொண்டதே கோலம்; பெற்றதே பிறவிப்பயன் என்று பொழுதுபோக்குவது பேதைமை. அடியார் இணக்கம் அப்பரம்பொருள் இருக்கும் – நிற்கும் நிலையைக் காட்டிக் கொண்டிருக்கும். அடியாரல்லாதவர் கூட்டம் பிறவித் துன்பத்துக்கு வித்து.

“உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
 எழுதரு நாற்றம் போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
 அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
 பித்தர் சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரில் கூட்டிய
 அதிசயம் கண்டாமே.”

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

954

அறம் செய விரும்பு

திரு. முத்துலட்சுமியம்மாள் அவர்கள்,
திருவண்ணாமலை.

இது ஔவைப்பிராட்டி அருளிச்செய்த ஆத்திசூடியின் முதல் வாக்கியமாகும். 'தருமத்தைச் செய்ய நீ ஆசைப்படு' என்பது இதன் பொருள். உலகில் மக்களாகப்பிறந்த யாவரும் தாம் உய்யவும், தம் பாபங்கள் தொலைவதற்கும், பிறவிப்பயன் எய்துவதற்கும் ஒவ்வொருவரும் தான தருமங்களைச் செய்ய வேண்டும். நம் ஔவையாரும் ஈதல் அறம் என்கிறார். கொடுத்தல்தான் தருமம் என்கிறார். நாளை நாளை என்று சொல்லி நாளைக் கடத்தக்கூடாது. நாளை என்னாமல் இன்றே செய்யவேண்டும். இன்றும் இன்னே செய்யவும் வேண்டும். நாளை நாளை என்று சொல்லுவோமேயானால் நாம் இருப்போம் என்பது கருத்தாகும். காயம் அநித்யம் என்றும்,

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்று குறள் இயம்புகிறது.

"நன்றே செய்யவும் வேண்டும், நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்
இன்றும் இன்னே செய்யவும் வேண்டும்
நாளை நாளை என்பீராகில் நமனுடையமுறை நாளதும்
அறியீர்; நம்முடைமுறை நாளதும் அறியீர்"

என்கிறார் கபிலர். சிலர், தாமும் உண்ணாமலும், பிறர்க்குக் கொடாமலும் பாடுபட்டுத்தேடித் தேடிச் சேர்த்துச் சேர்த்துக் கடைசியில் புதைத்துவிட்டு மடிவர். அவர் சென்ற பின்பும், அது ஒருவர்க்கும் பயன்படாது, அவர் சந்ததியாருக்கும், தனக்கும் பயன்படாத செல்வத்தை முடிவில் மண்ணோடு மண் ஆவதையும் காண்கின்றோம். கொடுக்காத லோபிகளின் பணம் அவர் எதிரிலேயே தீயினாலோ, நீரினாலோ, வேந்தர்களாலோ, கள்வர்களாலோ, மறைவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

955

" தீயாலோ, நீராலோ, தேர்வேந்தர்தம்மாலோ
மாயாத தெவ்வர் வரவாலோ – யாதாலோ
இப்பொருள் போய் மாய்கின்ற தென்று பொருள் வைத்தார்கள்
எப்பொழுதும் நீங்காதிடர் "

என்று பாடினுர்கள். நாம் இப்புவியில் பிறக்கும் பொழுது கொண்டு வந்தோம் இல்லை. மண்மேல் இறக்கும்போதாவது கொண்டு போகிருேமா? அதுவும் இல்லை. இடைநடுவில் வரும்இச்செல்வத்தைப்பெரிதென்றெண்ணிக்கொடுக்கஅறியா திருக்கும் இப்பாமர மக்களுடைய அறிவீனத்தை என்னென்று சொல்வேன் என்று பட்டினத்தார் சொல்கிருர். காதற்றஊசியும் வாராதுகாண் நும்கடைவழிக்கே என்கிருர். ஓரிருவருக்குக் கொடுத்துவிட்டுக் கொடைவள்ளல் என்று பெயரெடுப்பவர் களும் இருக்கிருர்கள் பிறர் சொல்வதற்காகவே இவர்கள் தானதருமங்களைச் செய்வார்கள். புகழ் வருவதற்காகத் தான தருமங்கள் செய்யக்கூடாது. நம்முடைய பிறவிப்பயன் எய்து வதற்கும், பாபங்கள் தொலைவதற்குமே, செய்யவேண்டும் என்பது நூல்களில் வலியுறுத்தப்படுகின்றது. இன்றுளார் இன்றேயும் மாய்வர். அவருடைமை அன்றே பிறருடையதா யிருக்கும். ஆகையால் நாம் யாவரும் கூற்றுவன் கீழ்வாழ்பவர். சென்ற நாலெல்லாம் சிறுவிரல் விட்டு எண்ணலாம் இனி இருக்கும் நாளை யாரும் அறுதியிட்டுக் கூறமுடியாது. சிறு வயதில் சேர்த்து, வயோதிகர் ஆனபிறகு தருமம் செய்ய வேண்டும் என்பது அறிவீனம். நம் வருவாய் அறிந்து தருமம் செய்யவேண்டும். தருமம் செய்கிறேனென்று கடன் வாங்கிச் செய்து விட்டுப் பின்பு யோசிப்பதில் பயன் இல்லை. அதனுல் வருவது பாபமேயன்றிப் புண்ணியமன்று.

' ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடில்லை
போகு ஆறு அகலாக்கடை "
—குறள்

என்கிருர் திருவள்ளுவர் தருமம் செய்யாதவர்கள் ப்பாபம் என்னும் பாசக் கயிற்ருல் கட்டப்படுவர். ஆதலால் இயன்ற அளவு தருமம் செய்து, வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்த கன்ற நுண்ணியன் பாத மலர்களை வணங்கி உய்வோமாக.

வளர்க அறம்! வளம் பெறுக உலகம்!

பெண்ணின் பெருமை*

திரு. இராதாபாய்

ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வகுப்பு மாணவி, தருமபுரம்.

இவ்வழகிய உலகைச் சிறிது உற்று நோக்குவோம். உலகம் எக்காட்சியை வழங்குகிறது? பெண், ஆண் காட்சியையன்றோ அது வழங்குகிறது? உலகில் புல் முதல் மக்கள் ஈருக உள்ள எல்லாம் பெண் ஆண் வடிவமாகப் பொலிதல் காண்கிறோம். உலகப் படைத்தற்குக் கடவுள் எத்துணை முக்கியமோ அத்துணை முக்கியம் பெண்கள். அத்தகைய பெண்ணின் பெருமையைப் பற்றி உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பெண் என்றால் யார்? சிறு சிறு நீர்த்துளிகள் சேர்ந்து பெரிய நீர் நிலைகள் எனப் பெயர் பெறுதல் போலவும், சிறு சிறு பரல்கள் சேர்ந்து பெரியமலை எனப் பெயர் பெறுதல் போலவும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணங்கள் ஒன்றியவளே பெண். உலகிற்கு முதன்மை கடவுள்போல மக்களுள் முதன்மை பெண்கள். பேணுதல் என்னும் சொல்லிலிருந்து பிறந்ததே பெண் என்னும் சொல். பெண் என்றால் யாவரும் விரும்புதல் என்றும் பொருளாகும். வள்ளுவர் பெருமான் தம் குறளில்,

> " தற்காத்துத் தற் கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்று பெண்ணுக்கு இலக்கணம் சொல்லுகின்றார். அதாவது தன்னைக் கற்பினின்றும் வழுவாது காத்து, தன்னைக் கொண்டவனையும் பேணி, கணவன் மனைவி ஆகிய இவர்களிடம் அமைந்த புகழ் நீங்காமற் காத்து, நற்குண நற்செயல்களில் கடைப்பிடியுள்ளவளே பெண்ணுவாள் என்று கூறுகின்றார். பெண்கள் குடும்பத்தையும் பேணித் தத்தமக்குரிய ஒழுக்கங்களினின்றும் வழுவாது, கற்புடையவர்களாய் உயர்ந்தவர்களாய் உலகில் பொலிதல் வேண்டும்.

---

* தருமை ஆதீனத்தின் கலைமகள் விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா - அவர்
பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா"

என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பாடுவது பெண்ணின் பெருமையையன்றோ? இவ்வுலகில் பெண்களாகப் பிறப்பதற்குப் அரியபெரிய தவங்கள் செய்ய வேண்டும். அரிய தவங்கள் செய்தல்லவோ பெண்கள் பிறந்திருக்கின்றார்கள்! தவங்கள் செய்தால்தான் பெண்களாகப் பிறக்கலாம் என்றால் பெண்ணின் பெருமையை என்னென்பது? அது மட்டுமா? பெண்களின் கை நலத்தைப் பார்த்துத்தான் பாரில் அறங்கள் யாவும் வளருமாம்.

"மண்ணின் நல்லவண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்று ஞானசம்பந்த சுவாமிகளும் பெண்ணொரு பாகனாகிய பெருமானையே போற்றுகின்றார்.

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"

என்று ஐங்குறுநூறு பாடுகின்றது இப் பாட்டுகளிலிருந்தும் பெண்ணின் பெருமையை அறியலாம்.

"ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்" - என்றும்
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" - என்றும்
"சக்தியாய்ச் சிவமாகி"

என்றும் பெரியோர் பெண்களுக்கு முதன்மை கொடுத்துள்ளனர்.

காஞ்சீபுரத்தில் அம்மை முப்பத்திரண்டு அறங்களையும் வழுவாது செய்தாள் என அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் கூறுகிறது. இது பெண்ணின் பெருமைக்கே அடிப்படை

958

யான சான்ருகும். தில்லையில் ஆடுகின்ற நடராசப் பெருமானுடைய ஆடலுக்குப் பக்கத்தில் பாட்டிசைக்கும் அம்பிகையே காரணம். இதனைச் 'சிற்சபையில் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுமயில்' என்று பிள்ளைத்தமிழ் கூறுகின்றது. இதுவும் பெண்ணின் பெருமைக்கே தக்க சான்ருகும். பெண்கள் இல்லாவிட்டால் உலகமே நடக்காது. இதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். மக்கள் ஏன்? கடவுள் கூட! அம்மை இல்லாவிட்டால் இறைவனுல் ஒரு காரியமும் செய்யமுடியாது. இதைத்தான் எங்கள் கல்லூரி முதல்வர்கூடத் திருக்கல்யாணத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது பேரறிவும், பேரன்பும் இணைவதே திருக்கல்யாணம் என்று கூறுகிருர்கள். அம்மை அன்பின் வடிவம். ஆண்டவன் அறிவின் வடிவம் அறிவு தனித்தியங்காது. இயங்கினுலும் நல்ல பயனை விளைவிக்காது. அன்புடன் சேர்ந்தே இயங்கவேண்டும் ஆகவே சிவபெருமானின் உடலில் பாதியாக உமையாள் இருக்கின்ருள். திருமால் திருமார்பில் வைத்திருக்கின்ருர் திருமகளை. பிரமன் மட்டும் என்ன? நாவில் வைத்திருக்கிருர் நாமகளை. சிவன் கங்கையைச் சடை முடியின் மீது தாங்கியுள்ளான்! ஓர் ஆடவர் ஓர் பெண் பெண்ணைத் தலைமீது வைத்துக்கொண்டால் இதைவிட பெண்களுக்கு ஏதேனும் பெருமை வேண்டுமோ? மக்கள் தாமோ பெண்களுக்கு பெருமையளித்துள்ளார்கள்! இறைவனும் அளித்துள்ளானே? பெண்ணின் பெருமையை எப்படிச் சொல்லுவது!

ஆண்களுக்கு வீரமும், பெண்களுக்கு அன்பும் சிறந்த பண்புகளாக உலகம் முழுவதும் இருந்து வருகின்றன. முக்கியமாகத் தமிழகம் மேற்கூறியதையே கொண்டுள்ளது. பெண்ணின் பெருமையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம், முற்காலப் பெண்ணின் பெருமையும் பண்பும், இடைக்காலப் பெண்ணின் பெருமையும் பண்பும், இக்காலப் பெண்ணின் பெருமையும் பண்பும் என மூன்றுவகை.

முற்காலப் பெண்களில் சிறந்து விளங்கியவர்கள் ஔவையார், வெள்ளிவீதியார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், மால்பித்தியார், வெறிபாடிய காமக் கண்ணியார், பொன்முடியார், கண்ணகி, மாதவி முதலியோர்கள். இவர்கள் கல்வி கேள்விகளிலும், ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கினுர்கள். பெண்பாற் புலவர்களிலேயே சிறந்து விளங்கியவர்

ஔவையார். பொன்முடியார் சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறையின் காலத்தவர். மால் பித்தியார் திருமாலிடம் மிக்க அன்புகொண்டவர். பெருஞ் செல்வத்தை நுகர்ந்த ஒரு தலைவன் அச் செல்வத்தை வெறுத்து, துறவு பூண்டு கடிய விரதங்கொண்டு நோன்புற்றிருத்தல், இவர் பாடல்களிற் கூறப்பட்டுள்ளது. காமக்கண்ணியார் சிவ பக்தியும் அன்பும் கொண்டவர். பாரிமகளிர் தமிழைக்காத்த பெண்மணிகள். கண்ணகி ஓர் வீரத்தாய், தனது கணவனாகிற கோவலன் கள்வன் என்று கூறிக் கொலைசெய்த பாண்டியனை அடைந்து பல சபையோர்கள் நிறைந்த மன்றத்தின் நடுவிலே தன் கணவன் கள்வன் அல்ல என்று நிரூபித்துப் பாண்டியனை வென்றவள். மாதவி ஓர் சிறந்த கற்பரசி, கோவலன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றபொழுது அவள் என்ன செய்தாள்? வேறு துறை நண்ணாது, துறவொழுக்கம் பூண்டு, நிறைகாத்து அறம்வளர்த்தாள். அவள் வயிற்றில் பிறந்த மணிமேகலை உலகத்தின் அறவொழுக்கத்திற்கே ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றாள்.

இடைக்காலத்தில் மங்கையர்க்கரசியார், திலகவதியார், புனிதவதியார், சீதை, வள்ளி முதலியோர் சிறந்து விளங்கினர். மங்கையர்க்கரசியார் ஓர்சிறந்தசிவபக்தர். சமணக் கடவுளைத் தொழுத கூன் பாண்டியன் மனைவி. நாடும் நாயகனும் வேறு சமயத்தில் புகுந்தும் தாம் சைவசமயத்தினின்றும் வழுவாது' திருஞானசம்பந்தரை வரவழைத்து நாட்டையும் நாயகனையும் சைவ சமயத்தில் புகுத்தினார். மங்கையர்க்கரசியார் என்னும் ஒரு பெண்மனி அன்றில்லாதிருப்பரேல் சைவசமயம் அன்றே தமிழ் நாட்டில் இறந்து பட்டிருக்கும், இத்தகைய ஒரு சமயத்தை நிலை பெறுத்திய பெண் தெய்வத்தை நமது நாடு பெற்றிருந்தது. சமணமதம் புக்க தம்பியாரை மீண்டும் சைவ சமயத்தில் கொணர முயன்றவர் திலகவதியார். புனிதவதியார், ஆண்டாள் ஆகிய் இவர்கள் பாடிய தமிழ்ப் பாடல்களுக்குநமது ஆண்டவன் அருள் செய்தான். சீதை கற்பில் வழுவாத ரங்க நாயகனாகிய இராமனைப் பிரிந்து அசோக வனத்தில் தனியாக இருந்த பொழுதும், இராமனைத் தவிர வேறு ஒருவரையும் அவள் மனத்தில் நினைத்தலில்லை. நெடு நாட்களாக இராமனை எதிர்பார்த்து இறுதியில் உயிர்துறக்க நினைத்தவள். சீதையை அசோகவனத்தில் கண்ட அனுமன், இராமனிடம்,

" விற்பெருந் தடந்தோள் வீர வீங்கு நீரிலங்கை வெற்பின்
நற் பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும் பொறை யென்ப தொன்றுங்
கற்பென்னும் பெயரதொன்றும் களி நடம் புரியக் கண்டேன் "

என்று நயம்படக் கூறுகின்றான். இச்செய்யுளிலிருந்து சீதை யின் கற்பை நன்கு அறியலாம். வள்ளி முருகனிடம் மிக்க அன்பு கொண்டவள். இருவரும் இணைபிரியாத இளங் காதலர்கள். இத்தகைய பெண் தெய்வத்தின் வீரத்தையும் கல்விப் பெருமையையும் என்னென்பது?

பிற்காலப் பெண்களில் சிறந்து விளங்கியவர்கள் அன்னிபெசன்ட், விஜயலக்ஷ்மி பண்டிட், அமிர்தகௌரி, கவிஞர் சரோஜினிதேவி, இந்திராகாந்தி போன்றவர்கள். அன்னிபெசன்ட் பெண்களுக்குச் சில உரிமைகளை வாங்கித் தந்தார். பெண்கள் அன்னிபெசன்ட் தலைமையில் இராசாங் கத்தை எதிர்த்து வாதாடி ஓட்டுரிமையைப் பெற்றனர். உலக சபைகளிலே சிறந்து விளங்கும் சமரச சபையின் தலைவராக விளங்குகிறார் விஜயக்ஷ்மி பண்டிட். நம் நாட்டின் மத்திய அரசாங்க சுகாதார மந்திரியாக விளங்குகிறார் அமிர்தகௌரி. கவிஞர் சரோஜினி தேவியின் கவிதைகள் உயர்ந்தவை. இந்திராகாந்தி புகழ்பெற்ற ஒரு காங்கிரஸ் தொண்டர். தில்லையாடி வள்ளியம்மை கர்ப்பத்தோடு நாட்டின் விடுதலைக் காக சிறை சென்றவள். இன்னும் எத்தனையோ பெண்கள் சிறைக்குச் சென்றனர். இத்தகைய புகழும் பெருமையும் வாய்ந்த பெண்களைக் கொண்டது நம் அருமைத் தமிழ் நாடு.

பாரதியார், வள்ளுவர், பாரதிதாசன், திரு. வி. கலியாண சுந்தரனார் முதலியோர் பெண்ணின் பெருமையைப்பற்றி எழுதியிருக்கின்றார்கள்.

" மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம் "

என்கிறார் பாரதியார். அதாவது பெண்களை இழிவு செய் கின்ற மடமையை ஒழிப்போம் மாதர்களை முன்னேற்றுவோம் என்றதாம்.

961

“ பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார் ”

“ கண்களிரண்டினிலொன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ
மாதரறிவை வளர்த்தால் - வையம்
பேதையை யற்றிடுங் காணீர். ”

இது பாரதியார் வாக்கு. பெண்களுச்கு நல்ல அறிவைக் கொடுத்தான் இறைவன். அவர் தம் அறிவைக் கெடுத்தார் இவ்வுலகிலுள்ள சில மூடர். அது, கண்கள் இரண்டு உள்ள வரை ஒரு கண்ணைக் குத்திப் பார்வையைக் கெடுத்தது போலாகும். உலகில் பெண்கள் அறிவை வளர்த்தால் நாடு முன்னேறும். பேதைமை என்னும் பேய் அடியோடு அற்று விடும் என்கிருர்.

“ போற்றிதாய் என்று தாளங்கள் கொட்டடா
போற்றிதாய் என்று பொற் குழலூதடா ”

என்று சொல்லுகிருர் பாரதி. இவ்வாறே பாரதி பெண்களைப் பற்றிச் சொல்லிச் செல்கிருர்.

வள்ளுவர்பெருமான் தமது குறளில்

“ பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின் ”.

என்று கூறுகின்ருர். அஃதாவது ஒருவன் அடையும் பொருள் களுள் இல்லாளின் மேம்பட்டப்பொருள் இல்லை யென்பதாம்.

“ இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை ”

ஒருவனுக்கு மனைவி அவசியம். மனைவி இல்லாவிட்டால் குடும்பம் நல்ல முறையில் செல்லாது இன்கிருர் திருக்குறளில் ‘வாழ்க்கைத்துணைநலம்’ என்னும் அதிகாரம் பெண்ணின் பெருமையைப்பற்றியே கூறுவதாகும். பெண்கள் மட்டும்

கற்புடையவர்களாய் இருந்தால் போதாது. பெண்களுக்குக் கற்பு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கற்பு ஆண் களுக்கும் என்கிருர்.

திரு. வி கலியாணசுந்தரனுர் 'பெண்ணின் பெருமை' என்னும் நூலில் பெண்ணின் பெருமையைப் பற்றிச் சொல்லி யிருக்கின்ருர். அவர் கூறுவதாவது; பெண்கள் தொண்டு செய்வதற்கென்றே பிறந்திருக்கிருர்கள். தொண்டு என்பது அடிமைத் தொண்டல்ல. கடவுள் தொண்டு. இல்லத்தில் புகுந்த ஒரு பெண் மாமன் முதலியோற்கு ஏற்றதொண்டு, கணவனுக்குரிய தொண்டு, குழந்தைகளுக்குரியத் தொண்டு மற்றவர்க்குத் தக்க தொண்டு. இன்னும் எத்துணை உண்டோ? அத்துணைத் தொண்டாற்றுகின்ருள். வன்கண்ணர் சேர்ந்த குடும்பமாயின் அக்குடும்பநெருப்பிடைநின்று துன்பம்பொறுத்து மகிழ்ச்சியோடு பெண்பணியாற்றுகின்ருள். பெண்மகள்துன்பப் பொறுத்து மகிழ்ச்சியோடு பணிசெய்வதுபோல் ஆண்மகன் செய்யமாட்டான் என்று கூறுகின்ருர். பெண்ணே முதல் தெய்வம், அத் தெய்வத்தை வணங்குவோம்! வாழ்த்துவோம் என்று கூறுகின்ருர் பாரதிதாசன்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே"

என்கிருர் நாம் அன்னிய நாட்டினின்றும் விடுதலை பெற்று விட்டோம். ஆனல் மண்ணினின்றும் விடுதலை பெறவில்லை. பெண் அடிமை தீர்ந்தால்தான் அவ்விடுதலையைப் பெறலாம் என்கிருர் பாரதிதாசன்.

பெண்குழந்தை தொட்டிலில் கிடைக்கிறது தூங்கவில்லை அது சிரித்துக்கொண்டே யிருக்கிறது, புதுமைக் கவிஞர் ஒரு வர் தொட்டிலை ஆட்டுகிருர், தாலாட்டுப் பாடுகிருர் என்ன தாலாட்டு அது? அந்தத் தாலாட்டு என்ன சொல்லுகிறது? 'பெண்ணை இழித்துரைப்பவர் வாயடங்க வந்து பிறந்தவளே' என்று கூறப்படுகின்றர். 'பெண்களை நாயினும் கேடாக நினைப் போர் நாவை அடக்கித் தாய்க்குலம் பெண்ணின் பெருமை விளக்கும் என்பதை எடுத்துக்காட்ட வந்தவளே' என்று அழைக்கின்ருர்.

963

" நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டித் தமிழர்க்கு வாய்த்த வளே"

என்ருர் பாரதிதாசர்.

ஆண்மக்களே! உங்கள் பெருமை பெண்ணுடன் பொருந்தி நிற்பது. உங்களைப் பெற்றவள் பெண். உங்களை வளர்ப்பவள் பெண். உங்களோடு வாழ்பவள் பெண். உங்களைப் பெண்ணுக்குபவள் பெண். நீங்கள் பெண்ணுகாது அதாவது அமைதிநிலை எய்தாது, பெண்மைநிலை பெருது, விடுதலையடைதல் இயலாது, பெண்ணுல் நலனடையும் நீங்கள் பெண்ணுலகையா வெறுப்பது? துறப்பது? நன்றி கொல்லாதேயுங்கள்; தாய்நன்றி கொல்லாதேயுங்கள்;

" எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் பொய்யா மொழியை நோக்குங்கள்.

பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள் வணக்கஞ் செலுத்துங்கள்; பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம்; அவளைக் கட்டுப்படுத்தல் - அடிமைப் படுத்தல் - கொடுமையாக நடத்தல் அநாகரிகம்.

பெண்ணலன் உங்கள்நலன்; உங்கள் நாட்டு நலன்; பெண் கண்ணீர் விடும் நாடு வறுமை நாடாகும். அடிமை நாடாகும். அஃது எரிந்து போகும்; கரிந்து போகும். ஒரு பெண்ணுக்கு ஸ்ரீ ராமன் எவ்வளவு முயன்ருர்; எத்துணை இடுக்கணுற்ருர்; எத்துணைப் போர் புரிந்தார்! ஒரு பெண்ணின் பொருட்டுப் பாரதப் பெரும்போர் நடந்தது! பெண்ணின் துயர் தீர்ப்பது ஆண்மகன் கடமை. அவள் துயர் தீர்க்க இயலாதவன் ஆண் மகனல்லன். பெண்ணின் சிறுமைபோக்க உயிரையுந்துறத்தல் வேண்டும். அவளது பெருமையைக் காக்க ஆண்மகன் பிறந்திருக்கிருன், பெண்ணில்லையேல் உலகேது? உயிரேது? அன்பேது? கடவுளேது? எல்லாம் பெண்ணுல்; அத்தகையப் பெண்ணை, தாயை, தெய்வத்தை போற்றுங்கள்;வணங்குங்கள்.

எங்கணும் பெண்மை பொலிக; எங்கணுந் தாய்மை ஓங்குக; எங்கணும் இறைமை வாழ்க. வணக்கம்!

964

சமையலும் ஒரு கலையே

வித்துவான், திருமதி, சிவ. மீனுட்சிசுந்தரசிவை அவர்கள்,

சென்னை.

தாம் உண்ணும் உணவைச் சமைக்கவும், உடுக்கும் உடையைத் தைக்கவும் தெரியவேண்டுவது பெண்களுக்கு மிகவும் இன்றியமையாத தொன்றல்லவா?

குடும்பத் தலைவியராகிய பெண்கள் கூலிக்காகப் பணி யாற்ற வருவோரை நம்பி சோம்பலுற்று, கொன்னே காலத் தைக் கழிக்கலாமா?

உண்டியமைத்தல், விருந்தோம்பல், இன்சொல், ஈகை முதலியன பெண்களுக்கு வேண்டியனவல்லவா?

சில மகளிர் சமையல் வேலை செய்வது இழிவென நினைக் கின்றனர். வீட்டின் உரிமையாளராகிய பெண்களின் கை களால் அமைக்கப்படும் உணவே கணவருக்கும் காதன் மக்களுக்கும் உடல் நலம் பயக்கும் இன்ப அமுதமாகும். உள் ளன்பில்லாமல் பணியாளர் அமைக்கும் உணவு நஞ்சாகும் அன்பு கலவாத உணவு உணவன்று. "என்பெலாம் பற்றி எரியுதே ஐயையோ! அன்பிலாளிட்ட அமுது" என்பது பாட்டி யார் வாக்கு.

அறநிலையாம் பெண்கள் உள்ளத்தில் எழும் அன்பின் மேல் கால்கொண்டு நிற்குமென்று கவிச்சக்ரவர்த்தி கம்பர் கூறுகிறுர் கச்சியம்பதியில் முப்பானிரண்டு அறஞ் செய்தது அம்மையே யன்றி அப்பனல்ல. ஆதலின் ஒவ்வொரு பெண்களுக்கும் சமைக்கத் தெரியவேண்டும்.

இக்காலத்து தாய்மார்கள் தம் பெண்களுக்குச் சமையல் செய்யவோ, வீட்டு வேலைகளைச் செய்யவோ தெரியாது என்று சொல்லிக்கொள்வதில் மிக்க பெருமையடைகிறுர்கள். சங்க காலத்துப் பெண்களைப்பற்றிச் சிறிது பார்ப்போம். அவர்கள் தம் வீட்டு வேலைகளைத் தாமே செய்துகொள்வதில் மிக்க ஆற்றலுடையவர்களாக இருந்தார்கள்.

965

தாய் மார்களும் தம் பெண் வாழ்க்கைப்பட்ட வீட்டில் பதுமைபோல அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும் என்று எண்ணவில்லை. கணவனிடத்திலும், கணவனைச் சேர்ந்த உறவினரிடத்திலும் அன்புடையவராய், அவர்கள் மகிழ்ந்து சாப்பிடும் பொருட்டு அறிவோடு முயன்று சமையல்செய்ய வேண்டுமென்று அக்காலத்துத் தாய்மார்கள் கருதிவந்ததாகத் தெரிகிறது. அச்செய்தியை அறிவிக்கும் பாடலின் பொருளைப் பார்ப்போம்.

ஒரு பெருஞ் செல்வந்தரின் பெண் கட்டிக் கொடுக்கப் பட்டவுடன் அவளைப்பார்க்க அவள் செவிலித்தாய் ஒரு நாள் சென்ருள். பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்தாள். வந்தவர் யாரென்று பார்க்கக்கூட நேரமில்லாமல் பெண் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். தான் செய்கிற மோர்க்குழம்பு சுவையுடையதாக இருக்கவேண்டுமேயென்ற ஒரே எண்ணம் அவளுடைய கருத்தை ஈர்த்திருந்தது. எனவே செவிலித்தாய் ஒரு புறத்தே மெல்லவந்து நிற்பதையும் அவள் காணக்கூட வில்லை. தன்னுடைய காந்தள் மலர்போன்ற மெல்லிய விரல் களாற் கட்டித்தயிரை முதலில் பிசைகிருள். அடுப்பில் ஏனத்தை ஏற்றி எண்ணெய் விட்டுத் தாளிக்கின்ருள். இடையில் நேர மின்மையால் தயிர்பிசைந்த கையைக் கழுவிக்கொள்ளக் கூட வில்லை. தனது புடவை நழுவி விடுகிறது. கையிலோ தயிர்! அதனை எடுத்து உடுத்திக் கொள்ளவும் கூடவில்லை. நேரமும் காணும். தாளிப்பில் எழுந்த புகை அவளது குவளைப்போன்ற மையூட்டிய கண்களை திகைக்கச் செய்கின்றது என்ருலும் புகைக்குப்பயந்து அப்புறம் வந்துவிட்டால் தாளிக்க இட்ட பொருகள் தீய்ந்துவிடும், மணமும் கெடும். அதனல் புகை யைப் பொருட்படுத்தாமல், தாளிக்க இட்டபொருள்கள் பொன்னிறமானதும் கறைத்திருந்த கட்டித்தயிரைச் சட்டியில் கொட்டிக் குழம்பைக் கொதிக்கவைக்கிருள்.

இவற்றையெல்லாம் பார்த்திருந்த செவிலித்தாய்க்கு உள் ளம் பூரித்துவிட்டது. தன் மகள் இவ்வளவு கருத்தாக இவ் வளவு திறமையாக சமையல் செய்கிருளே யென்று அகமகிழ்ந் தாள். ஐயோ ! என்பெண் இவர்கள் வீட்டில் வந்து மாடுபோல் உழைக்கிருளே, கண்ணைப்போல் வைத்துக்கொண்டிருந் தேனே. சமையலுக்கு ஒரு ஆளை வைக்கக்கூடாதா, இந்த

வீட்டில் என்று வருத்தப்பட்டு அந்த செவிலித்தாய் எண்ண வில்லை. இக்காலத்து தாய்மார்கள் ஒருக்கால் அவ்வாறு எண்ணுவர்.

தான் செய்த தீம்புளிப்பாகரை அதாவது இனிமையான மோர்க்குழம்பை கணவனுக்கு இடுகிறாள். அவன் எவ்வளவு நன்றாயிருக்கிறது என்று பாராட்டி மகிழ்ந்து சாப்பிடுகிறான். அதைக்கண்டு அந்தப்பெண் நுண்மையாக மகிழ்ந்தாள். நுண்மையாக என்பதின் ஒரு சிறப்பு இருக்கிறது. அவள் தான் நன்றாகச்செய்து விட்டதாகப் பெருமை அடித்துக்கொள்ள வில்லை. தன் கணவன் உண்டு இன்பமடைய வேண்டு மென்பதே அவள் நோக்காக இருந்தது. இந்தச் செய்தியைப் பார்த்துக்கொண்டுபோய் செவிலித்தாய் அந்தப் பெண்ணின் பெற்றதாயிடம் சொல்லுகிறாள். அந்த தாயின் மகிழ்ச்சி எல்லை யற்றதாக இருந்தது.

எட்டுத்தொகை நூற்களிலே குறுந்தொகை என்ற நூலிலே 167 ஆவது பாடலாக வருகின்ற இப்பாடலை நேரே சுவை யுங்கள்.

“ முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாதுடீஇ
குவளையுண் கண் குய்ப்புகை கமழ
தான் துழந்து அட்ட தீம்புளிம்பாகர்
இனிதென கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே”

இனி, தேவார காலத்துப் பெண்கள் அட்டில் தொழில்புரிவதில் எவ்வாறு இருந்தார்கள் என்பதைக் காண்போம்.

“ மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு வெண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் ”

என்பது ஆளுடையபிள்ளையார் அருள்வாக்கு.

இதனுல் யாம் அறிவதென்னவெனில் அக்காலத்துப் பெண்கள் சமையற்கலையில் வல்லவர்களாக இருந்ததோடல்லாமல், விழாக்கள் கொண்டாடுவதிலும் சிறப்புற்றிருந்தனர் என்பதாகும்.

மற்றெல்லாக் கலைகளைப்போல் சமையலும் ஒரு கலையே யாகும். பல்கலைக் கழகப் பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. சமையல் செய்ய தெரியவேண்டுவது மிகவும் இன்றியமையாத ஒன்ருகும். இழிவானதன்று. பெருமைபடுவதற்குரிய ஒன்ருகும். அதுமட்டுமல்ல:-

ஒளிவடிவான முழுமுதற் கடவுளை ஒவ்வொரு செயலும் நினைப்பூட்டுவதாகும்.

அடியவர்க்கு அமுதளிக்கும் தொண்டின் பெருமையை சேக்கிழார்பெருமான் ஞானசம்பந்தர் வாயிலாக நமக்கு வெகு அழகாக அறிவிக்கும் இவ்வடிகளைப் பாருங்கள்.

“ மண்ணினிற் பிறந்தார் பெரும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினுல் அவர் நல்விழா பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பர் ”

சமைக்கத் தெரிந்தாலல்லவா அடியவரை அமுது செய்விக்கலாம். இளையான் குடிமாறநாயனுர் தமது வாழ்க்கைத் துணைவியாரால் அல்லவா நள்ளிரவில் நண்பனுக்கு அமுதளித்து நற்பேறு பெற முடிந்தது. அவ்வம்மையார்க்கு உள்ளதைக்கொண்டு நல்லதாக்க தெரிந்திராவிடில் இவ்வுயர் நிலையை அடைந்திருக்க முடியுமா?

ஆதலின் சமையற்கலையைப் புறக்கணிக்காது, நன்கு கற்று ஓம்புதல் ஒவ்வொரு பெண்ணின் சிறந்த கடமையாகும்.

68

அறிவியல்

அழிவின் முடிவிலே அன்பு மலர்கிறது

வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

அழிவும் அன்பும் ஒரேபாதையில் செல்லுமாயின் வாழ்க்கை தேவ உலக வாழ்க்கையாக மாறிவிடும். மக்கள் சம்பந்தப் பட்டவரையில் இருளும் ஒளியும் ஒரே இடத்தை அடையாமல் வெவ்வேறு இடங்களை அடைவனபோல அழிவும் அன்பும் வெவ்வேறு பாதைகளில் செல்கின்றன.

அரும்பும்போதே ஆண் சிங்கம் போல் தோன்றினர் அசோகர். அவர் பிஞ்சு உள்ளத்தில் அஞ்சாமையும், ஆட்சித் திறனும், போர்க்கலையும் குடிபுகுந்தன. புகுந்த கலைகள் பிறை வளர்வதுபோல வளரலாயின. இவ்வளர்ச்சி உலகம் முழுவதையும் தன் குடைக்கீழ்க்காணும் உணர்ச்சியைத் தூண்டியது. தூண்டிய எண்ணமே வெற்றிச் சிகரத்தின் உச்சியைக் கண்டது. ஆனால் பல வீரர்களின் வாழ்க்கையைப் பாழாக்கும் அழிவையும் கண்டது.

இவ்வழிவில் கிடைத்த அணியையும் துணியையும் சுமந்து வந்து வெற்றி கண்ட வீரர்கள் தம் பெருமையாக - அலங்காரமாகப் பரப்பிவைத்துத் தம் அரசர்க்குக் காட்டினர். அரசர் கண்டார்; மகிழ்ந்தார்; வீரர்களைப் பாராட்டிப் புகழ்ந்தார். தம் அருகில் நின்ற குழந்தையைநோக்கி, குழந்தாய்! இவற்றில் உனக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றை எடுத்துக்கொள் என்று சொன்னர். குழந்தை, தந்தை முகத்தையும் மற்ற வீரர்களின் முகமலர்ச்சியையும் அடுக்கி அழகு செய்த பொருள்களையும் கண்டது. கண்ட கண்கள் நீரைப் பொழிந்தன. ஒரே புலம்பலாக, அப்பா! பணம் என்றல் பிணமும் வாய் திறக்கும் என்பார்களே! அதிலும் உயிரோடுள்ள சிறு குழந்தையாகிய எனக்கு ஆபரணம் என்றல் ஓடி எடுக்க ஆசை கொள்ளாதா? என் உள்ளம் ஆசையைத் தூண்டுகின்றது. ஆயினும் இவ்வளவு பொருள்களும் அழிந்த உயிர்களின்

பொருள்களல்லவா ? இப்பொருள்களைப் பார்க்கும்போதும், எத்தனையோ கணக்கற்ற உயிர்கள் அழிந்தனவே என்பதை எண்ணும்போதும் என் நெஞ்சில் உண்டாகும் துக்கச் சுமை என்னால் தாங்க முடியவில்லையே என்று ஓ எனக் கதறி அழுதது. இவ்வழுகை வெற்றி விளையாட்டின் வீர உச்சியில் விளங்கிய அப்பாவின் மனதை அடியோடே மாற்றிவிட்டது. அருகிருந்தார் மனமும் மாறினர். மாற்றியது எது ? அழிவினால் வந்த அழுகையல்லவா ?

இவ்வுலக வாழ்வில் ஈடுபடுவோர் அழிவு முடிவில் காணும் இன்ப மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சி ஆகாது. உயிர்களின் அழிவைக் கணக்கிட்ட மகிழ்ச்சியாகவே முடியும். ஆனால் குழந்தை மனமாற்றமாகக் கதறியது. அக்கதறல் அறிவித்தது எது ? அழிந்த உயிர்களிடத்தும் அன்புகொள்வதல்லவா நிலைத்த பேரின்பம்; ஆண்மை என்ற தோற்றம் அப்பா முழு நெஞ்சையும் கவர்ந்தது. கவர்ந்த மறுமலர்ச்சியில் மலர்ந்த அன்பின் சின்னம் அல்லவா அசோகச் சக்கரம். இச் சக்கரம், ஒரு நாடு, ஒரு காலம், ஒரு சாதி, ஒரு மதம் முதலிய வேற்றுமைகள் இல்லாமல் யாவும் அன்புமயம் என்பதைக் குறிப்பதுடன் அன்பு இல்லாத இடமும் உண்டோ என்பதையும் குறிக்கிறது.

எங்கும் பரந்த அன்பொளியை நாம் வளர்ப்பதெப்படி ? அன்பின் தயவை அடைய நாம் அழிவுப் பாதையிலே சென்று மீளுவதைவிட அன்புப்பாதையிலே செல்லல் இன்பமாகும் என்று நம் முன்னோர் பண்டிகையாக அமைத்ததை நாம் விடாது போற்றி ஒழுகிவரல்வேண்டும்.

தன் வலிமையோடு தவ வல்லமையில் மிக்கவன் நரகாசுரன். இவன் தன் வல்லமையை மக்களிடம் காட்டித் துன்புறுத்தினான். துன்பம் தாங்காது மக்கள் ஓடி ஒளிந்தனரேயன்றி எதிர்த்தவர் எவரும் இல்லை. புலி என்ற சொல்லைக் கேட்டவுடன் நடுங்கி ஓடும் மக்களைப்போல இவன் பெயரைக் கேட்டவுடன் நடுங்கி ஓடுவர். ஓடுவதைக் கண்ட இன்பம் ஒன்றே தனக்குரிய இன்பமாக எண்ணிப் பலநாள் துன்பமே செய்துவந்தான். இரணியனை அடக்க நரசிங்கமும், நரசிங்கத்தை அடக்கச் சரபப் பறவையும் தோன்றியனபோல மக்களை

வருத்திய இவனை அடக்கக் கண்ணபிரானார் சத்தியபாமை யுடன் இவனிடம் வந்தார். வந்தவரிடம் போர்செய்து முடிவில் அழிந்தான். அழிந்தநாள் ஐப்பசித் தேய்பிறைச் சதுர்த்தசியாகும்.

அழியும்போது அவன் உள்ளத்தில் மலர்ந்த அன்பால் என்னை வென்ற வீரரே! என்னிலும் வலிமையிலும், வீரத்திலும் சிறந்தவர் இல்லை என்று செருக்கடைந்து பலரும் பாவி என்று அழைக்கப் பாடுபடுத்திய வலிமை இப்போது என்னிடமில்லை. இல்லாதபோது ஏங்கிக் கலங்குகிறேன். என்னை இவ்வுலகம் நினைக்க ஒரு வரம் தரல்வேண்டும் என்று விரும்பினான். இவன் விருப்பத்தையும் உலகோர் இனி இவன்கொண்ட செருக்கை அடையக்கூடாது என்ற கருத்தையும் கொண்டு உன்பெயரை நினைக்கும்போதே தங்களிடம் செருக்கு வாராதிருக்க எண்ணெய்தேய்த்து முழுகிவிடட்டும். பின் அன்பு மலர்ச்சி யில் புதிய ஆடை உடுத்தி அனைவரும் இனிய உணவுகளை உண்டு அன்பாக வாழட்டும் என்று அருளிய வரமல்லவா தீபாவளி. வடநாட்டார் அஞ்ஞானச் செருக்காகிய அசுரன் ஒழிய மெய்ஞ்ஞான விளக்கை ஏற்றிக் கொண்டாடுகின்றனர். தீபம் - ஒளி. ஆவளி - வரிசை. ஒளிவரிசை எனப் பொருள் சொல்லி அரக்கன் அழிவை நினைப்பதுபோல் செருக்கிருளை ஒழித்து உண்மை அன்பை ஒளிரச்செய்கின்றனர். தென்னாட்டில் எண்ணெய்தேய்த்து முழுகி, புத்தாடையுடுத்திப், புத்துணவு உண்டு உற்றார் உறவினர்களுடன் அன்பு மலர்ச்சியாக அகங் குளிர விளங்குகின்றனர். இவ்விளக்கம் செருக்குக்கொண்ட அசுரன் எங்கள் உள்ளத்தில் இடம்பெறான் அழிந்தான். அவனை விடியுமுன்னமே முழுகிவிட்டோம். நாங்கள் செல்லும் பாதை அன்புப் பாதையே என்ற நினைவுதானே யாவர் உள்ளத்திலும் மலரும்.

முழுகும் முறை நிர்ணய ஸிந்து என்ற நூலில் கமலா கரப்பட்டர் கூறியுள்ளார். ஐப்பசி மாதம் தேய்பிறைச் சதுர்த் தசியில், நகரத்தினின்றும் பயந்தவர்கள் எள்ளெண்ணெயில் இலக்குமிதேவியையும், நீரில் கங்காதேவியையும் தியானித்து பொழுது புலருமுன் ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் செய்யும்பொழுது நாயுருவி, தும்பி, பிரபுண்ணாடம் என்ற மூலிகைகளைக் கொண்டு தலையைச் சுற்றி எறியவேண்டும் பிறகு யமன், தர்மராஜன், மிருத்யு, அந்தகன், வைவஸ்வதன்.

காலன், ஸர்வபூதக்ஷயன் ஔதும்பரன், தத்னன், நீலன், பரமேஷ்டி, வருகோதரன், சித்ரன், சித்ரகுப்தன் என்ற பதினுன்கு பெயர்களைச்சொல்லித் தர்ப்பணம் செய்தல் வேண்டும். யமன் பிதுருக்களுக்கும், பிரேதங்களுக்கும் அதிபதியான தேவதை. ஆதலால் தெற்குமுகமாக இருந்து, ஸ்நானத்தின் முடிவில் எள்ளையும் சேர்த்துக்கொண்டு ஒரு பெயருக்கு மூன்று தர்ப்பணம் வீதம் செய்யவேண்டும். பூணூல் இடது தோளிலோ (உபவிதமாகவோ) வலது தோளிலோ (பிராசீனுவீதமாகவோ) இருக்கலாம். தேவர்களுக்கு உபவீதமாகப் பூணூல் தரித்துத் தர்ப்பணம் செய்யவேண்டும். பிதுருக்களுக்குப் பிராசீனவிதமாகப் பூணூல் அணிந்து தர்ப்பணம் செய்ய வேண்டும். இந்த யம தர்ப்பணம் தந்தை வாழுங்காலத்திலும் மகன் செய்யலாம். இப்படிச் செய்வதனுல் ஓர் ஆண்டில் செய்த எல்லாத் தீவினைகளும் நீங்கும். மூதேவி விலகித் திருமகள் விளங்குவாள்.

அண்டமெல்லாம் ஆண்ட சூரபதுமனும் தன் செருக்கு அழிந்த முடிவில் அன்பு மலர அவன் மயிலாகவும், கோழியாகவும் வடிவெடுத்து அறுமுகப்பெருமானுக்கு அன்பு மயமாகிய நாள் ஐப்பசிப் பிறை வளரும் ஆரும் நாள் சஷ்டியாகும். அந்நாளில் நாமும் அன்புப் பாடலைச் சொல்வோம்

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா! வானேர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ் வே.

கனம் இராஜாஜி அவர்கள் கருத்து

நாட்டு மக்களின் உள்ளத்தினின்று கருத்துக்கள் எழுந்து முனிவர் உள்ளத்தில் தெய்விகக் கவி உருவமாகி அது மக்கள் உள்ளத்தில் மறுபடி ஒளியும் கருத்தும் தருகிறது. இப்படி ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாக உதவிக்கொண்டு எல்லா நாடுகளிலும் மக்களின் கருத்துக் கடலும் கவிகளின் பிரபந்தங்களும் சம்பந்தப்பட்டுவருகின்றன. பாரத நாட்டுப் பெண்மக்களின் தூய பண்பும், அவர்கள் படும் துயரங்களும் உத்தர ராமாயணமாக உருவமெடுத்தன. அதுவே பாரத நாட்டுப் பெண்களின் உள்ளத்துக்கு ஒளியும் சாந்தியும் தரும் நந்தா விளக்கும் ஆகிறது.

கல்கி, 6—11—55.

வலம் வந்தார்கள்

திரு. கீ, இராமலிங்கம் அவர்கள் எம். ஏ.,
முதல்வர், தருமையாதீனக் கீழைக்கலைக் கல்லூரி.

பெண்ணு மாப்பிள்ளையை யெழுப்பியாச்சு, 'மேளம், மேளம்' என்றார் கூட்டத்தில் ஒருவர். மேளம் முழங்கியது, கையைப் பிடித்துச் செல்லுங்கள். கையைப் பிடித்துச் செல் லுங்கள் என்று'அருகிலிருந்த ஒரு பெரியம்மா, இருந்த இடத்தி லிருந்தபடியே கூறினார்கள். மாப்பிள்ளை வலதுகையை நீட்டினார். சுண்டுவிரலை ஒதுக்கிக் கூட்டினார். மணப்பெண் அவ்வளவு எளிதில் தன் கையை நீட்டி மணாளன் கையைப் பற்றிக்கொள்ள முடியுமா? அதுவும் முதல் முறையாகப் பற்று வது அல்லவா? பலரும் அறியப்பற்றுவதாயிற்றே! தோழிப் பெண் உதவிசெய்யவேண்டும். ஆனால் அந்த அம்மையாரோ மணப்பெண்ணின் கால் அடியை உருவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். காலை மடக்கிக்கொண்டு அத்தனை நேரம் உட்கார்ந்து கொண்டிருந்ததால் கால்கள் ஒரே மொத் தையாய் விட்டிருந்தன. சரியாக எழுந்து நிற்கவும் முடிய வில்லை. சிறிது தேய்த்து விட்டபிறகே திமிர் நீங்கியது. பின்பே, மாப்பிள்ளையின் வலதுகை சுண்டுவிரல் பெண்ணை ஓடி வந்து வந்து போய்க்கொண்டிருப்பதைக் கண்டார்கள். உடனே, பெண்ணின் இடதுகைச் சுண்டுவிரலைப் பிடித்து எடுத்து கூப்பிட்டுக்கொண்டிருந்த மாப்பிள்ளையின் சுண்டு விரலோடு ஒட்டவைத்தார்கள். அருகேவந்த இரு காந்தத் துண்டுகள் ஒன்றை யொன்று கதுமெனப் பற்றிக்கொள்வது போல இரண்டு சுண்டு விரல்களும் எப்படியோ வளைந்து சங்கிலிபோல இறுகப் பற்றிக்கொண்டன.

'வலமாகச் சுற்றி வரட்டும்' என்றார் பக்கத்திலிருந்த ஒரு பெரியவர். முதலில் ஒரு கன்னிப்பெண் ஓடிவந்து ஒரு காமாட்சியம்மன் விளக்கை அலங்கரைத்த ஒரு தட்டில் வைத்து ஏந்திக்கொண்டாள். அப்பெண்ணுக்குப் பின்னால் வரிசையாக, முளைத்த தானியங்களைச் சிறு சிறு பெண்கள் மண் கலங்களில் ஏந்தி நின்றனர். அக் கலசங்கள் ஏற்கனவே மணப்பந்தரில் வைக்கப்பெற்றிருந்தன. அவ்வரிசைக்குப்

973

பின்னே மாப்பிள்ளைத்தோபுர் மாப்பிள்ளையின் இடது கைச் சுண்டு விரலைத்தனது வலது கைச் சுண்டுவிரலால் பற்றிக் கொண்டுநின்றார். அவருடைய இடதுகையில் மாப்பிள்ளையின் மணக்கோட்டையும் கிளிபோன்ற பூச்செண்டும் இருந்தன. மாப்பிள்ளைக்காக அவர் அவற்றைத் தாங்கிச்செல்ல வேண்டியது மரபு அல்லவா? மாப்பிள்ளையின் வலது சுண்டு விரலும் பெண்ணின் இடது சுண்டுவிரலும் முன்பே கோத்துக்கொண்டு இருந்தன என்று அறிந்தோம். இந்தப் புகைவண்டி மெல்ல நகர்ந்துது. மணப்பந்தரை வலமாகச் சுற்றிவந்தது.

மூன்று முறை சுற்றிவருவதற்குள் எவ்வளவோ நேரமாய் விட்டது. காரணம் விளக்கு ஏந்திய பெண் கொஞ்சத்தில் நகரவில்லை. பந்தலின் மூலைக்கு மூலை வந்து நின்றுவிட்டாள். கன்னியர்கள் ஆலம் ஏந்திக் கருத்தாய் நிற்கிறோம் ஐயே! கருத்தாய் 'நிற்கிறோம் அம்மா! கட்டின பணம் அவிழ்கக் கைகள் நோகுதோ ஐயா! கைகள் நோகுதோ அம்மா! என்று பாடத்தொடங்கி விட்டாள்" முளை ஏந்திய பெண்களும் தொடர்ந்து பாடினார்கள். எந்தக் கருத்தோடு நிற்கிறார்கள் என்பது பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குத் தெரியாமல் இல்லை. ஆனால், பணமுடிச்சை அவிழ்ப்பதென்றால் எளிதாக இருக்கிறதா? ஒவ்வொரு நிலையிலும் குறித்த தொகை தட்டில் விழுந்தபிறகே பெண்கள் நகர்ந்தார்கள். இது என்ன தொல்லையாக இருக்கிறதே என்று எவரும் எண்ணியிருக்க மாட்டார்கள். ஒருவேளை, பணத்தைப்போட வேண்டி வந்தவர்களுக்கு, அப்போது மட்டும் தொல்லையாகத் தெரிந்திருக்கலாம். இருந்தாலும் இத் தொல்லையை மகிழ்ச்சிதரும் தொல்லையாகவே அவர்களும் கொண்டிருப்பர்.

இவ் வழக்கத்தைப் பற்றிக் கூட்டத்தில் சிலர் போற்றியும் சிலர் தூற்றியும் பேசிக்கொண்டார்கள். ஆனாலும், இதைக் குறித்து அவ்வளவு கடுமையான வாதம் நடக்கவில்லை. கூட்டத்தின் ஒரு பகுதியில் வேறு ஒரு பலமான பேச்சு நிகழ்ந்து கொண்டிருந்தது. இளம் பிள்ளைகள் உட்கார்ந்து கொண்டிருந்த இடம் அது. இனி மாப்பிள்ளைகள் ஆகப்போகும் இளைஞர்கள், வெள்ளைச்சட்டையணிந்த பிள்ளைகள். சட்டையின் நீளக்கைகளை மடித்து விட்டுக்கொண்டு, கைக்குட்டையை அந்த மடிப்பு ஒன்றில் சொருகிவைத்திருந்தார்கள்.

சட்டையின் கழுத்துப்பட்டையிலும் சிலர் தம் கைக்குட்டை களைச் சொறுகி வைத்துக்கொண்டிருந்தனர். இவர்களிடையே வாதத்திற்குப் பொருளாக இருந்தது, ஏன் பெண்ணும் பிள்ளை யும் பந்தலை வலமாகச் சுற்றி வரவேண்டும்' என்பதே யாகும். 'சுற்றிவருவதுதான் ஏன்' என்று கேள்வியை நல்லகாலமாக எவரும் எழுப்பவில்லை. பெண்களின் கையை மாப்பிள்ளை பற்றிக்கொண்டிருக்க ஒரு வாய்ப்பு அளிப்பதனுல் அதைப் பற்றிக் கவலைப்பட்டபோது என்னவோ வாழ்ந்து வருவதற்கு மாற்ருக, இடமாக வந்தால் என்ன கெட்டுப்போய்விடும்? என்பதைப் பற்றித்தான் பேச்சு வலுத்துக்கொண்டு வந்தது. வலமாகச் செல்வதுதான் சரி யென்ற எண்ணம் சிலருக்கு இருந்தாலும் அது தனக்குச் சொல்ல எவருக்குமே திடமில்லா மல் இருந்தது. வலமாகப் போகவேண்டும் என்று கூறும் பழக்கம் குருட்டுப்பழக்கந்தான் என்று பலரும் வாதாடினர். அருகில் அமர்ந்திருந்த சில வயதானவர்களுக்கு, 'இதென்ன அந்நியாயமாக இருக்கிறது, படித்த பிள்ளைகளின் அறிவு இப் படியும் கெட்டுப்போய் விட்டிருக்கிறதே' என்று தோன்றிற்று. ஆனல் அனைவரும் வலமாகப் போவதுதான் சரி என்பதற்கு அறிவுக்குப் பொருத்தமான தக்க சமாதானம் ஏதும்காட்ட முடி யாமல் தவித்தனர்.

இயற்கைக்கு மாருன பழக்க வழக்கங்கள் நம்மிடையே பல புகுந்துவிட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் வல மாகச் சுற்றுவது என்பதும், என்ற முடிவுக்கு அக் கூட்டம் வந்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் அக் கூட்டத்தில் இருந்த சிறு பையன் ஒருவன் 'இயற்கைக்கு மாருன பழக் கமா?' என்று திடீரென ஒரு கேள்வியைக் கேட்டான். அவன் வகுப்பில் இயற்கைப் பாடம் படிக்கிறவன். அப்பாடத்தில் நிலம், நிலா, முதலிய கோணங்களைச் சுற்றிவருவது பற்றிய செய்திகளை அவன் படித்தது நினைவுக்கு வந்தது. அவை வலமாகச் சுற்றி வருகின்றன என்று எழுதியிருப்பதை யுணர்ந் தான். கோளங்கள் யாவும் வலமாகத்தானே சுற்றி வருகின்றன நாமும் வலமாகச் சுற்றுவதுதான் இயற்கைக்குப் பொருத்தம் என்று ஒரு போடு போட்டான். அதற்குமேல் விளக்கம் அவனுக் குத் தெரியவில்லை.

ஆனல் இந்த உண்மையை யறிந்து கொண்டதும், அந் நாட்டிலிருந்த ஒரு பெரிய பிள்ளை அதைக் கொண்டு வாதாடத்

தொடங்கினார்கள். வான நூலிலே ஒவ்வொரு கோளத்தின் இயக்கமும் இடமிருந்து வலமாகவே இருக்கிறது என்றே முடிவுக்காட்டிக் கூறுகிறார்கள். ஏனநூல் அணுவிலே கூட ஒரு பகுதி இயக்கும் ஒரு பகுதி உண்டு என்றார்கள். அப்பகுதி இடமிருந்து வலமாகவே இயங்குகிறது என்று திட்டமாக அறிந்து கூறியிருக்கிறார்கள். உலகத்தில் எப்பொருளின் இயக்கமும் வலமாகச் செல்வதுதான் இயல்பாக இருக்கிறது. இயற்கையோடு வந்தவாழ்வு வாழ விரும்புவோமானால் நாமும் இடமிருந்து லலமாக இயங்குவதே பொருத்தமாகும், என்று மூச்சுப்பிடித்துப் பேசினார்.

மற்ற இளைஞர்கள் வாய்வாளாமை காத்தனர். ஒருவன் மட்டும் சிறிது மௌனத்தில் இருந்து·பிறகு வாயைத் திறந்தான். ' எண்ணெய்ச் செக்கு தெரியுமா?' என்றான். என்ன சொல்லப் போகிறானோ என்று ஒவ்வொரும் அவனை விழித்து நோக்கினர். 'அது வலமாகப் போகிறதா? இடமாகப் போகிறதா? என்று துளும்பிக்கொண்டே கேட்டான். 'இடமாகத்தான், இடமாகத்தான்' என்ற குரல் வறத்துக்கேட்டது.' உலகத்தில் இயக்கமெல்லாம் வலமாகத்தான் என்று சொவ்வது எவ்வன மடமை!' என்றான். வலமாகச் செல்லும் மூடப் பழக்கம் ஒழிக!' என்ற குரல்கள் வெற்றி முழக்கம் செய்தது.

இத்தோட இது திருமணவீட்டில் ஒழிக! ஒலி என்று சிலர் அப்பக்கம் திரும்பிப் பார்த்தனர். வானநூல் செய்தியைக்கூறி விளக்கிய இளைஞனுக்கு மூளை வேலை செய்தது. 'ஆமாம், செக்கு ஓடுவது இடமாகத்தான். இயற்கைக்கு மாறுதான் அது. எள்ளுக்குள் இருக்கும் அணுக்களின் வலமான இயக் கத்தை மாற்றி, எண்ணெய் முறித்து நசுக்கி, அதிலிருந்து எண்ணெய் எடுக்க இயற்கைக்கு மாறான இடமாகப் போகும் இயக்கந்தான் தேவை. செக்கு வலமாக ஓடினால் எண்ணெய் எளிதில் இறங்காது என்பதை யறிந்தே, செக்கினை இடமாக் ஓட்டும் அறிவார்ந்த பழக்கத்தை நம் முன்னோர்கள் அமைத்து வைத்திருக்கின்றனர். ஆனால், செக்குக்கு மட்டுமே, அல்லது அதைப்போல இயற்கைக்கு எதிரான செயல்கள் செய்ய மட்டுமே இடமாகச் செல்லும் இயக்கம் தேவையாகும்

மற்றப்படி இயற்கையோடு ஒத்துச் செல்லும் இயக்கம் வலமாகச் செல்லும் இயக்கமே யாகும்' என்று விடாமல் பேசி முடித்தான்.

எவரும் வாயைத் திறக்கவில்லை. வலமாகச் செல்பது அவ்வளவு அறிவான பழக்கம் என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டதற்கு அடையாளமே அந்த மௌனநிலை. இதற்குள் பந்தலை மூன்றுமுறை வலம்வந்து விட்டார்கள் மணமக்கள் பாலும் பழமும் அருந்திச் சென்றூர்கள். பெண்கள் கூட்டமும் உடன் சென்றதும் மற்றவர்கள் இலையை எதிர் பார்த்து இருந்தனர்.

கனம் இராஜாஜி அவர்கள் கருத்து

என் சொந்த சமாச்சாரம் என்ன? இவ்வளவு மாதங்கள் ராமாயணத்துடன் கூடிக் குலாவி அதற்குப் பணிசெய்யும் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தேன். அந்தக் கனவு இப்போது முடிந்துபோயிற்று. பிராட்டியினின்று பிரிந்தபோது சக்கரவர்த்தித் திருமகன் துயரமடைந்தான். அயோத்தியைவிட்டுப் பிரிந்தபோது துக்கப்படவில்லை. அதைப்போலவே என்னளவில் என் சொந்தக் கதையும். பலவித பணிகளிலும் பொறுப்புகளிலும் பதவிகளிலும் நான் இருந்து பிரிந்திருக்கிறேன். பிரிந்தவுடன் இன்னது செய்வது என்பது தோன்ருமல் குழப்பம் அடையவில்லை. ஆனுல் இப்போது சக்கரவர்த்தித் திருமகன் கதையைச் சொல்லும் பணி முடிந்துபோனதும் மூர்த்தியில்லாத கோயிலைப்போல் எல்லாம் ஏதோ வெறித்துப்போனமாதிரியிருக்கிறது. பணியற்ற வாழ்வின் கதி இது என்பதை யாவரும் தெரிந்துகொள்ளவேண்டும். பணியைப் பாரமாக நினைக்கவேண்டாம். பணியே உயிருக்கு உயிர் தரும் ரகசியம்.

> குர்வன் னேவைஹ கர்மாணி ஜிஜீவிஷேத் சதம்ஸமாஹ்
> ஏவம் த்வயி நான்யதே நோஸ்தி.

என்று ரிஷி சொன்னது இதுவே. செய்யும் காரியங்களில் பசை வைத்துக்கொண்டு அலையக்கூடாது. ஆனுல் பணிகள் செய்துகொண்டேயிருந்தால் மட்டுமே வாழ்க்கையைச் சகிக்க முடியும்.

கல்கி, 6—11—55.

சிறுவர் பகுதி

977

அறிவும் அருளும்

திரு சிவை அவர்கள்

அருளுடைமை என்ருல் எல்லா உயிர்கள் மீதும் செலுத்து கின்ற இரக்கமாகும். தொடர்புடையார்மாட்டுச் செலுத்தும் இரக்கம் அன்பும், தொடர்பு இல்லா எவ்வுயிர்மாட்டும் செலுத்தும் இரக்கம் அருளுமாகும்.

சிபிச்சக்கரவர்த்தி ஒரு புருவின் பொருட்டு தன்னுடம் பைக் கொய்து கொடுத்தது அருளாகும். கண்ணபிரான் குசேலமுனிவர்க்குப் பொருளுதவியது அன்பின்பாற்படும். இதனைத் தாயுமானச்செல்வர்,

"எவ்வுயிரு மென்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய்! பராபரமே."

எனத் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். ஆதலின் நாம் பிறவுயிர் களை நம் உயிர்போல் எண்ணவேண்டும். பிற உயிர்கள் இடுக்கணுற்ருல் அதனை நமக்குற்றதுபோல் கொண்டு நீக்க வேண்டும். அருளுடைய நெஞ்சுடையார் அறிவு சிறந்தும் விளங்குவர். அருளைப்போற்ருது அறிவையே வளர்த்தால் பயனையடைய முடியாது. நல்லறிவை வளர்ப்பது நன்மை பயக்குமேயானுலும், அருளையும் உடன் பெருக்கவேண்டும். "அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்பது பொய்யாமொழி. அறிவு பெருக் கத்துடன் அருளையும் உடைய ஒரு சிறுவனின் கதையைப் பார்ப்போம்.

ஆங்கில நாட்டில் ஓர் செல்வர் தம் சிறுவனை எல்லாக் கலைகளையும் கற்றுவல்ல ஓர் ஆசிரியரிடம், அவருக்கு இடை விடாது தொண்டுபுரிந்து கல்வி கற்குமாறு அனுப்பினர். அச் சிறுவனும் ஆசிரியர் மனம்கோணுது நடந்து செவ்வனே கல்வி கற்று வந்தான்.

வழக்கம்போல் ஒருநாள் ஆசிரியரும், அவனும் உலாவச் சென்றனர். வழியில் ஓர் வயலின் அருகே ஒரு செடியில் ஓர் அங்கி தொங்கிக்கொண்டிருக்க, அதனடியில் இரண்டு மிதியடிகள் (Boots) இருந்தன. அவை அயல்வயலில் வேலைசெய்யும் ஓர் வறுமையுற்ற கிழவர் உடையனவாம்.

இவைகளைக்கண்ட அச்சிறுவன் தன் ஆசிரியரைநோக்கி, ஐய! இம்மிதியடிகளை யான் ஒளித்துவைத்துவிடுகின்றேன். கிழவர் வந்து அவைகளைத் தேடி அலைவர். அதனைக் கண்டு நாம் மகிழ்வோம் என்றான்.

அதற்கு ஆசிரியர் புன்சிரிப்புடன் குழந்தாய்! நீ செய்ய நினைத்த செய்கை நினக்குச் சிறிது மகிழ்ச்சியைக் கொடுக்குமாயினும் கிழவர் மனம் புண்படும். ஆனல் யான் சொல்லுகிறபடி செய்வாயானல் நீயும் மகிழ்ச்சியடைவாய்; கிழவரும் மகிழ்ச்சியடைவார்; யானும் இன்புறுவேன் என்றார். சிறுவன் தயைகூர்ந்து சொல்லும் என்றான்.

அதற்கு ஆசிரியர் நீ செல்வம் மிக்கவன். ஆதலின் மிதியடிகள் ஒவ்வொன்றுள்ளும், ஒவ்வொரு பொற்காசை வைத்துவிட்டு, இங்கு நாம் மறைந்திருப்போம். பின் நிகழ்வதைக் கண்டு இன்புறுவோம் என்றார். சிறுவனும் அங்ஙனமே பொற்காசுகளை அவைகளினுள் வைத்தான். பின் இருவரும் மறைந்திருந்தனர்.

கதிரோனும் மேற்கடலில் குளித்தான். பொழுதுசாயவே கிழவர் வேலையை முடித்துவந்து செடியில் இருந்த அங்கியை எடுத்து அணிந்துகொண்டு, மிதியடிகள் ஒன்றில் காலைப் புகுத்தினர். ஏதோ காலில் உறுத்தவே என்னவென்று எடுத்துப் பார்த்தார். அந்தி ஒளியில் அப்பொற்காசு மின்னிற்று. கிழவர் ஒன்றுந்தோன்றாது திகைப்புற்றார். யார் செய்த சூழ்ச்சியோ? என்று சுற்றுமுற்றும் பார்த்தார். யாரும் தென்படவில்லை. ஆண்டவன் அருள் என நினைத்து, இறைவனே! வறுமையில் வாடும் என் மனைவி மக்களுக்கு இன்றைய கூலி போதாதே என துயருற்றிருந்த எனக்கு நீர் செய்த இந்நன்றிக்கு என்ன கைம்மாறு செய்வேன் என துதித்து, வணக்கம் செலுத்தினர். மிக்க மகிழ்ச்சியுடன் இன்னொரு மிதியடியில் மற்றொரு காலைப்

979

புகுத்தினர். அதிலேயும் ஒரு பொற்காசு இருக்கக் கண்டு அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஆண்டவனே! உன் பேரருளை என்னவென்று சொல்வேன்? என்னே நின்கருணை இருந்தவாறு? என்கடன் எல்லாம் தீர்ந்துவிடும். இனி யானும் என் மனைவி மக்களும் பட்டினி கிடக்கமாட்டோம் என்று வாயாரப்பேசி வணங்கினர்.

இவ்வரும் பெருங்காட்சியை மறைவிலிருந்து கண்ணுற்ற ஆசிரியரும் மாணவரும் அருள்வயப்பட்டு மகிழ்ச்சியால் கண்ணீர்விட்டனர்.

அப்போது ஆசிரியர் மாணவனை நோக்கிக், குழந்தாய்! இந்நற்செய்கை எத்தகைய இன்பத்தை அளித்தது? கிழவரிடமும் நம்மிடமும் ஓர் உயர்ந்த இறையுணர்ச்சியை உண்டாக்கியது. இதுவுமன்றிக் கிழவர் வீடு சென்று தம் மனைவி மக்களிடம் எதிர்பாராத நிலையில் ஆண்டவன் இத்தகைய உதவி புரிந்ததைக் கூறினல் அவர்கள் பேரின்பமடைவர் அன்றோ! உன் தந்தையார் நீ புரிந்த இச்செயலை அறிந்ததும் எவ்வளவு மகிழ்வர்? இதுவே ஆண்டவன் அருள் விளையாட்டாகும் என்றார்.

சிறுவனும் தனது ஆசிரியரால் தானடைந்த இன்பத்தை மறவாது மென்மேலும் அறிவைப் பெருக்கி அதனுடன் அருளையும் வளர்த்துவரலானன்.

ஆதலின் நாமும் அறிவோடுகூடிய அருட்செய்கைகளையே புரிய முயற்சி செய்யவேண்டும்.

‘ நன்றிமறவேல் ’

நன்றியை நினைகரும்போதெல்லாம் ஆக்கம். நன்றி அல்லாதவற்றை எண்ணும்போதெல்லாம் கேடு. ஆக்கம் வேண்டுவது கேடு வேண்டாதது. நன்றியை என்றும் நினை. அல்லாதவற்றை அன்றே மற.

“ நன்றி மறப்பது நன்று அன்று நன்றுஅல்லது
அன்றே மறப்பது நன்று.”

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

எடுக்க எடுக்கக் குறையாதது

திரு. கை. திலகவதி

கோபால் ஒரு சிறிய பையன். அவனுக்கு வயது ஐந்து. அவன் தன்னுடைய தாயாரோடு வசித்துவந்தான். அவனுடைய தாயார் அவனைப் பள்ளியில் சேர்த்தாள். அவன் ஒருநாள் பள்ளிக்குப் போகமாட்டேன் என்றான். ஏன்? வழியில் ஒரு சிறிய காடு இருந்தது. அதன்வழியாகப் போகும்பொழுது காலையில் அவ்வளவு பயம் இருக்காது. ஆனால் மாலையில் பள்ளியைவிட்டு வரும்பொழுது அங்கே அவனுக்குப் பயம் அதிகமாய் இருந்தது.

ஒருநாள் இரவு இவனைத் தூங்கவைத்துவிட்டு முருகனைப் பார்த்து நீதான் என்னுடைய மகனைக் காப்பாற்றவேண்டும் என்று கவலையோடு வேண்டிக்கொண்டாள். மீண்டும் மறு நாள் அவன் பள்ளிக்குப் போகமாட்டேன் என்று சொன்ன பொழுது. தாயார் நீ பள்ளிக்குப் போகும்பொழுது பயமாக இருந்தால் அண்ணா! அண்ணா! என்று கூப்பிடு. ஒரு பெரிய அண்ணன் உனக்கு உதவிசெய்வான் என்றாள். இவன் போகும்பொழுது பயமாக இல்லை. வரும்பொழுது மிருகங்கள் மரத்தில் ஒளிந்துகொண்டு இருந்ததைப்போல் தென்பட்டன. இவனுக்குப் பயமாக இருந்தது. அண்ணா! அண்ணா! என்று கூப்பிட்டான்.

உடனே யாரோ ஒருவன் பதினெட்டு வயதை உடைய வனைப்போல் காணப்பட்டான். நேரே வந்து இவனைக் கையைப் பிடித்துப் பயப்படாதே என்று சொல்லிக் காட்டுக்கு வெளியே வந்து விட்டுச்சென்றான். இதேமாதிரி பிறகு காலை யிலும் மாலையிலும் ஒவ்வொருநாளும் இந்த அண்ணா உதவி செய்துவந்தார். இம்மாதிரி பலநாள் சென்றன.

பிறகு ஒருநாள் ஆசிரியர் பள்ளிக்கூடத்தில் கலைமகள் விழா நடத்தினர். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பண்டம் கொண்டுவந்து கொடுத்தான். கோபாலனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அம்மாவிடம் கேட்டான். அம்மா ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டாள். தன்னுடைய

ஏழ்மை நிலையை நினைத்து வருந்தினள். பிறகு உன்னுடைய அண்ணாவைக் கேள்; கொடுப்பான் என்று சொன்னாள்.

கோபாலன் காட்டில் இருந்த அண்ணாவிடம் சொல்லித் தனக்கு உதவிசெய்யுமாறு கேட்டுக்கொண்டான். அண்ணனும் கையில் ஒரு சிறிய கிண்ணத்தில் தேனைக் கொண்டுவந்து கொடுத்தான். தேன் கொஞ்சமாக இருந்தது. இது போதுமோ போதாதோ என்று சந்தேகம். ஆசிரியர் கோபித்துக்கொள் வாரோ என்ற வருத்தம் இவையெல்லாம் அவன் மனத்தைக் குழப்பியது. இருந்தாலும் வேறு வழியில்லை. கிண்ணத்துடன் தேனைக் கொண்டுபோய் ஆசிரியரிடத்தில் கொடுத்தான்.

அவர் இது மிகவும் குறைவாக இருக்கிறதே இது எப்படிப் போதுமானதாய் இருக்கும் என்று கோபாலன் நினைத்தபடி கோபித்துக்கொண்டார். இருந்தாலும் வேறு எந்தப்பையனும் தேன் கொண்டுவரவில்லை. ஆகையால் இது இருக்கட்டும் என்று வாங்கிவைத்துக்கொண்டார். விழாவில் விருந்து ஒன்று நடந்தது. மற்றப் பொருள்களைப்போல் தேனும் விருந்தில் வழங்கப்பெற்றது. ஆனால் கிண்ணத்தில் தேன் குறையவே இல்லை. எடுக்க எடுக்கக் குறையாமல் பெருகிய தேனைக் கண்ட ஆசிரியர் ஆச்சரியம் அடைந்தார். கோபாலனை அழைத்துத் தேன் கொடுத்தவரைக் கோபாலன் காட்டிற்கு அழைத்துச் சென்றான். அண்ணா! அண்ணா! என்று கூப்பிட்டான். அண்ணா வரவில்லை. ஆனால் ஒரு குரல் கேட்டது. அது சொன்னதாவது :- உன் தாயாரைப்போல் வழிபடுகிறவர்கள் தான் என்னைப் பார்க்க முடியும். மற்றவர்கள் என்னைப் பார்க்கமுடியாது.

திருவடி சரணம்

த்வதன்ய: பாணிப்யாமபயவரதோ தைவத கணஸ்
த்வமேகா நைவாஸி ப்ரகடித வராபீத்யபிநயா|
பயாத் த்ராதும் தாதும் பலமபிச வாஞ்சா ஸமதிகம்
சரண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ||

ஜகன்மாதாவே! அபய வரத ஹஸ்தமுடைய தேவதை பலர் இருப்பினும், அச்சத்தினின்று காக்கவும், விருப்பத்திற்கு அதிகமாகக் கொடுக்கவும் உன் திருவடிகளே திறமையுடையன.

ஸௌந்தர்யலஹரீ.

தொடர்கதை

மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சென்ற இதழில்: பொன்முடியைச் சந்தனத் தேவன் கருவூர்க் கானகத்தில் சிறைவைத்திருந்தான். அவள் விடுதலை கோரி உதவி கிடைக்குமா என்ற வினாக்குறியோடு புறப்பட்டாள் சொக்கி என்ற பணிப்பெண். பூங்காட்டு மண்டபத்தை யடுத்து ஏமாற்றமடைந்த சொக்கி பொன்முடியின் தந்தை நல்லானிடம் சொல்வதற்காகப் பூம்புகார் நோக்கிப் புறப்பட்டாள் ..

பதினைந்தாம் அத்தியாயம்

செய்தி தெரிந்தது!

மண்டபத்தின் ஓரமாக இருந்த மல்லிகைப் புதரை நோக்கியபடிப் படிக்கட்டுகளில் உட்கார்ந்திருந்தாள் பொன்னி தேவி. இயற்கை அன்னையின் இதயப் பூரிப்பல்லவா அந்த மலர்க்காடு என்று எண்ணியது அவள் நெஞ்சம்.

வெள்ளை வெளேரென்று தும்பைப்பூப்போல இருந்த அந்த குண்டுமல்லிகை! எத்தனை அழகு! பச்சைப்பசேர் என்ற இலைகளுக்கு நடுவே பதித்த முத்துக்களாக விளங்கின அவை. சற்றுதூரத்தில் சலசலப்பு கேட்டது.

குற்றாலநாதர் கோவிலுக்கு இடதுபால் மண்டபத்துக்கு வருவதற்காக வளைந்து வளைந்து வரும் பாதையில் இளவரசன் பாரி வெண்புரவியின்மேல் வந்து கொண்டிருந்தான். ஆனால்... புலவரைக் காணோமே? எங்கே பிறைசூடியார்? பொன்னி யின் மனத்தில் ஒரு சிறு துணுக்கம் உண்டாகியது.

'அண்ணா! போன காரியம்' கொஞ்சலாகக்கேட்டாள் இளவரசி. அவள் குரலில் ஆர்வம் இழைந்தது.

'காயா பழமா என்கிருயா? பொன்னி! இன்னும் பழுக்க வில்லை? – என்று கூறிய வண்ணமே குதிரையை மண்டபத்துத் தாண் ஒன்றில் இழுத்துக் கட்டினுன் இளவரசன்.

'அப்படியென்றுல்?'

'காரியம் இன்னும் வெற்றியடையவில்லை என்பது பொருள்'.

'களைப்பாக இருக்கிருயே? வா அண்ணு! புலவரைக் காணவில்லையே?'

'காணப்பேரெயிலுக்குச் சென்றிருக்கிருர் பொன்னி; அதுசரி; மருதநம்பி எங்கே?' – இளவரசன் நடந்தான்; தொடர்ந்து சென்றுள் இளவரசி.

'இங்கேதான் இருந்தான் அண்ணு! சுனைப்பக்கம் போய் யிருப்பான்?

இளவரசி இட்ட அறுசுவைச் சாப்பாட்டை மகிழ்ச்சியோடு சுவைத்துச் சாப்பிட்டான் இளவரசன். 'பொன்னீ! இப்போது உன் கைகள் எவ்வளவு சுவையாக உணவுகளைச் செய்கின்றன தெரியுமா? "ஆகா......உண்மையிலேயே தேவ அமிர்தமாக இருக்கிறது இன்று உணவு? – பாரியின் குரலில் அன்பு குழைந் திருந்தது.

'போ அண்ணு! எப்போதுமே உனக்குக் கேலிதான்! பொய் சொல்லுகிருய் அண்ணு! நாளைக்கு அண்ணிவந்து அவள் இடும் உணவையே தேவாமிர்தம் என்று சொல்லுவாய்; அதுதான் உண்மை!'

இளவரசன் சிரித்தான்; அவன் தன் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை இதுவரைக்கும் கட்டமைந்த காளை யாக - விசாலமான மார்பும் தோளும், படைத்தவனுக இருந் தான் அவன். இளவரசி கூறியதும் அவனுக்கு ஏனே சிரிப்புத் தான் வந்தது.

கல்யாண கூடத்தைக் கடந்து பூங்காவுக்கு வந்தார்கள் இருவரும்! என்ன வியப்பு! அனைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இழுத்துக் கட்டப்பெற்ற ஒரு துணியில் ஏதோ தூரிகையால் எழுதிக் கொண்டிருந்தான் மருதநம்பி.

சத்தம் செய்யாமல் அவன் பின்புறம் இருவரும் சென்று எப்படிப் பார்த்தனர். மருதநம்பி கருமமே கண்ணுக இருந்தான். அவன் உள்ளம் கலைஉணர்விலேயே ஒன்றிக்கிடந்தது. மருதநம்பி ஓவியம் எழுதுவான் என்று இத்தனைநாளும் ஒருவருக்குத் தெரியாது... அவன் எழுதவும் ஒய்வேது? ஒரு அழகான நங்கையின் உருவத்தை எழுதிக் கொண்டிருந்தான் மருதநம்பி.

'மருதநம்பி! ஓவியம் எழுதத்தெரியும் என்று இத்தனைநாள் நீ சொல்லவே இல்லையே? என்ற குரலைக்கேட்டுக் கலைத்தவத்திலிருந்து கொஞ்சம் கலைந்தான் அவன், திரும்பிப்பார்த்தான். இளவரசனின் சிரித்த முகம், இளவரசியின் மலர்முகமுமே அவன் கண்ணிற் பட்டன. திடீரென்று எழுந்துநின்ருன்...

'இளவரசே! அவ்வளவு எனக்குத் தெரியாது! பொன்முடிக்கு ஓவியமென்ருல் .....? என்று இழுத்தான் மருதநம்பி.

'ஓ!.. பெண்முடியின் நினைவா?' என்ற இளவரசன் இதழ் ஓரங்களில் குறும்புப் புன்னகை ஒன்று நெளிந்தது.

'பொன்னீ! மருதநம்பி இப்போது இங்கு இல்லை, மதுரையிலே இருக்கிருன்.... மாற்ருர் படையிலல்ல...... மனைவியொடு மாளிகையிலே'..

'இளவரசே! அந்தப் பொல்லாத நினைப்பை ஏன் இப்போது தூண்டிவிடுகிறீர்கள்? அந்த மருதநம்பி —தன்னவரைக் காட்டிக் கொடுக்கும் நேர்மையற்ற மருதநம்பி மாண்டு போனுன்... நான்... நான்... புதியவன்; பறம்பு மன்னரின் காலடியே என் வாழ்வும் தாழ்வும் எல்லாம்...?

மருதநம்பியின் குரலில் உணர்ச்சி ததும்பியது. சுனை நீரிலே கயல் மீன்கள் இரண்டொன்று சாய்ந்து விழுந்த கதிரொளியிலே மின்னின.

எங்கோ இருந்து ஒரு குயிலின் 'குக்கூ' 'குக்கூ' என்ற இனிய ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

'காமன் ரதி' இருவரின் கற்சிலையைக் கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களால் முலாம் பூசிக் கொண்டிருந்தான்.

985

அங்கே அமைதி நிலவியது. அமைதியைச் சிதைதத்து பாரியின் எடுப்பானகுரல்.

'பொன்னீ! தங்காய்! உன் இசையைக் கேட்டுப் பல நாட்களாயின. அன்றொருநாள்... பூங்காட்டு மண்டபத்தை யடுத்த ஆற்றங்கரையிலே அரசமரத்தடியிலே பாடியபாடல் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது... எங்கே! தங்கை... இன்று எங்களுக்கு உன் இசைவிருந்து வை!'

அன்பான அண்ணனின் வேண்டுகோளைப் பொன்னி புறக்கணிக்க முடியுமா என்ன? கடைக்கண்ணால் பாரியைப் பார்த்தபடி தலைகுனிந்து கொண்டாள்; நாணம் அவளிடம் நிலவியது.

'இம்... பாடு தங்கை!'

பொன்னி பாடினாள் :

"உள்ளப்புனத் தருகே — ஒருநாள்
ஓரிளங்காளை கண்டேன்!
வள்ளுவனும் அவனே — நெஞ்சினில்
வந்து நலம் விளைத்தான்!'

'தங்கை! வள்ளுவன் உன் காதலனா?...இம்... அப்புறம்?'

பொன்னியின் இதழ் புன்னகை விளைந்தது. தொடர்ந்து பாடினாள் :

"தொட்டால் சுடுவதல்ல! — உன்பால்
தோன்றிவளர் பெருந்தீ!
விட்டால் அனற்றுமடி! — வேல்விழி!
வேதனை தீர்த்திடென்றான்!" (வள்ளப்)

"வள்ளுவன் வந்துவிட்டால் — காலம்
வளர்தல் தெரியவில்லை!
உள்ளத்தை உள்ளத்தோடு — காதல்
உணர்வில் தமிழ் மொழிவான்!" (வள்ளப்)

பொன்னியின் குரல்வளம் குற்றாலமலைச் சாரலெலாம் புகுந்து இழைந்தது.

186

தமிழ் இசை அல்லவா?

அதிலும் பொருளோ திருவள்ளுவரோடு இணைந்தது. திருவள்ளுவரோடு காதல் செய்யும் ஒரு தலைவி இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பாடுவதுபோல் அமைந்த பாடல். சுவைக்குக் கேட்க வேண்டுமா?

இளவரசனும் மருதநம்பியும் திருவள்ளுவரையே நேரில் கண்டனர்; எப்படி? காதலராக; கட்டிளங் காளையாக!

"நீங்கின் தெறூஉம்; குறுகுங்கால் தண்ணென்னும்
தீ, யாண்டுப் பெற்றாள் இவள்"

என்ற குறளின் மணம் முகிழ்த்து மலர்ந்த கவி மலராக இருந்தது அக்கவிதை.

பொன்னி தன்னைமறந்து பாடினாள்; அதுதான் தமிழ் இசையின் தனிச்சிறப்பு. இசை இறைவனின் உடல். ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன் அவன். எனவேதான் இசையிலே, கடவுள்தன்மை இறைத்தன்மை, கலந்திருக்கிறது.

பொன்னி! உன் இசை எங்களை இசை உலகிலேயே தவழவிட்டது. எங்கள் சிந்தை நிறைந்தது. அமைதி நெஞ்சில் பரவியது...?

'இளவரசி! அதிலும் தாங்கள் திருவள்ளுவரைக் காதலராக இணைத்துப் பாடிய பொருளாழமிக்க பாடல்கள் எங்கள் உள்ளத்தோடு ஒன்றாயின' என்றான் மருதநம்பி.

'பொழுது நன்றாகப் போய்விட்டது! அண்ணா! வாருங்கள் உள்ளே போகலாம்!'

மூவரும் மண்டபத்தின் உட்பக்கம்நடந்தார்கள். கல்யாண கூடத்தைத் தாண்டித் தாழ்வாரத்துக்கு வந்ததுதான் தாமதம் அங்கே ஒரு வியப்புக்குரிய நிகழ்ச்சி காத்திருந்தது. மல்லிகையும் நிலாமுடியனும் வந்துகொண்டிருந்தார்கள்!

'இளவரசே! இளவரசீ! இந்த ஏழைகளை மறந்தே போய் விட்டீர்களே'

என்று ஒரு சேரக் கூறியவண்ணம் ஓடிவந்து கால்களில் விழுந்து வணங்கி அப்படியே காலைக்கட்டிக் கொண்டார்கள் அவர்கள். மல்லிகையை வாரி அணைத்துக் கொண்டாள் பொன்னி. அவர்கள் இருவர் கண்களினின்றும் மகிழ்ச்சிக் கண்ணீர் வழிந்தது. நிலாமுடியனை எடுத்து நிறுத்தினான் இளவரசன்.

'இளவரசே! இந்த ஏழைகளை மறந்துபோய்விட்டீர்கள்! ஒருதடவைகூட இங்கு வரச்சொல்லி உத்தரவு வரவே இல்லை. இன்றைக்கு வரும் நாளைக்கு வரும் என்று காத்திருந்து ஏமாந்தே போனோம். ஆகவேதான் எங்களை நீங்கள் சினந் தாலும் வந்து வணங்கியே தீருவது என்று புறப்பட்டு விட் டோம் இளவரசே!' மூச்சு விடக்கூட நேரமில்லாமல் விரைந்து பேசி முடித்தான் நிலாமுடியன். மேலும் தொடர்ந்தான்.

'மல்லிகை இளவரசியைப் பார்த்தால்தான் ஆயிற்று என்று என்னிடம் ஒரு வாரமாகச் சண்டைபிடிக்க ஆரம்பித்து விட்டாள்' என்று சொல்லி மல்லிகையை ஓரக்கண்ணால் நோக்கினான் நிலாமுடியன்.

நிலாமுடியனிடம் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தான் இளவரசன். மருதநம்பி சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுக் கண்ணயர்ந்தான். பிரான் மலையைப் பற்றிய செய் திகள், பூங்காட்டு மண்டபத்தைப் பற்றிய செய்திகள், மதுரை யைப் பற்றிய செய்திகள், உக்கிரப் பெருவழுதி பாண்டிமா தேவியோடு பூங்காட்டு மண்டபத்துக்கு, வந்தது, பார்வை யிட்டது, முதலில் எல்லாவற்றையும் நிலாமுடியன் சொல்லித் தீர்த்தான். தந்தப் பேழையைப் பற்றி அவன் தொடங்கியதும் இளவரசன் அவசர அவசரமாக அதைப் பற்றித் தொடர்ந்து வினாக்களை அடுக்கினான்!

'இளவரசே! தந்தப்பேழையை நானும் மல்லிகையும் மன்னர்பார்வையிட வந்து விடுவார் என்று தெரிந்ததுமே அப் புறப்படுத்திக்கொண்டு வந்துவிட்டோம். குடிசைக்குள் ஒரு ஆள் ஆழம் குழிவெட்டி அதற்குள் ஒரு மரப்பெட்டியில் தந்தப் பேழையை வைத்துப் புதைத்து விட்டோம்; பத்திரமாக இருக் கிறது; பறம்புநாட்டுப் பரம்பரை பரம்பரையாகவரும் அக்கலைக் கருவூலம் பாதுகாக்கப் பட்டு விட்டது இளவரசே! என்று விடையிறுத்தான் நிலாமுடியன், இளவரசரின் கண்களில் நீர்

188

துளிர்த்தது. நிலாமுடியனின் நேர்மையைத்தான் அன்று ஐயப் பட்டதை எண்ண எண்ண அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவனைத் தழுவிக்கொண்டேன்.

'நிலாமுடியா! பறம்புநாட்டுக்கு ஏற்பட இருந்த மாசு உன்னால் போக்கப்பட்டுவிட்டது. தந்தப் பேழையைப் பற்றித் தந்தையார் என்னிடம் கூறியிருக்கிறார்களே ஒழிய அதனுள் இருப்பதைப்பற்றிக் குறிப்பிடவே இல்லை! பாரியின் காலத்தில், வழிவழி வந்த வான்பொருள் மறைந்து போயிற்று என்ற மானக் கேடான செய்தியை மடியவைத்த உன்னை எப்படிப் போற்றுவ தென்றே தெரியவில்லை'—என்று கூறினான்; நிலாமுடியனுக்குத் தான்செய்த தொண்டின் பெருமை இப்போதுதான் தெளிவாகத் தெரியத்தொடங்கியது.

* * *

பொன்னியும் மல்லிகையும் எப்போது தொடங்கினார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. அப்படிப் பேசினார்கள்! பறம்புநாட்டு விடுதலையைப் பற்றிப் பேசினார்கள். திருக் குற்றாலத்தைப்பற்றிப் பேசினார்கள். புலவர் பிறைசூடியாரைப் பற்றியும் பேசினார்கள்.

ஆனால் மறுநாள் காலை அவர்கள் கேட்கப்போகும் வியப் பான செய்தி இப்போது அவர்களுக்கு எப்படித் தெரியும்? அதுதானே மனித மனத்தின் தன்மை! (தொடரும்)

"ஞானசம்பந்தம்"

பதினைந்தாவதாண்டின் முதல் மலர்

சிவஞானத்தை வாரிவழங்கும். அதில் அகத்திய முனிவர் அடங்கல் முறையைப் பகுத்தருளிய வகை யில் 'குருவருள்' முதலிய எட்டும் பற்றிய உயரிய கட்டுரைகள் இடம் பெறும். காலத்திற்கேற்ற எளிய நடையில் பழைய வைதிக சைவ நலம் அளிக்கும் வண்ணம் அறிஞர் கட்டுரை எழுதி அனுப்பலாம்.

ஆசிரியர்.

வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துஜோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மதஷு கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய

17-11-55 முதல் 15-12-55 முடிய)

1. மேஷம் அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களில் பரணி 2, 3 பாதங்களைத் தவிர மற்ற 6 பாதங்களின் பலன் சுபத்தைத் தரும். ரோகசாந்தியாகும்; பெரியோர் அன்பு கிட்டும்; உத்தியோகம் ஓங்கும்; நூதனவஸ்திராபரணச் சேர்க்கை ஏற்படும்; சந்தோஷம் தரும்; தொழில் மேன்மை; தூரயாத்திரை; நஷ்டவஸ்துபிராப்தி இவைகளைத் தந்து சுபம் ஓங்கும். புதன், வியாழன் சுபவாரமாகும்.

2. விருஷபம் கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½

விருஷபராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் சுபமே தரும். சுக போஜனம்; வஸ்திராபரணச் சேர்க்கை; சயன சுகம்; வியவகாரவெற்றி; கீர்த்தி; பிரியஜனசேர்க்கை; உத்தமபதபிராப்தி; தேவதாகுருபக்தி; காரிய சித்தி; சத்துருபராஜயம் அடைதல் முதலிய சுப பலன்கள் நடந்து சந்தோஷம் தரும். சனி, வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾

மிதுனம் சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் மிகுந்த பயத்தை பலவிதத்திலும் தந்து கஷ்ட நஷ்டங்களை விசேஷமாய் உண்டுபண்ணும். தேவ கோபமும், பெரியோர் இனவருத்தமும் உண்டாகும். அவமானச்சொல்லும், அபவாத பயமும் அதிகமாகும். ரொம்ப கவலை உண்டாகி மனம் மாறுதல் ஏற்படும். சனி, வியாழன் அசுபம் காட்டும்.

4. கடகம் புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4 ஆம்பாதமும் பூசம் 4 பாதங்களும் மிகுந்த பயத்தைத்தரும். குடும்ப கலகம்; மானநஷ்டம்; பெரும் வியாதி பயம்; மனச்

சோர்வு; தொழில் நஷ்டம்; அடிக்கடி இடம் மாறல்; சஞ்சாரபலன் இவை களைத்தந்து: சிரமம் உண்டுபண்ணும். ஆயில்யம் 4 பாதங்களும் மனதில் பீதியைமாத்திரம் கொடுத்துக்கொண்டிருக்கும். ஆனால் தெய்வ பலம் தோன்றி எல்லாம் வெற்றிகரமாகவே நடக்கும். சனி, செவ்வாய் சுபவாரமாகும்.

5. சிம்மம் மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் மிசிரபலனைத் தரும். சுகதுக்கம்; லாப நஷ்டம் சமமாகும். தொழில் ஓங்கும்; உத்தியோக லாபம் கிட்டும்; அடிக்கடி சஞ்சார பலனும், கீர்த்திபத்திரம் கிடைத்தலும்; ஆரோக்கியமும்; தேவதாகுருபக்தியும்; நல்லோர் பெரியோர் நேசமும் கிட்டும். செவ்வாய் புதன் நலன்தரும்.

6. கன்னி உத்திரம் ¾ ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் விசேஷமான நன்மைகளைத்தந்து உலகில் பிரசித்தியைத்தரும். வாகன லாபம் ஏற்படும்; இல்லற சுகம் ஓங்கும்; ரத்னாபரணச்சேர்க்கை ஏற்படும்; பிரபுக்களின் சன்மானம் கிட்டும்; காரியசித்தியாகும். ஹஸ்தம் 1, 4 பாதங்கள் யதேச்சாதிகார கௌரவத்தையும்; எங்கும் நிறைந்த கீர்த்தியையும்; விசேஷமான தான தர்ம பிரதிஷ்டாபலன்களையும்; அடிக்கடி சஞ்சார சுகத்தையும்; இல்லற மேன்மையையும் தரும். ஹஸ்தம் 2, 3 பாதங்களும் சித்திரை 1, 2 பாதங்களும் அதிக உழைப்பையும்; மனக் கவலையையும்; குடும்பத் தொல்லைகளையும்; வீண் செலவுகளையும்; மனஸ்தாபங்களையும் உண்டுபண்ணும். சனி, புதன் சுபவாரமாகும்.

7. துலாம் சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾

சித்திரை 3, 4 பாதங்களும் சுவாதி 4 பாதங்களும் அசாத்திய சாதனங்களையும், நஷ்டமானசொத்து கிடைத்து மிகுந்த சந்தோஷத்தையும் தரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் அசுபத்தையும், கஷ்டத்தையும், கீர்த்தி பங்கத்தையும் தந்து இல்லற சுகத்தையும் தடுக்கும். புதன், சனி சுப வாரமாகும்.

8. விருச்சிகம் விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் 4 பாதமும் அனுஷம் 4 பாதங்களும் மிசிரமாய் நடக்கும். மாதம் முற்பாதியில் அதிக செலவினங்களையும், வியாதியால்

ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்கள்

கலைமகள் விழா

தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 17—10—55 முதல் 24—10—55 வரை எட்டுநாட்கள் 'கலைமகள்விழா' நடைபெற்றது. ஒன்பது சுவைகளைப்பற்றி ஒவ்வோரறிஞர் ஆராய்ந்துரைத்தல் இவ் ஆண்டுக்க லைமகள் விழாவின் சிறப்பாகும். உள்ளத்தெழும் சுவைகளை,

"நகையே, அழுகை இளிவரல் மருட்கை
அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று
அப்பா லெட்டே மெய்ப்பாடென்ப"

என்பர் தொல்காப்பியர். செஞ்சாந்தெறியினும், செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்தோடாச் சமனிலை அல்லது சாந்தச் சுவையை அதனோடு கூட்டி ஒன்பான் சுவை என உரைப்பர் உரையாசிரியர். சுவையாய்வுச் சொற்பொழிவாற்றிய பிறகு அவ்வச் சுவைகளை விளக்கும் ஒரு திரைக் காட்சிகள் அரங்கில் காட்டப்பெற்றன.

17—10—55 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு விழா தொடங்கியது. மாயூரம் தேசிய உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. எம். கே. நடராஜ அய்யர் அவர்கள் எம். ஏ., எல். டி., தலைமை ஏற்றார்கள். திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் முத்துக்குமார சாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைவரையும் தமிழ்ப் பேரன்பர் களையும் வரவேற்றார்கள். தருமையாதீனக் கீழைக்கலைக்கல்லூரி வட மொழிப்பேராசிரியர் சிரோன்மணி திரு. இராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள் 'நகைச்சுவை' யாய்வுரையை நன்கு நிகழ்த்தினர். கல்லூரி நான்காம்யாண்டு மாணவர் திரு. ஆ. இராசதுரை 'கலைமகளும்கம்பரும்' பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

ஆதீனக் கல்லூரி மாணவர் கலித்தொகையில் நகைச்சுவைக்காட்சி ஒன்றை 'ஒரு கூத்து' என்ற பெயரில் நாடகமாக நன்கு நிகழ்த்தினர்.

தொடக்கப்பள்ளி மாணவ் மாணவியர் ஆடலும் பாடலும் "கூடைக்காரி" என்ற ஒரு சுவைக்காட்சி ஒன்றும் சிறக்க நிகழ்ந்தன.

. . .

விழா விருந்தினர் திரு. இராமசாமிராஜா அவர்கள் மாணவர்களின் திறமையையும் அவர்களுக்கு உண்டியும்உறையுளும் உதவிப்பாதுகாத்து அறிவுச் செல்வத்தை அளித்துக் கல்வி நிலையங்களைக் கண்களெனக் காத்துவரும் மகாசந்நிதானம் அவர்களையும் பாராட்டிப் பேசி மாணவர்க்கு நல்லாசி வழங்கினார்கள்.

மாயூரம் திருமதி ஏ. பட்டம்மாள் குழுவினர் இன்னிசை நிகழ்ச்சியோடு நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

18—10—55 செவ்வாய்க்கிழமை மாயூரம் நகர் மன்ற உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. எஸ். சேஷகிரி ஐயர் பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது. ஒன்பது சுவைகளில் உள்ளத்தைத் தொடும் சுவை அழுகைச்சுவை. ஆதீனக் கீழைக்கலை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. ம. சிவசம்பு அவர்கள் 'அழுகைச்சுவை' யின் உருக்கத்தினை அழகுறப் பேசினார்.

கல்லூரி முதல் யாண்டு மாணவர் திரு. குப்புசாமி அவர்கள் 'கலைமகளும் குமரகுருபரரும்' பற்றிப்பேசினர்.

அழுகைச்சுவையை ஒருதிரைக்காட்சியில் மாணவர் திலகவதியாரின் வரலாற்றில் ஒரு பகுதியிலிருந்து நடித்துக்காட்டினர். ஆதீனத் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியர் சிறு சிறு நிகழ்ச்சிகள் நாடகமாகவும் நாட்டிய மாகவும் நிகழ்த்தினர். நிகழ்ச்சி நிறைவுற்றது.

19—10—55 புதன்கிழமை மாயூரம் டிப்டி கலெக்டர் திரு. அம்பலவாணப் பிள்ளை அவர்கள் தலைமையேற்றார்கள். ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் 'இளிவரற்சுவை'யை இலக்கியங்களின் மூலம் எடுத்துக்காட்டி இன்புறப் பேசினர். ஆதீனக்கல்லூரி நான்காம்யாண்டு மாணவர் திரு. இராம கிருஷ்ணன் அவர்கள் 'மலர் மகள்' என்ற தலைப்பில் செல்வச் சிறப்பைச் சிறக்கக் கூறினர்.

கும்பகோணம் திருமதி. குமாரி வத்சலா அவர்கள் 'ருக்மிணி கல்யாணம்' பற்றி இன்னிசைக் கதை நிகழ்ச்சியோடு நிகழ்ச்சி நிறை வுற்றது.

20—10—55 வியாழக்கிழமை மாயூரம் அன்பநாதபுரம் வகையார் அறக்கட்டளைகளின் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் ஸ்ரீ ஆரா அமுதாசாரியார் அவர்கள் எம். ஏ. தலைமையேற்றார்கள். ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 'அபிராமி அன்னையின் அருள் விளக்கம்' பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். ஆதீனக் கல்லூரி நான்காம் யாண்டு மாணவர் திரு. வை. கல்யாணம் மருட்கைச்சுவை பற்றிப் பேசினார். 'வழிப்பறி' என்ற பெயரில் பாரி ஔவையை அரண்மனைக்கழைக்க மாறுவேடம் கொண்டு சென்ற காட்சியை மருட்கைக்கிலக்கியமாக மாணவர் நடித்துக்காட்டினர்.

21—10—55 வெள்ளிக்கிழமை மகளிர் திருநாள். மாயூரம் அன்பநாதபுரம் வகையார் கல்லூரிக் கணிதப் பேராசிரியை திருமதி. அ. சரஸ்வதியம்மாள் அவர்கள் தலைமைவகித்தார்கள். திருமதி. முத்து லக்ஷ்மியம்மாள் 'வீரச்சுவை' பற்றி விளங்கக் கூறி வியக்கப் பேசினர். ஆதீனக்கல்லூரி முதல்வகுப்பு மாணவி திருமதி இராதாபாய் பெண்ணின் பெருமைபற்றியும் உயர்பள்ளிமாணவியர் திருமதி திலகவதி மங்கையர்க்கரசியாரைப்பற்றியும் திருமதி விமலா திலகவதியாரைப்பற்றியும் பேசினர்.

இரவு 8-மணிக்குமேல் கீழைக்கலை உயர்நிலைப்பள்ளி மாணவர் தமிழக உரிமைக்குப் போரிட்டு உயிர்நீத்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் வரலாற்றை நன்கு நடித்துக்காட்டினர்.

22—10—55 சனிக்கிழமை மாயூரம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. ச. ஸ்ரீநிவாசன் அவர்கள் அவைத்தலைவராயமர்ந்தார்கள். ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. வி. சா. குருசாமிஅவர்கள் 'பெருமிதம்' என்ற வீரச்சுவையைப்பற்றி அழகுறப் பேசினார். ஆதீனக் கல்லூரி மூன்றாம் யாண்டு மாணவர் திரு. வேலாயுதம் 'கொற்றவை' யைப்பற்றிப் பேசினார். கண்ணகியின் வழக்குரை கதையை வீரச் சுவைக்கு இலக்கியமாகத் தொடக்கப்பள்ளி மாணவியர் ஒரு திரைக் காட்சியினால் நடித்தனர்.

இரவு 8-மணிக்கு 'விசயன்' என்ற சமூக நாடகம் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியரால் நல்லவண்ணம் நடிக்கப்பெற்றது.

23—10—55 ஞாயிற்றுக்கிழமை மாயூரம் திரு. எம். எஸ். பொன்னுசாமி அய்யர் அவர்கள் பி. எஸ். சி. தலைமையமர்ந்தார்கள். ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் சாந்தச் சுவைபற்றி சபையோர் வியக்க விரித்துரைத்தார்கள். ஆதீனக் கல்லூரி இரண்டாம்யாண்டு மாணவர் திரு. தண்டபாணி 'மீனாட்சி திருமணம்' பற்றிப் பேசினார்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

இரவு 8-மணிக்கு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றை மெய்ப்பாடுகளுடன் நடித்தனர்.

24—10—55 திங்கட்கிழமை மாயூரம் டிஸ்டிக்ட் முன்சீப் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையேற்றார்கள். ஆதீன வேத சிவாகமப் பாடசாலை ஆசிரியர். திரு. சுப்பிரமணிய சர்மா அவர்கள் வெகுளிச்சுவை உவகைச்சுவைகளைப் பற்றிப் பேசி மகிழ்வித்தார்கள். கல்லூரி மாணவர் திரு ஞானப்பிரகாசம் 'அன்னை அருள்' பற்றிப் பேசினார். கல்லூரி மாணவர்கள் இன்றைய சுவைகளை 'தாகம்' 'கிள்ளிவளவன்' என்ற ஒரு திரைக்காட்சிகள் மூலம் நிகழ்த்தினர். தொடக்கப்பள்ளி மாணவியரின் 'வள்ளித்திருமணம்' இசைநாடகம் நிகழ்வுற்றது.

இரவு 8-மணிக்கு ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் 'கிழக்கும் மேற்கும்' என்ற புதுமை நாடகம் ஒன்றினை மெய்ப்பாடு களுடனும், கண்டோர்களிச்கும் வண்ணமும் நிகழ்த்தினர்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை கோயிலில்

17—10—55 திங்கட்கிழமை முதல் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனையும் ஸ்ரீ மேரு அம்பாளுக்கு சகஸ்ரநாமார்ச்சனைகளும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும் கொலு அலங்காரமும் சதசண்டீ யக்ஞமும் நடைபெற்றன.

ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இளவரசு வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் 22—10—55 அன்று எழுந்தருளி வழிபாடு செய்தருளினார்கள். மாயூரம் மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ளோர் ஒவ்வொரு நாளும் வந்து அம்பிகையை வழிபட்டு அருள் பெற்றனர்.

நவராத்திரிவிழாச் சொற்பொழிவுகள்

தருமையாதீனத்திற்குரிய திருக்கோயில்களெங்கும் மிக்க சிறப்பாக நவராத்திரிவிழா கொண்டாடப்பெற்றது. ஒன்பது நாட்களிலும் ஒன்பது வகையான ஒப்பனைகள் செய்துகொண்டு அம்மை கொலுவீற்றிருந்து அருட்காட்சி வழங்கினாள். அம்மை கொற்றவை - துர்க்கை, திருமகள்- லக்ஷ்மி, கலைமகள் - சரஸ்வதி என்ற திருக்கோலங்களில் முறையே மும்மூன்று நாட்கள் அருள் வழங்கும் இத்திருவிழா மக்களுக்கு, வீரம் செல்வம் கல்வி, இவைகளைத் தருவனவாக இருக்கும் இந்த விழாவைப் பற்றிய பல்வேறு விளக்கங்களையும் பாங்குற எடுத்துக்கூறி சமயச் சொற்பொழிவாற்றினர் புலவர்பெருமக்கள். சிறப்பாக வேலூர், சீகாழி,

திருக்கடவூர், திருவையாறு, திருபுவனம், திருப்பனந்தாள் முதலிய பேரூர்களில் உள்ள திருக்கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. ஆங்காங்கும், ஆதீனக்கல்வி நிலையங்களிலுள்ள புலவர் பெருமக்களும், பிற அறிஞர்களும் சென்று அம்மையின் அருள் விளையாடல்களையும், அம்மையைப் பற்றிய பல்வேறு வரலாறுகளையும் மாலை 6-மணி முதல் சொற்பொழிவாற்றினர். அவ்வத் திருக்கோயில்களிலும் திருவிழா நாட்களில் அம்மைக்கு நவசக்தி அர்ச்சனைகள், லக்ஷார்ச்சனைகள், முதலிய அர்ச்சனைகளுக்கும் அலங்காரங்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஏற்பாடுசெய்தருளியிருந்தார்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டுத் திருவருள் பெற்றனர்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில்

17-10-55 திங்கட்கிழமை திருமுறை ஆராய்ச்சியாளர், சென்னை திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் 'மீனாட்சி திருமணம்' 18-10-55 செவ்வாய்க்கிழமை தமிழாசிரியர் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். வித்துவான், திரு. திருஞானசம்பந்தமுதலியார் அவர்கள் 'குமரகுருபரரும் அம்மை வழிபாடும்' தருமபுரம் ஆதீனக்கீழைக்கலைக் கல்லூரி முதல்வர் திரு. கி. ராமலிங்கமுதலியார் எம். ஏ. அவர்கள் 'ஆனந்தலகரி' 19-10-55 புதன்கிழமை தருமபுர ஆதீனப்புலவர், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் 'அவளால் வந்த ஆக்கம்' 20-10-55 வியாழக்கிழமை தருமபுரஆதீன கீழைக்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'சைவம் வளர்த்த தெய்வப் பெண்மணிகள்' 21-10-55 வெள்ளிக்கிழமை தருமபுரஆதீன கீழைக்கலைக் கல்லூரி, தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியபிள்ளை அவர்கள் 'அம்மையின் அருள்' தமிழாசிரியர், குடந்தை வித்துவான், திரு. சொ. கணபதி தேசிகர் அவர்கள் 'அம்பிகையின் அருள் வெள்ளம்' 22-10-55 சனிக்கிழமை தலைமைத் தமிழாசிரியர், தேசிய உயர்நிலைப்பள்ளி, நாகை. வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் 'நல்லன எல்லாம் தரும்' 23-10-55 ஞாயிற்றுகிழமை ஆதீன சமயத்தொண்டர், திருக்கருகாவூர். திரு. கோ. சிவஞானம் அவர்கள் 'அன்பு' 24-10-55 திங்கட்கிழமை தருமபுர ஆதீனப்பல்கலைக் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர், புலவர், சித்தாந்தரத்நாகரம், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'உளக்கோயில்' என்பவைகளைப்பற்றி சொற்பொழிவாற்றினுர்கள்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயிலில்

18-10-55 செவ்வாய்க்கிழமை திரு. க. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் 'காமாட்சி திருமணம்' 19-10-55 புதன்கிழமை வித்துவான்,

திரு. திருஞானசம்பந்த் முதலியார் அவர்கள் 'அம்மையருள்' 20-10-55 வியாழக்கிழமை திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் 'ஆனந்தலகரி' 21-10-55 வெள்ளிக்கிழமை தில்லை, சமஸ்கிருத விசாரத் சச்சிதானந்த தீட்சிதர் அவ்ர்கள் 'ஞானசம்பந்தம்' 22-10-55 சனிக்கிழமை வித்துவான் திருச்சி, அர்ச். சூசையப்பர் கல்லூரி, தமிழ்ப்பேராசிரியர், திரு. ஐயன் பெருமாள் கோனுர் அவர்கள் 'சம்பந்தர் தேவாரத்தில் இலக்கிய நலம்' தருமபுரஆதீனக்கீழைக்கலைக் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள், 'சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை நலம்'. 23-10-55 ஞாயிற்றுக்கிழமை வித்துவான்: திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் 'ஞானத்தமிழ்'. 24-10-55 திங்கட்கிழமை வித்துவான். திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'உள்ளம்கவர்கள்வன்' என்பவைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேசுவர சுவாமி திருக்கோயிலில்

17—10—55 திங்கட்கிழமை திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளி, தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் 'அங்கயற்கண்ணி'. 18-10-55 செவ்வாய்க்கிழமை திரு கோ. சிவ ஞானம் அவர்கள் 'தொண்டர்துணை'. புலவர், திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் 'அழியா அரசு'. 19-10-55 புதன்கிழமை தருமபுரஆதீனக்கீழைக்கலைக்கல்லூரி வடமொழிப்பேராசிரியர், சிரோமணி திரு. இராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள் 'தேவிமான்மியம்' வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'சக்தியின் பெருமை'. திரு; கி. இராமலிங்க முதலியார் அவர்கள் எம். ஏ. 'சக்தியும் சிவமும்' 21-10-55 வெள்ளிக்கிழமை வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் 'உலகம் பூத்தவள்' 22—10—55 சனிக்கிழமை அண்ணு மலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி விரிவுரையாளர் வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் 'குலதெய்வம்' 23—10—55 ஞாயிற்றுக்கிழமை வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'நற்றுய்' 24—10—55 திங்கட்கிழமை தரங்கை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி தமிழாசிரியர் வித்துவான் திரு சொ. முத்தையா தேசிகர் அவர்கள் 'அருளமுது' என்பவைகள்பற்றி சொற்பொழிவாற்றினுர்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயிலில்

18—10—55 செவ்வாய்க்கிழமை வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் 'செஞ்சடையான் சேவடி' 19—10—55 புதன் கிழமை தில்லை சம்ஸ்கிருத விசாரத் திரு. சச்சிதானந்த தீக்ஷிதர் அவர்கள் 'மணிவாசகம்' 20—10—55 வியாழக்கிழமை வித்துவான், திரு. சொ. கணபதி தேசிகர் அவர்கள் 'திருக்குறிப்புத் திருத்தொண்டர்'

21—10—55 வெள்ளிக்கிழமை திரு. முத்து சு. மாணிக்வாசக முதலியார் அவர்கள் ‘செய்யாச் செயல்’ 23—10—55 ஞாயிற்றுக்கிழமை தருமபுரம் ஆதீன கீழைக்கலை உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. கை. முருகையாப்பிள்ளை அவர்கள் பி.ஏ., எல்.டி., ‘மனமே உனக்கென்ன வாய்’ 24—10—55 திருப்பனந்தாள், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான் திரு. மு. சுந்தரேசம் பிள்ளை அவர்கள், ‘அகப்பொருளும் திருமுறையும்’ என்பவைபற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் சுவாமி திருக்கோயிலில்

18—10—55 செவ்வாய்க்கிழமை தரங்கை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி தமிழாசிரியர் வித்துவான் சொ. முத்தையா தேசிகர் அவர்கள் ‘பழம் பாடல்’ 19—10—55 புதன்கிழமை வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் ‘சொல்லும் பொருளும்’ 21—10—55 வெள்ளிக்கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி பிரின்சிபால், திரு. வேங்கடராமையா அவர்கள் எம்.ஏ., பி.ஓ.எல்., ‘தேவி மாண்பு’ 22-10-55 வித்துவான் திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள் ‘அறம் வளர்த்த அன்னை’ 23—10—55 ஞாயிற்றுக்கிழமை வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் ‘அம்மையப்பர்’ 24—10—55 திங்கட்கிழமை திரு. கோ. சிவ ஞானம் அவர்கள் ‘விழிக்கே அருள் உண்டு’ என்பவைபற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி திருக்கோயிலில்

18—10—55 செவ்வாய்க்கிழமை தருமபுரம் ஆதீனக் கீழைக்கலை உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர் வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் ‘அருளார் அமுதம்’ 19—10—55 புதன்கிழமை திரு. கீ இராமலிங்கம் அவர்கள் எம். ஏ. ‘மூல பண்டாரம்’ 20—10—55 வியாழக்கிழமை திரு, கோ. சிவஞானம் அவர்கள் ‘அப்பரும் பிள்ளையாரும்’ வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் ‘ஞான உழவன்’ 21—10—55 வெள்ளிக்கிழமை திருவிடைமருதூர் துறைசையாதீன உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள் ‘குமரகுருபரர்கண்ட கோயில்’ 22—10—55 சனிக்கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் வித்துவான் திரு. வேங்கடராமையா அவர்கள் எம். ஏ. பி. ஓ. எல். கம்பகரேசன் கருணை’ 23—10—55 ஞாயிற்றுக் கிழமை வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர் அவர்கள் ‘சுந்தரர் செந்தமிழ்’ 24—10—55 திங்கட்கிழமை வித்துவான் திரு. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் ‘சரபமூர்த்தித் திருவருட்கொடை’ என்பவைகள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்

நவராத்திரி விழா.

சென்னையில் நமது தருமையாதீனத்தின் சமயப் பிரசார நிலையத்தில் இவ்வாண்டு நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. விழா 17—10—55 முதல் 25—10—55 வரை நாடோறும் மாலை 6 மணிக்குத் தொடங்கப்பெற்று நிகழ்ந்து நிறைவுற்றது.

சென்னை மாகாண மாஜிஸ்டிரேட் திரு. அய்யாசாமிச் செட்டியார் **M. A, B. L.,** அவர்கள் முதல்நாள் தலைமையேற்று விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

சென்னை சமயப் பிரசார நிலையத்தலைவர் வித்துவான் ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விழா விருந்தினரை வரவேற்றும் வாழ்த்தியும், நன்றி கூறியும் நன்கு கண்காணித்தார்கள்.

சென்னையில் உள்ள சிறந்த நல்லறிஞர்களும், தமிழன்பர்களும் அரசியலறிஞர்களும் விழாவில் தலைமைதாங்கியும் சொற்பொழிவாற்றியும் சிறப்பித்தனர்.

நிலைய தேவார இசைவகுப்பு மாணவ மாணவிகளும், மகாத்மாஜி சேவா சங்கப் பெண்மணிகளும் இசையரங்கு நடனம், நாடகம், உரையாடல் முதலியன நிகழ்த்திக் காண்போரைக் களிக்கச் செய்தனர்.

நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் சங்கீத பூஷணம், திரு. பி. சுவாமிநாதன் அவர்களும் திருமுறை வகுப்பு மாணவிகளும் திருமுறை இன்னிசை நிகழ்த்தினர்.

திருமுறை வகுப்பு இரண்டாவது ஆண்டு விழா.

சமயப் பிரசார நிலையத் திருமுறை வகுப்பு இரண்டாவதாண்டு நிறைவு விழா 26—5—55 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினார். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ அடிகளார் அவர்கள் தலைமைப் பேருரையாற்றி யருளினார்கள். சென்னை, கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள் 'ஒன்றே ஒன்று' என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றினார்.

நிலைய மாணவ மாணவிகளால் 'திருமுறை கண்ட சோழன்' நாடகம் நிகழ்த்தப்பெற்றது. மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

மதிப்புரை

சிவஞானபோதம் பாண்டிப்பெருமாள் விருத்தி

சித்தாந்த சைவ (நான்காவது) மாநாட்டு மலர். திருவெண்ணெய் நல்லூர். மன்மத. ஐப்பசி. ௯.

இது திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்தொன்றாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சி ஏற்றது முதல் நிகழும் மேற்படி மாநாட்டின் வெளியீடு.

அப்பெருமானாரருளால், சைவ நூல்களும் மற்றைத் தெய்வ நூல்களும் சைவவுலகிற்குக் கிடைத்துவருதல் வெள்ளிடைமலை.

இந்நூல் நெடுங்காலமாகக் கிடைக்காதிருந்தது. கிடைப்பதென்றோ என்று அவாவி நோக்கிய சைவராகிய பயிர்க்குத் தெய்வாதீனமாகப் பெய்த வானே இவ்வரும் பெருநூல். இவ்விருத்தியுரை மிகப் போற்றத் தக்கது. அதுபோன்றதே இப்பதிப்பும். தெளிபொருள் விளக்கம் என்ற புதுப்பெயருடையது பூவைமணவழகரால் எழுதப்பெற்றவுரை. அது "சைவம்" என்ற மாதப் பத்திரிகையில் வெளிவந்தது என்பதை முகவுரையிலும் காணலாம். துறைசை ஆதீன வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் நன்முயற்சி மிகப் பாராட்டத் தக்கது.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

திருக்கேதார யாத்திரை

[முன் தொடர்ச்சி]

ஓடும் இரயிலில்:

எங்கள் ஒவ்வொருவர் சிந்தனையும் கேதாரநாதர்மீதே இருந்தது, இருந்தாலும் நாங்கள் மூன்றும் வகுப்புப் பெட்டியில் இருந்தமையால், பலவகைப்பட்ட மக்களோடும், பலவகைப்பட்ட பண்பாடுடையவர் களோடும், பலவகைப்பட்ட நாகரிகம் படைத்தவர்களோடும் பழகச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்களோடு உள்ளம்விட்டு அளவளாவக் கூடிய ஒரு வாய்ப்புக் கிடைத்தது. குளத்துக்குக் கரைதான் இன்றியமை யாதது. கரையில்லாத குளத்தில் தண்ணீர் தங்காது. உள்ளம் விட்டுப் பழகும் தன்மை மனிதனுக்கு வேண்டும். "பழகாத மனிதனிடத்தில் பண்பாடு தங்காது" என்பார் திருவள்ளுவர். இந்த வள்ளுவர் வழியிலே எங்கள் சிந்தனை ஓடியது. ஆகவே தான் மக்களோடு பழகுவதில் பெரிய ஆர்வம் எங்களுக்கு இருந்தது. அப்பப்பா! ஹரித்துவாரம் செல்வதற்குள் நாங்கள்-சிறப்பாக நான் பெற்ற அநுபவங்கள் பலப்பல. பிரயாணி களுக்கு எங்களோடு பேசவும் பழகவும், எங்களுக்கு அவர்களோடு பேசவும் பழகவும் ஆர்வம் நிரம்ப இருந்தது. ஆனல் முட்டுக்கட்டை மொழி வேறுபாடுதான்; அவர்களுக்குத் தமிழே தெரியாது. ஆனல் எங்களுக்கோ, இரண்டொரு வடநாட்டு யாத்திரையிலிருந்தும், இந்த யாத்திரையில் காசியில் சில நாட்கள் தங்கியிருந்த அநுபவத்திலிருந்தும் இலேசாக இந்தியறிவு இருந்தது. நாங்கள் அவர்கள் பேசும் பேச்சை எங்களுக்குத் தெரிந்த இந்தியறிவாலும், அவர்களுடைய முகபாவம் சைகைகளாலும் புரிந்துகொண்டோம். இதே நிலையில்தான் அவர்களும். ஆனல் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பறிமாறிக் கொள்வதிலே தடையில்லை.

கட்டுச்சோறு:

உச்சிவேளை வந்தது. வயிற்றைப் பசி கிள்ள ஆரம்பித்தது. நாங்கள் தயார்செய்து கொண்டுபோன சித்திரான்னங்களை எடுத்துப் பிரித்து வைத்துக்கொண்டோம். புளியஞ்சாதமும், தயிர்ச்சாதமும் எங்கள் மூட்டைக்குள்ளிருந்து எட்டிப்பார்த்தன. நாங்கள் மூட்டையைக் காலி செய்வதில் முனைந்தோம். பெட்டியில் இருந்தவர்களுக்கு எங்கள்

செய்கை பெரிய வியப்பாக இருந்ததுபோலும்; பல வண்ணத்தில் இருந்த சோற்று மூட்டை அவர்களுக்குப் பெரிதும் வியப்பை விளைத்தது, ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். தம்முட் பேசிக்கொண்டனர். ஒருவர் தயிர்ச்சோற்றைக் கண்டு மற்றொருவரிடம் இது பால்சோறென்றார். பிறிதொருவர் வேறென்றார். புளிச்சோற்றைக் கண்டு புதுநிறமாயிருக்கிறதே என்று இன்னொருவரிடம் பூரித்துப்போனார் மற்றொருவர். இப்படி எங்கள் கட்டுச் சோறு எத்தனையோபேர் சுட்டு விரலை மூக்கின்மேல் ஏற்றியது. கட்டுச் சோறும் காலியாகிக் கொண்டிருக்கிறது.

எனக்குத் தெரிந்த இந்தியில், 'இது பால்சோறல்ல; தயிர்ச்சோறு' என்று சொன்னேன். அது வரைக்கும் இந்தியிலேயே பேசிக்கொண்டிருந்த ஒருவர் ஆங்கிலத்தில், 'தயிர்க்குச் சர்க்கரை போட்டுத்தான் பிரை குத்துவீர்களா?' என்று கேட்டார். 'வெறும் மோர்தான், பிரை குத்துவது அதில் கொஞ்சம் புளிப்பு இருக்கும்' என்று பதில் சொன்னேன் நான். ''இந்தச் சோற்றை நீங்கள் எப்படித் தயாரிப்பீர்கள்'' இது மீண்டும் அவர் வினா. அதனை விளக்கினேன். உடனே அவர் இந்தியிலேயே மற்ற பிரயாணிகளுக்கு விளக்கினார். 'வர்ணத்தோடு கலந்திருக்கிறதே அது?' என்று மீண்டும் கேட்டார். 'அது புளியஞ்சோறு. அது தயாரிக்கும் விதம் இப்படி' என்று நானும் சலிக்காது பதில் சொன்னேன். அவரும் தன் மொழி பெயர்ப்புப் பிரசங்கத்தை மீண்டும் தொடங்கிவிட்டார். எல்லோர்க்கும் நாக்கில் நீர் சொட்டியிருக்கவேண்டும். இந்தப் பக்குவம் அவர்களுக்குத் தெரியாததுபோலும். இப்படி எங்களுடைய கட்டுச்சோறு அவர்களுக்கு ஒரு விஷயதானமாக அமைந்தது; எங்களுக்கும் ஆங்கிலந் தெரிந்த ஒரு நண்பரைப் பேச்சுத்துணைவராக அளித்தது. விசாரித்ததில் அவர் ஒரு ஆயுர்வேத வைத்தியரென்றும், காசி சர்வகலாசாலைப் பட்டதாரி என்றும், சுல்தான்பூரில் தொழில் நடத்துபவரென்றும், சமஸ்கிருதம், இந்தி ஆங்கிலத்தில் கொஞ்சம் அவர்க்குத் தெரியுமென்றும் பேச்சுவாக்கிலே வெளிப்பட்டன.

இராமமந்திரம்:

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே நாங்கள் இருந்த பெட்டியிலேயே அந்தப்பக்கத்தில் ஒரு சிரிப்பொலி கேட்டது, நாங்கள் எங்கள் பேச்சைவிட்டு அதைக் கவனிக்கலானோம். அங்கே நெற்றியிலே திருமண் திருநாமந்தரித்த ஒரு சாது! பக்கத்திலிருந்த பிரயாணிகள் அவரை இடத்தில் நெருக்கினர்போலும். அவர் கூறினார் 'ஏனய்யா, எனக்குத் தொல்லை தருகிறீர்கள்? நான் ஒரு சாது' என்று. உடனே அந்த பிரயாணிகள் 'கொல்' லென்று சிரித்தனர், 'ஐயோ, பாவம் வேடிக்கையும் சிரிப்புமாய் இப் பொழுதை வீணுக்குகிறீர்களே! இந்த நேரத்தை, இராம

நாமத்தைப் பஜிப்பதில் ஈடுபடுத்தினல் எவ்வளவு இனிமையாக இருக்கும்?" என்று கூறினர் அந்தப் பெரியவர். அவர் பலமொழியும் தெரிந்த ஒரு ஆந்திரா தேசத்துத் துறவி. உடனே எல்லோரும் இராம சரித்திரத்தைக் கூறும்படி அவரைக் கேட்டுக் கொண்டனர். உடன் அவரும் அழகாக இராமநாம மகிமையைப்பற்றி விவரித்துச் சொல்ல லானுர். முடிந்தது.

சுவைகண்ட பூனே சும்மா இருக்குமா என்ன? கிருஷ்ணுவதார மகிமையைச் சொல்லவேண்டுமென்று வேண்டினர் பக்கத்துப் பிரயாணி கள். கோரிக்கையை மறுக்காமல், கொஞ்சமும் சலிக்காமல் கிருஷ்ணுவ தாரத்தை விரிவாகச் சொல்ல ஆரம்பித்தார் பெரியவர். சுவையாக-அதே நேரத்தில் பக்தி மயமாக இருந்தது அவர்பேச்சு. எங்கள் கவனம் முழு தும் அந்த இனிய பேச்சிலே - காட்சியிலேதான் இருந்தது. அவர் பின்பு எங்களே நோக்கித் தெலுங்கில் வினவினுர். நான் அவர் கேட்டதைப் புரிந்துகொண்டேன். எங்கள் யாத்திரா கோஷ்டியைப் பற்றியும், நாங்கள் திருக்கேதாரம் செல்வதைப் பற்றியும் விளக்கிக் கூறினேன். அவரும் என்னுடைய பேச்சை சரிவரப் புரிந்துகொண்டார். இப்படி இராம மந்திரத்தைப் பற்றியும் கிருஷ்ண மந்திரத்தைப்பற்றியும் பேசிக்கொண்டு வரும்போதே ஒரு ஸ்டேஷன் வந்தது; எட்டிப்பார்த்தேன். என்ன வியப்பு! இராமன் இருந்து இராமராஜ்யம் நடத்திய அயோத்தி ஸ்டேஷன் அது. எங்கள் எல்லோருக்கும் பெரிய வியப்பாகப் போய்விட்டது. இராம மந்திரத்தை ஜெபித்ததற்கும், இராம ராஜ்யம் அடைந்ததற்கும் எத்துணைத் திருவருட் பொருத்தம் இருக்கிறதென்று கூறியது எங்கள் மனம்.

அயோத்தி வந்தது:

அயோத்தி இப்போது சின்ன ஊராகத்தான் இருக்கிறது. சிறிய ஸ்டேஷன் இன்று. ஆனுல் தாசரதியாகிய இராமர் ஆண்ட காலத்திலே இராமராஜ்யத்தின் தலைநகரமாக இருந்த பெரும்பதி அது. அன்று ஓடிய சரயுநதி இன்றும் ஓடுகிறது; அயோத்தி என்ற திருப்பெயர் இன்றும் இருக்கிறது. ஆனுல் இராமராஜ்யத்தில் இருந்த மக்கள்......இன்று இருக்கிருர்களோ என்னவோ......? அயோத்தியைப் பார்க்கும்போது என் மனத்திலே தமிழ்நாட்டின் கீழைக் கடற்கரை ஓரத்திலே, இன்று சிற்றூராக இருக்கும் காவிரிப்பூம்பட்டினம் நினைப்புக்கு வந்தது. ஆகா! சோழன் கரிகாற் பெருவளத்தான் காலத்திலே, சோழப்பேரரசின் தலை நகராக-மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமுமாகப் பல காவததூரப் பரப்புடையதாக இருந்த அந்த சோழர் தலைநகரம், இன்று மணல்வெளி யாகச் சிற்றூராகக் காட்சியளிக்கிறது. அயோத்தியும் இதே நிலையில்தான் இருக்கிறது; இப்படி ஒப்பிட்டது என் உள்ளம்.

ஸ்டேஷனில்க ண்ணேட்டத்தை விட்டேன். குரங்குகள் ஸ்டேஷனில் காணுமிடமெல்லாம் காட்சி கொடுத்துக்கொண்டிருந்தன. இராமாடத்து அன்புகொண்டு ஏவல் செய்த வானரப்படையாவது, ஆம் - இன்றும் வாழையடி வாழையாக அங்கே வாழ்ந்து வருகிறது என்று நினைத்தால் தவறில்லை யல்லவா? அயோத்தியிலே கொள்பவரில்லை; எனவே கொடுப் பவர் இல்லை! ஏழைகள் இல்லை; எனவே பணக்காரர்கள் இல்லை! படிக்கா தவர்கள் இல்லை எனவே படித்தவர்கள் இல்லை! என்று நயம்படக் கூறித் தான் விரும்பும் சமுதாயத்தைக் காட்டினுனே கம்பன்' அந்தக் கருத்துக் களெல்லாம் ஒன்றன் பின் ஒன்ருக ஓடிவந்தன என் மனத்தில். பக்கத்தி லிருந்த சுல்தான்பூர் நண்பரைப் பார்த்துக் கேட்டேன்.

'இராமர் ஆண்ட இடமாயிற்றே! அரண்மனையும், மாடமாளிகை களும் ஏதேனும் இங்கு இன்றும் உண்டோ?' இது என் கேள்வி.

'அந்த அக்கிரமத்தை ஏன் கேட்கிறீர்கள்? முகம்மதியர்கள் தென் ஞட்டுச் சிற்பங்களைச் சிதைத்ததை விட வடநாட்டிலேதான் அதிக வெறி யாட்டமாடி யிருக்கிருர்கள். மகம்மதிய அரசர்கள் இங்கிருந்த இராமர் அரண்மனை மாடமாளிகைகளை இடித்துவிட்டு அதன்மேலே தங்கள் மசூதி களைக் கட்டிவைத்திருக்கிருர்கள்; நினைத்தாலும் இந்தியன் நெஞ்சு கொதிக்கும் செய்தி இது' என்ருர் நண்பர் உணர்ச்சிவேகத்தோடு.

'நெஞ்சு கொதிக்க வேண்டியதில்லை. நினைத்து நினைத்து மகிழ வேண்டிய - போற்றவேண்டிய நிலைஇது; இராமன் ஆண்ட - வாழ்ந்த புனிதமான இடமாயிற்றே என்று கருதி, அந்தப்புரமாக்கிக் கொள்ளாமல், பரத்தையர் விடுதிக்குக் கொடுத்துவிடாமல், ஒரு புனிதமான இடமாக - தொழுகைக்குரிய தூய இடமாக ஆக்கி வைத்திருக்கிருர்களே என்று அவர்களைப் போற்றவேண்டும் நாம். அந்த அளவுக்காவது அந்த இடத்தின் புனிதத் தன்மை போற்றப்பட்டிருக்கிறதே' என்று கூறினேன் நான். வண்டியும் ஸ்டேஷனை விட்டு நகர்ந்தது.

இலட்சுமணபுரி: (Lucknow)

லக்னே வந்தடையும்போது மாலை மணி 6-30. லக்னே பெரிய சந்திப்பு. அங்கிருந்து டெல்லி, பம்பாய் முதலிய ஊர்களுக்கு இருப்புப் பாதை செல்லுகிறது. இங்கே எல்லா வண்டிகளும் குறைந்தது அரைமணி நேரம் நின்று புறப்படும். ஸ்டேஷன் கட்டிடம் மிகப் பெரியதாகவும், அழகியதாகவும் அமைக்கப்பெற்றிருக்கிறது. இது உத்தரப் பிரதேச ராஜ்யத்தின் தலை நகர். எல்லா நிர்வாக ஸ்தலங்களும் இந்த நகரத்தில் தான். உயர்நீதிமன்றம் மட்டும் அலகாபாத்தில் இருக்கிறது. கோமதி ஆற்றங்கரை. சர்வகலாசாலை, வானெலி நிலையம் விமான நிலையம்

உள்ளன. சரித்திரப் பெருமை வாய்ந்த கட்டிடங்கள் பல இங்நகரில் இருக்கின்றன. யாத்திரிகர்களுக்கு வழிகாட்டிகளாக அரசாங்கத்திலே வெளியிட்டிருக்கும் கைப்புத்தகம் சொல்கிறது 'இது ஒரு பெரிய புளியஞ் சோலை' என்று. இங்கே புளியமரங்கள் ஏராளம். இது நமது சென்னை ராஜ்யத்திலுள்ள 'திந்திரிய வனத்தை' (திண்டிவனம் - புளியஞ்சோலை) நமக்கு நினைவூட்டுகிறது. நகரின் பெயர் இலட்சுமணபுரி; நகரை உண் டாக்கியவன் இலட்சுமணன் (இராமனுடைய சகோதரன்) என்று சொல்லு கிறார்கள் ஒருசாரார். மற்றொருசாரார் இலட்சுமணன் இங்நகரை நிருமாணஞ் செய்த சிற்பி என்கிறார்கள், எனக்கென்னவோ பழையகாலத்து இலட்சு மணன் பெயராலமைந்தது இங்நகரம் என்பதே பொருத்தமெனத் தோன்று கிறது.

அருளிப்பாடு:

வண்டி நின்றதும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்கள் வண்டியை விட்டிறங்கி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இருக்கும் பெட்டிக்கு வந்தார்கள். மாலைத் திருமஞ்சனமாடுவதற்கும், வழிபாட்டுக்கும் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறது என்பதையும் பார்த்தார்கள்; பால் கொண்டு வரச்சொன்னார்கள்; பழம் வாங்கிவரச்செய்தார்கள். இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் அவர்களே திட்டம் செய்தார்கள். இந்த நேரத்தில் வந்துசேர்ந்தார் கேதாரபண்டா கணேசசங்கர். அவர் கேதாரநாதர் திருக்கோயிலுக்கு வரும் யாத்திரிகர் களுக்கு வேண்டும் வசதிகளைச் செய்துகொடுத்து வழிபாடுகளும் செய்து வைப்பவர். பணக்காரரும் கூட. 1-5-55 ல் கேதாரம் கோவில் திறக்கப் படுவதால் அன்று அங்கே இருப்பதற்காகச் செல்ல நாங்கள் ஏறிய இரயி லுக்கே வந்து சேர்ந்தார். முன்னேயே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர் களுக்குத் தெரிந்தவர். ஆகவே சுவாமிகளைக் கண்டார்; பேசினார்; ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். 'இந்தப் பண்டா மிகவும் நல்லவன் வெளியிலே யாத்திரிகர்களைத் தேடி அழைத்துச் செல்லுவதில்லை. அங்கே கேதாரத்தை நாடிவருபவர்களுக்கு வசதிசெய்து கொடுத்து வழிபாடும் செய்து வைப்பவன்' என்று தெரிவித்துக் கொண்டார்கள். இது எங்கள் எல்லோருக்கும் ஒரு வியப்பாக இருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருவுளத்து சுந்தரர் கயிலைக்குச் சென்ற செய்தி உதித்தது. அங்கே அருளிப்பாடு என்று ஒரு வழக்கு உண்டு; அதுவே ஈண்டும் வந்தது போலும். 'கேதாரநாதர் அழைக்கின்றார். யாத்திரையின் வெற்றிக்கு இதுவும் ஒரு அறிகுறி' என்று திருவாய் மலர்ந்தார்கள். அப்போதுதான் எங்களுக்கும் புரிந்தது; பண்டாவும் ஏறிக்கொண்டான்.

நாங்களும் இரவு உண்டிகளை முடித்துக்கொண்டோம். இரயிலும் புறப்பட்டது. மறுநாள் காலை 6-10 க்கு ஹரத்துவாரம் வந்துசேர்ந்தோம்.

ரிஷிகேசம்:

மதராசி தர்மசாலையில் சென்று தங்கினோம். கங்கையில் நீராட்டு. நடுப்பகல் உணவை முடித்துக் கொண்டோம். பழைய கிருஷ்ணய்யர் அங்கிருந்தார். எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுத்தார். உத்தரகண்ட யாத்திரைக்குத் தலைவாயில் ஹரத்துவாரம். மாலையில் வழிக்குவேண்டிய உபகரணங்களான காலுறை, மேற்சோடு, தடித்தகம்பு தட்பவெப்பக் குப்பி, ரப்பர்துணி முதலியவற்றை சேகரித்துக் கொண்டோம். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களே எல்லாவற்றையும் முன்னின்று வாங்கி வழங்கினார்கள்.

இன்னும் சிலர் ஹார்லிக்ஸ், டார்ச்லைட், டார்ச்சுலைட்டுக்கு வேண்டிய பாட்டரிகள் முதலியன வாங்கிக்கொண்டார்கள் ,மாலை 3 மணிக்கு உந்தூர்தி மூலம் ரிஷிகேசத்திலுள்ள ஆந்திர ஆசிரமம் என்னும் நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். ஹரத்துவாரமும் ரிஷிகேசமும் சாதுக்கள் நிறைந்த ஊர்கள். பல பெரிய மகான்களும் அங்கு இருக்கிறார்கள். பெரிய ஆசிரமங்களும், அன்னசத்திரங்களும், தருமசாலைகளும் நிரம்ப இருக்கின்றன. ரிஷிகேசத்திலும் பெரிய கடைத்தெரு இருக்கிறது.

ஆந்திரா ஆசிரமம்:

ஆந்திராவைச் சேர்ந்த குண்டூர் மாவட்டத்திலிருந்து வந்த ஒரு சாது ஸ்ரீ சுவாமி சத்தியானந்த சரஸ்வதி மஹராஜ் என்னும்பெரியார் முயற்சியில் இது கட்டப்பட்டு வருகிறது. இதுவரை நாலரை இலட்சரூபாய் செலவாகியிருக்கும். இன்னும் கட்டிடப் பகுதியிலே இரண்டு மூன்று இலட்சமும், சிவ விஷ்ணு இரண்டு கோவில்கள் கட்ட ஒரு இலட்சமும் திட்டம். இரண்டு ஆலயங்களிலும் அமைப்பதற்காக நல்ல அழகிய திருவுருவங்கள் தென்னாட்டிலிருந்து கல்லிலும் செம்பிலும் செய்து வைக்கப்பெற்றிருக்கின்றன. வசதியான எழுபத்திரண்டு அறைகள். பெரிய முற்றம். மின்னொளி பொருத்திய மாடிக்கட்டிடம். இரண்டு தளங்களுக்கும் தண்ணீர்வசதி செய்யக்கூடியதான நீருறிஞ்சி. பின் பக்கத்திலே இரண்டு பர்லாங் தொலைவிலே கங்கையாறு. ஒரு மலைத்தொடர். சுற்றிலும் நல்ல பசுமையான ஒரு காட்சி. ஆசிரமங்கள்; பர்னசாலைகள். அந்தக் கட்டிடத்தின் பிற்பகுதியில் கௌரி குண்டம் என்னும் நீரூற்று. பொங்கிவழிந்து ஓடிக்கொண்டேயிருக்கும் தண்ணீர். ஒரு பகுதிக் கட்டிடம் தரைமட்டம்வரை கட்டிவிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த ஆசிரமத்தை நிறுவிய பெரியார் வசூலுக்குத்

தென்னாட்டுக்குப் போயிருக்கிறார். இரண்டு சாதுக்கள் பிர்மானந்தா, சித்தானந்தா அங்கிருந்து ஆசிரம காரியங்களைக் கவனித்து வருகிறார்கள். ஒருவர் தெலுங்கர். ஒருவர் தமிழர். நல்ல பண்பாடுடையவர்கள். ஆசிரமம் நிறுவிய பெரியார் இமயச்சாரலில் நீண்டகாலம் தவமிருந்து அருள்பெற்றவர். 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்' உத்தரகண்ட யாத்திரைக்கு வரும் தமிழர் தெலுங்கர் இருவர்க்கும் 'இந்த ஆசிரமம் ஒரு தாயகம். அந்தப் பெரியார் ஆறுமாதம் வசூல் செய்வதும், ஆறுமாதம் தன்னுடைய நேர் பார்வையிலே கட்டிடவேலையைத் தொடர்ந்து செய்வதும் இப்படியாகக் கடும் உழைப்பை மேற்கொண்டிருக்கிறார். திருவாளர்கள் எஸ். வி. இராமமூர்த்தி, எம். அனந்தசயனம், கொண்டப்ப காரு, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், சத்தியநாராயணா போன்ற பெரும் பெயர் பெற்ற அறிஞர்களும், பணம் படைத்த சிற்றரசர் களும், வணிகர்களும் அவரவர் பேராலும் பலப்பல அறைகள் கட்டிவைத்திருக்கிறார்கள். இதற்கென நிர்வாகக் குழு ஒன்று ஸ்ரீ சத்தியானந்த சரஸ்வதி, ஸர் எஸ். வி. இராமமூர்த்தி ஐ சி. எஸ்., எம். அனந்தசயனம் ஐயங்கார் (மக்கள் சபை உபதலைவர்) முதலிய பலரும் அடங்கியதாக நிறுவப் பெற்றிருக்கிறது. ஒரு சிறு பிணக்கு; நிருவாகக் குழுவினர் சொல்லுகிறார்கள். 'வசூலிலிருந்து கிடைக்கும் பணத்தை மக்கள் தங்குவதற்காக மேலும் அறைகளாகக் கட்டிவைத்துவிடுவோம். மக்கள் பணியே நம்பன்பணி. ஊரிலே பல கோயில்கள் உண்டு. வேண்டு மானால் அங்கே சென்று தரிசனம் செய்துகொள்ளட்டும்' என்று. நிருவாகக் குழுவின் தலைவரான சுவாமிஜி சொல்லுகிறார்கள்; 'எல்லாவற்றுக்கும் கடவுட் பணியே முன்னே செய்யவேண்டியது. மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தாயிற்று; செய்யவும் திட்டம் இருக்கிறது; இது ஒரு தெய்வபூமி; தவச்சாலை. இங்கு இருபுறத்திலும் சிவ விஷ்ணு ஆலயங்கள் கட்டிவைத்துவிட்டால், வருகிற தென்னாட்டார் அவரவர்கள் வழியில் இறைவழிபாடு செய்துகொண்டிருப்பார்கள்; இதற்கு முதலிடம் வேண்டும்' என்று தன்னுடைய கொள்கையை நிறை வேற்றிவிடத்தீர்மானித்துத் திருவுருவங்களையும் செய்துவந்து, கட்டிடத்தில் நடு இடத்தில் பார்வையாக இருக்கும்படி வைத்துவிட்டார். காலையி லும் மாலையிலும் அந்த இடத்தைக் கூட்டுப்பிரார்த்தனை மண்டபமாகவும் ஆக்கிவிட்டார். இனிக் கோயில்கள் கட்டாவிட்டால் ஆஸ்திகப் பெரு மக்கள் குறை கூறத் தொடங்கிவிடுவார்கள். நிருவாகக் குழுவினர் இணங்கிவந்துதான் ஆகவேண்டும். பெரியோர் நினைப்பும் செயலும் இப்படித்தானிருக்கும்.

இங்கே 26-ம் தேதி இரவும், 27-ம் தேதி முழுதும் தங்கினோம். ரிஷிகேசத்திலிருந்து மேலே பேருந்தூர்திமூலம்தான் செல்வதற்குமுடியும் இப்போது ஓடும் பஸ் தொகுதிக்கு ஜகத்பஸ் என்றுபெயர்.

ஆந்திரா ஆசிரமத்தில் பல தெலுங்கர்களும், தமிழர்களும் அவரவர் குடும்பத்தோடு வந்து தங்கியிருக்கிறார்கள். எங்கள் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிக ளவர்களுக்கும் மேல்மாடியிலே இரண்டு பெரிய வசதியான அறைகள் விடப்பட்டிருந்தன. ஆசிரமத்திலுள்ள சாதுக்கள் எங்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை அன்போடும் ஆர்வத்தோடும் செய்துகொடுத்தார் க்ள். சிலர் கௌரிகுண்டத்திலும் சிலர் கங்கையிலும் குளித்தோம். வழிபாடுகளை முடித்துக்கொண்டோம். முறைப்படிக் கேதார சிந்தனையும் திருமுறைப் பாராயணமும் நிகழ்ந்தன, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர் கள் 'எங்கு சென்றாலும் சிவசிவ ஒளிப்பதிவு-திருமுறை ஒலிப்பதிவு செய்து வைத்துவிடவேண்டும்; நாமிறந்தாலும் நம்முடைய ஒலி அங்கே சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கும்; வருவோர் புனிதமடையட்டும். ஆண்டவன் அருள் பெருகட்டும்' என்றார்கள்.

எங்களோடு வந்தவர் உணவு தயாரித்தார். உணவுகளை முடித்துக்கொண்டோம். முன்னறையில் இருந்த மலையாள அந்தணர் ஒருவர் எங்கள் நாக்குருசிக்கேற்பக் காப்பிப் பலகார வசதிகளைச் செய்து கொடுத்தார். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்கள் மேலே யாத்திரைக்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படி காசி ஏஜண்ட் திரு.கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இடத்துக்கு முந்தினோம்:

நம்முடைய ஊரிலே பேருந்தூர்தி புறப்படும் நேரத்தில் சென்று சீட்டு வாங்கி இடம்பிடித்து ஏறிக்கொள்வதுபோல இங்குச்செல்லமுடியாது. முன்னதாகவே நிலையத்துக்குச்சென்று பெயர் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அன்று பதிவாகும் பெயர்களை மாலையில் எல்லா உந்தூர்தி களும் வந்ததும் பரிசிலித்துச் சீட்டெழுதிவைப்பார்கள். அந்த நேரத்திலே சென்று பெற்றுக்கொள்ளவேண்டும். உந்தூர்தியில் முன் வகுப்பு, பின் வகுப்பு என்று இரண்டு பகுதிகள் உண்டு. ஓட்டுவோரின் பின்புறத்தில் உள்ள இடவரிசை முன்வகுப்பு; ஐந்தாறு பேர்களுக்குக் கிடைக்கும். அதற்குப் பின்னுள்ள இடவரிசைகள் முழுதும் பின் வகுப்பு. எங்களைப்போலக் கோஷ்டியாகச் செல்பவர்க்கு, ஒரே தொகுப்பாகப் போக உந்தூர்தி நிலையத்திலே சொல்லி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இந்த ஏற்பாடுகளை கல்யாணசுந்தரம்பிள்ளையே கவனித்துக் கொண்டார்கள். நாங்கள் ரிஷிகேசம் நகரிலுள்ள காட்சிகளையும் பிறவற்றையும் பார்த்து மகிழ்ந்தோம். உணவு தயாரிப்பதற்கான சிறு உதவிகளைக் கவனித்துக்கொண்டோம்.

உ
குருபாதம்

—: தருமபுர ஆதீன வெளியீடுகள் :—

எண்	புத்தகம்	விலை ரூ. அ. பை.	தபாற்செலவு ரூ. அ. பை.
1.	திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்)	3—8—0	1—5—0
2.	இரண்டாந்திருமுறை (காலிகோ)	5—0—0	1—8—0
3.	சமயபோதச்சொற்பொழிவுகள்	1—0—0	0-13—0
4.	பரமாணு புராணம்	1—4—0	0—9—0
5.	நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம்	1—8—0	0—9—0
6.	திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ)	13—8—0	2—4—0
7.	காமத்துப்பால் ,,	6—0—0	1—8—0
8.	திருவாசகம் ,,	2—0—0	0-14—0
9.	நால்வர் நான்மணிமாலை	0—4—0	0—4—0

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

கிடைக்குமிடங்கள் :

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்.
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

ஆதீன இசைப்புலவர், இசையரசு
திரு. M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள் பாடிய,
பாராயணத் திருமுறைப் பாடல்கள்

செட் ஒன்றுக்கு விலை	ரூ.	40—0—0
தபால், பாக்கிங் செலவு	ரூ.	6—-8—0

கிடைக்குமிடங்கள் :

1 காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்,
சீகாழி. தஞ்சாவூர் ஜில்லா.

2 தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்,
41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

Regd No. M. 4454. GNANASAMBANDAM.

உ

குருபாதம்

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய

சமயப் பிரசார நிலையத்தின்

இரண்டாவது ஆண்டு விழா

14—11—55 திங்கட்கிழமை

இந்தியஜனாதிபதி, கனம், டாக்டர்,

ராஜேந்திர பிரசாத் அவர்கள்

விழாவைத் தொடங்கிவைத்துத் தலைமை
உரையாற்றுவார்கள்.

ஆண்டுவிழாவைத் தொடர்ந்து

அறிஞர்கள் சொற்பொழிவுகளுடன்

ஸ்கந்தஷஷ்டித் திருநாட்கள் சிறப்பாகக்
கொண்டாடப்பெறும்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the